Koviloor Acadamy

வெளியீடுஎண் 232.

அன்பளிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய

சுவாமிகள் அவர்களின்

நான்காவது ஆண்டு

ஆட்சி அறிக்கை.

1948 - 1949.

Kmm09o6
A

Koviloor Acadamy

1621

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

உரு-வது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின்

நான்காவது ஆண்டு

ஆட்சி அறிக்கை

1948—1949

பசலி - 1358

Koviloor Acadamy

உ

குருபாதம்

உரு-வது மகாசந்நிதானம்

நான்காவது ஆண்டு

ஆட்சி அறிக்கை

நிர்வாகம்

இவ் வருஷத்தில் குடிகளின் தொல்லை எல்லை மீறியதாயிருந்தது. ஆனாலும்கிஸான் தலைவர்களின் தூண்டுதலின்பேரில் கஸ்பா தருமபுரத்துக்குடிகளில் ஒரு பகுதியார் பெருங் கிளர்ச்சிக்கு ஏற்பாடு செய்தனர். பல்லக்குத் தூக்குதல் போன்ற காரியங்களுக்கும்வர மனமில்லாதிருந்தனர். ஆதீனத்துக்குச் சொந்தமான குளங்களில் உத்தரவில்லாமல் பிரவேசித்து மீன் பிடிப்பது போன்ற அத்து மீறிய காரியங்களில் இறங்கிவிட்டனர். அதற்கு மேல் அதிகமாகக் கலகம் பரவாது ஆகவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துச் சுமுகமாக ஒரு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

Koviloor Acadamy

இவ்வாதீனத்திருக்கூட்டத்தில் திருவாரூர் ராவ் சாகிப் திருவேங்கட முதலியார் B. A., B. L., அவர்களைச்சேர்த்துக் கொள்ளப்பட்டது. திருக் கூட்டத்தில் சேர்ந்த பிறகு 'சொக்கலிங்கத் தம்பிரான்' என்று தீக்ஷா நாமம் சூட்டப்பட்டது. முதலியார் அவர்கள் திருவாரூரில் வக்கீலாக இருந்துவந்த போது முனிசிபல் சேர்மென் போன்ற பல பொதுத் தொண்டிலும் ஈடுபட்டு விளங்கியவர்கள். கிரமப்படி காசியாத்திரை முதலியன செய்துவந்து இப்பொழுது தக்ஷிணம் பிர்கா கட்டளை விசாரணையாக திருநெல்வேலி சிந்துபூந்துறையில் இருந்து வருகிறார்கள்.

வழக்கம்போல் ஆதீன சம்பந்தப்பட்ட தேவஸ்தானங்களில் அடியிற்கண்ட ஸ்தாபனங்களுக்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் முன் அறிவிப்பின்றிச்சென்று பார்வையிட்டுவந்தார்கள்.

1. திருக்குவளை (கோளிலி)
2. திருக்கடவூர்
3. தலைஞாயிறு
4. வேளூர்
5. சீகாழி
6. திருவையாறு
7. திருபுவனம்
8. கருங்குயில்நாதன்பேட்டை
9. மணக்குடி
10. குறுக்கை

Koviloor Acadamy

11. ஆச்சாள்புரம்
12. குத்தாலம்
13. உய்யக்கொண்டான்
14. பேரளம்

இவற்றையன்றி அடியிற்கண்ட இடங்களுக்கும் ஆதீனத்தலைமைக்காரியஸ்தர்கள் சென்று பார்வையிட்டு வந்தனர்.

1. திருமுல்லைவாசல்
2. திருப்பனந்தாள்

திருப்பணி

தெற்கு முகப்புப் பக்கம் மேல்மாடியிலிருக்கும் சுதைகள் மிகவும் பழுதாயிருந்தன. அதற்குமேல் உள்ள வெயில்மறைப்பு (Top) மேலே போடப்பட்டிருந்த மரம் கெட்டுப்போய்விட்டது. அவைகளைப் புதுப்பித்து வெயில்மறைப்புக்கு சிமண்டுஓடுபோட்டு வர்ணம்வைக்கப்பட்டது. அந்தப் பகுதியிலிருக்கும் மேல்மாடி (ஆளோடியை) Verandal சுவர் தரை பாகம் சிமிட்டியிட்டுப் பூசி வெள்ளையடிக்கப்பட்டது. அங்கு உட்புறத்திலும் சுதைப்பக்கத்திலும் மின்சாரவிளக்குகள் பொருத்தப்பட்டன. தெற்குப் புறத்தில் மாடி மேல்தளத்தில் நீலரச மணிவிளக்கு ஒன்றும் அமைக்கப்பட்டது.

திருமஞ்சனவீதியில் வீடுகளுக்கு அஸ்திவாரம் போட்டு மாரி கொள்ளவிடப்பட்டிருக்கிறது. கீழவீதி

Koviloor Acadamy

கீழ்ப்புறமுள்ள தென்னந்தோப்பில் கூரைவீடுகள் ஆட்குடியிருப்புக்குக் கட்டிவிடப்பட்டன. மேலவீதியில் ஆட் குடியிருப்புக்குக் கூரைவீடுகள் பலகட்டப்பட்டன.

ஞானபுரீஸ்வரஸ்வாமி கோவில் உள்கோவில் தளவரிசை செப்பனிடப்பட்டது. கோபுரத் திருப் திருப்பணிக்கு முகூர்த்தம் செய்யப்பட்டது. ஆனந்தபரவசர் கோவிலில் சுற்றித்தளவரிசையிடப்பட்டது. முன்புறம் கீத்துக்கொட்டகை அமைக்கப்பட்டது. நீலரசமணிவிளக்கும் போடப்பட்டிருக்கிறது.

முன்பு தேவாரப்பாடசாலையிருந்த கட்டடத்தில் ஆதீனம் கோவாபரேட்டிவ் ஸ்டோர்ஸ் வைக்க முன் அறைப் பக்கம் நிலைவைத்துக்கட்டியும் மளிகை வியாபாரப்பகுதியில் வலை அடைத்து கதவு போட்டும் ஓடுமாத்தியும் வேலைசெய்யப்பட்டது.

மேலவீதி சித்திவிநாயகர் ஆலயத்தில் முன்புறம் இரும்புக்கேட்டு முதலியன எண்ணெய் வர்ணம் வைக்கப்பட்டன.

கீழக்கோவில் என்னும் ஸ்ரீ தருமபுரீசுவரர் ஆலயத்தில் கிணற்று தலையீட்டை பழுதுபார்த்துக் கட்டைகட்டி விடப்பட்டிருக்கின்றது. உள்பிரகாரம் தலையீட்டுச்சாலவங்கள் ஒழுங்குசெய்து சிமிட்டி பூசப்பட்டன. ஆதீனத்திலுள்ள கச்சேரிகட்டில்

Koviloor Acadamy

காற்றுப்பந்தல் போடப்பட்டது. மேலே சீமை யோடு போடப்பட்டிருப்பதற்கு, Tiles போட்டு ஓடு போடப்பட்டது. மரப்பகுதி பூராவும் எண்ணெய் வர்ணம் தடவப்பட்டது.

மேல வீதியில் அஸ்திவாரம் போட்டு விடப்பட்டிருந்த இடத்தில் வீட்டைக் கட்டி பூர்த்திசெய்யப் பட்டது. அதனெதிரடியிலிருந்த கிணறு தலைமீடு, சுற்று மேடை கட்டி சிமிட்டியிடப்பட்டது. வடக்கு வீதியில் வீடுகள்கட்ட அஸ்திவாரம் போடப்பட்டு மாரிகொள்ள விடப்பட்டிருக்கிறது. மற்றும் உள் தோட்டம் நடப்பு, பங்களா பகுதியில் கீற்றுவிட்டு பழுதுபார்க்கப்பட்டன.

அடியிற்கண்ட வீடுகள் ஓடு மாற்றப்பட்டன.

1. மாயவரம் மகாதானத்தெரு 59-ஙெ. வீடு
2. நெல் கிட்டங்கி
3. மாட்டுக்கொட்டகை
4. கோவாபரேட்டிவ் ஸ்டோர்
5. தெற்கு வீதியிலிருக்கும் வீடுகள்
6. 57. ஙெ. வீடு
7. சேகர அட்டவணை குடியிருப்பு வீடு
8. கீழவீதி வீடு
9. வடக்குவீதியில் ஹோட்டல் வைத்திருக்கும்வீடு
10. மானேஜர்குடியிருப்பு வீடு

மேலவீதி வீடுகளில் கக்கூஸ் கட்டிவிடப் பட்டன. சின்னக்கடைத்தெருவில் ஒரு கடைக்கு

Koviloor Acadamy

கிலேக்கதவு பழுதுபட்டிருந்ததை எடுத்துவிட்டுப் புதிதாகப்போடப்பட்டது.

ஆதீனமுகப்புக்குத் தென்புறம் வலேயடைப்பு செய்திருக்கிற இடத்தில் மரப்பாகம், இரும்புபாகம் இவைகளில் வர்ணமடித்து ஆதீனவெளியீடுகள் எடுத்துவைக்கப்பட்டிருக்கின்றன. அதன் நுழைவின்மேல்பகுதியில் (Entrance க்குமேலே) சித்திரம் வரையப்பட்டது.

ஆதீனமடத்து முகப்புத்திருக்குளம்-தொண்டர் தீர்த்தத்தில் சென்ற வருஷம் வெட்டப்பட்ட இடத்துக்குத் தென்புறம் வடபுறம் பக்கச்சுவர்கள் கட்டி சிமிட்டி பூசப்பட்டது. மேற்கொண்டும் சென்ற வருஷம்போல் மேட்டில் மண்எடுத்து அதைக் கொண்டு காளவாய் போடச்செய்யப்பட்டன. குளம் வெட்டப்படுவதுடன் அதிலிருந்து வெளிப்படும் மண்ணை வீணே வெளியில் கொண்டுபோய்க் கொட்டாமல் செங்கற்களாக அறுத்து காளவாய் போட்டால் மற்ற கட்டிடவேலேக்கு உதவும் என்ற இருவிதத்திலும் உபயோகரமாக விருக்கும்படி வேலே செய்யப்படுகிறது.

சொத்து பரிபாலனம்

நிலம்கொள்முதல்: முன்பு காரைக்கால் சேத்தூர் கிராமம் குத்தகை வைத்திருந்த ராமய்யர் என்பவர் இறந்துவிட்டபடியாலும் வேறு சொத்து

Koviloor Acadamy

இல்லாமையாலும் ஷையாரிடமிருந்து வரவேண்டிய பாக்கிக்கு ஷையாருக்குச் சொந்தமான பெருந் தோட்டம் கிராமநிலம் 16 ஏ. 21 செண்டும், செதலப் பதியில் 1 ஏ. 84 செண்டும், ரூ. 5000 கிரயம் போட்டு வாங்கப்பட்டு பாக்கிக்கு ஈடுசெய்து கொள்ளப் பட்டது.

பராமரிப்பு: வழக்கம்போல் தென்னை முதலிய எல்லாத்தோப்புக்களும் கொத்தப்பட்டன.

நந்தவனம்: வழக்கம்போல் காலத்தில் செடி களை வெட்டிவிட்டும், எரு விட்டும், கொத்தியும் நல்ல நிலைமையில் பராமரிக்கப்பட்டது. மேற்கொண்டு ரோஜாப்பதியன்கள் வாங்கிப்போடப்பட்டன.

நந்தவன உபயோகத்துக்கு எலக்ட்ரிக் மோட் டார் பம்ப் ஒன்று வாங்கி வைக்கப்பட்டது.

உணவுப்பெருக்க இயக்கம்: வழக்கம் போல் இவ்வருஷமும் காய்கறிகள், கிழங்குவகைகள் முதலியன பயிரிடப்பட்டன. வயல் கரைகளிலும், திடல்களிலும் எள்ளு, பயறு, உளுந்து முதலிய தான்யங்கள் பயிரிடப்பட்டன. பசுந்தாள் உரம் டேஞ்சா, பில்லிப்பசரா முதலியன பயிர்செய்யப் பட்டன. கிடைகளும் கட்டப்பட்டன. கடலைப் பிண்ணாக்கு வாங்கி நிலங்களுக்கு உரமிடப்பட்டது.

அடியிற்கண்ட கிராமங்களில் நஞ்சை மராமத் துக்களும் வாய்க்கால்வெட்டுகளும் நடந்தன.

Koviloor Academy

மாரமத்து :

	நெல்.	
	நஞ்சை. மாரமத்து	வாய்க்கால் வெட்டு
	க. ம. ப.	க. ம. ப.
வெள்ளப்பள்ளம்	18. 6. 3.	4. 2. 0.
ஓலையாம்புத்தூர்	—	28. 8. 0.
கிடாரங்கொண்டான்	—	47 1. 2.
அச்சுதராயபுரம்	—	13. 1. 2.
மணக்குடி	—	1. 9. 0.
மேலவெளி காளவாய் பள்ளம்	34 0. 2.	
	52. 7. 1. —	94. 10. 0.
	147 - 5 - 1	

ரொக்கம் :

வெள்ளப்பள்ளம் கிராமம் ரூ. 231 - 4 - 8

பண்ணை சாகுபடி :-

மற்ற குடிகளும் ஊக்கமாக சாகுபடி செய்ய வேண்டிய அமானியில் அடியிற்கண்ட கிராமங்களில் நஞ்சைசாகுபடி செய்யப்பட்டது.

அச்சுதராயபுரம்,
மூங்கில்தோட்டம் } 11 வே. 10 மா.

மணக்குடியில் ஏக்கர் 1 செண்ட் 46 நிலத்தில் அமானியில் கரும்புசாகுபடி செய்யப்பட்டிருக்கிறது.

Koviloor Acadamy

தெற்குவெளியில் 6 ஏ. 11 செ. சவுக்கை பயிர் செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக ஆயில் மெஷின் பம்புசெட் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

தண்ணீர் இறைக்க டை எஞ்ஜின் Over haul செய்யப்பட்டது. இவ்வருஷமும் காலத்தில் மழையில்லாமல் புன்செய் தானியங்கள் நல்லபலனைத் தரவில்லை.

இஃதல்லாமலும் அச்சுதராயபுரம், கஸ்பா தருமபுரம், கீழிருப்பு, மூங்கில்தோட்டம், மன்னம்பந்தல் முதலிய கிராமங்களிலுள்ள புன்செய்ஸ்தலங்கள் வழக்கம்போல் குடிபடைகளுக்குப் பகுதிக்குக் கொடுத்து சோளம், கேழ்வரகு, மரவள்ளி, சக்கரைவள்ளி முதலிய உணவுப்பொருள்களும் காய்கறி வகைகளும் சாகுபடி செய்யச் செய்திருக்கிறது. குடிகள் தகராறு இருந்தபோதிலும் உணவுப் பெருக்க இயக்கத்தை உத்தேசித்துப் பழைய ரேட்டுக்கே குடிகளுக்கே அவைகள் சாகுபடிக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பண்ணை சாகுபடிக்கு 7 ஜோடி உழவுமாடுகள் வாங்கப்பட்டன.

குத்தகை:- கோடங்குடி குத்தகைதார் அந்த கிராமத்தில் ஏற்பட்ட கிஸான் கிளர்ச்சியினால் காலத்தில் சாகுபடி செய்யமுடியாது சிரமப்பட்டார். அவருக்கு வேண்டிய அளவு ஆள், விதை, தசுகூலி

Koviloor Acadamy

முதலிய சகலஉதவிகளும் செய்துகொடுத்து தரிசு தங்காமல் சாகுபடிசெய்ய உதவப்பட்டது. அப்படியும் அவரால் நிர்வாகம் செய்ய முடியாமலும், ஷை யார் சரிவர நடந்துகொள்ளாமலும் இருந்தபடியால் ஷை குத்தகையை ரத்து செய்துவிட்டு மறுபடியும் அடுத்த பசலியிலிருந்து குத்தகை விடப்பட்டது.

அடியிற்கண்ட கிராமங்கள் 1359ம் பசலியிலிருந்து குத்தகைக்கு விட ஏலம் நடத்தப்பட்டது. குத்தகை சம்பந்தமான விளம்பரங்கள் தினமணி, சுதேசமித்திரன், தினத்தந்தி பத்திரிக்கைகளிலும், பிரசுரம்செய்யப்பட்டன.

திருநெல்வேலி: சத்திரம் புதுக்குளம்

	ஏ.	செ.
கிராமம் புன்செய்	100.	55.

திருச்சி ஜில்லா:

	நன்செய்.		புன்செய்.	
	ஏ.	செ.	ஏ.	செ.
சோழமாதேவி	20.	5.		
குவளைக்கால்	7.	78.		
சிந்தாமணி	24.	04.		
மருதாண்டா குறிச்சி	14.	56.	7.	19.
ஆலத்தூர்	7.	16.		

Koviloor Acadamy

தஞ்சாவூர் ஜில்லா :—

	நஞ்சை.		புஞ்சை.	
	ஏ.	செ.	ஏ.	செ.
ஆலவேலி	331	69	16	82
பேலையூர்	12	53	—	38
மேமங்கலம்	36	51	—	18
மூக்காம்பூர்	4	65	—	26
ஆறுபாதி	4	66	—	—
ஷை	13	92	5	40
மாயூரம்	—	39	—	—
குத்தாலம்				
அத்தியூர்	398	49	13	42
ஓலையாம்புத்தூர்	118	79	—	—

வழக்கம் போல ஏல விளம்பரங்கள் அச்சிட்டு வழங்கப்பட்டன.

இவ்வருஷத்தில் சுயநலமுள்ள கிஸான் தலைவர் கிராமக்குடிகளைக் கலைத்து குத்தகை ஏலம் சரிவர நடத்தமுடியாமல் கிளர்ச்சி செய்து வந்தார்கள். H. R. E. போர்டுக்கு மனுக்கள் அனுப்பியும் கவர்ண்மெண்டு, போர்டு பிரசிடெண்ட் முதலியவர் களைப் பேட்டிகண்டும் குத்தகை போகாமல் இடைஞ் சல் செய்து வந்தனர். போர்டு பிரசிடெண்டவர்கள் பலதேதிகளில் விசாரணை செய்தும் ஆதீனத்துக் குள்ள சிரமங்களை எடுத்தும் சொல்லியபிறகு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் முடிவை

1621
Koviloor Acadamy

அங்கீகரித்தார்கள். அடியிற்கண்ட கிராமங்களில் அவ்வித சிரமங்கள் ஏற்பட்டன.

ஆலவேலி, திருநின்றவூர்.

வாகஞறி அங்கங்கள்

கால்நடை கொள்முதல்: ஆதீன பசுமடத்தில் கால்நடைகள் தண்ணீர் தொட்டிக்கு தண்ணீர் இறைக்க எலக்ட்ரிக் மோட்டார் பம்பு ஒன்று வைக்கப்பட்டது. ஆதீனமடத்தின் உபயோகத்துக்கு அடியிற்கண்டபடி கால்நடைகள் வாங்கப்பட்டன.

கறவை மாடுகள் 3

உழவு மாடுகள் — 7 ஜோடிகள்.

கறவை மறத்துப்போன 8 மாடுகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டன.

தேருக்குப் புதியதாக அச்சு தயார்செய்து போடப்பட்டது. ஆதீனமடம் உபயோகத்துக்கு அடிற்கண்ட சாமான்கள் வாங்கப்பட்டன.

1. பித்தளை வாணுசட்டி 10
2. எலெக்ட்ரிக் கடிகாரம் 1
3. பித்தளைத் தோண்டிகள் 3
4. வெள்ளிக் குத்துவிளக்குகள் 5
5. பூச்சக்கரகுடை 2
6. ருத்திராக்ஷ ஜபமாலை 2

Koviloor Acadamy

7. தேக்கமர பீரோக்கள் 2
8. பெஞ்சுகள் 2
9. ஊஞ்சல்பலகை 1
10. பல்லக்குகள்வைக்க ஸ்டாண்டுகள் 4

அடியிற் கண்டவைகளுக்கு உரை தைத்துப் போடப்பட்டன.

1. ஜரிகைக்குடை
2. ஜரிகைபன்னுங்கு

அடியிற்கண்ட சாமான்கள் பழுதுபார்க்கப்பட்டன.

1. வெள்ளிப்படிச்சட்டம்
2. பார வண்டிகள்
3. வெள்ளிரதம்
4. வெள்ளிப் பிதிலிகள்
5. ரிஷபவாகனங்கள்
6. வெள்ளி எடுபிடிகள்
7. வெள்ளி சாமரம்
8. வெள்ளி நாற்காலி சவாரி
9. வெள்ளி விபூதி வட்டகை
10. அபிஷேகப் பீடப்பலகை
11. Refrigerator

வெள்ளி சாமான்கள் மெருகிடப்பட்டன. பித்தளைப் பாத்திரங்கள் பழுதுபட்டிருந்தவைகளை

Koviloor Acadamy

பழுதுபார்த்து ஈயம் பூசவேண்டியவைகளுக்கு அவ்விதம் செய்யப்பட்டன.

வெள்ளிரதம் ரிப்பேர் செய்யப்பட்டதுடன் மரப்பாகங்களுக்கும் உருமானங்களுக்கும் வர்ணம் வைக்கப்பட்டது.

பொது சுகாதாரம்

தருமபுரத்தில் பொது சுகாதாரம் நல்ல நிலைமையில் பாதுகாக்கப்பட்டது. வழக்கம்போல வீதி சுத்தம் செய்யவும், கழிவுப்பொருள்களை அப்புறப்படுத்தவும் தோட்டிகள் வேலைசெய்தனர். தெருக்கள் அவ்வப்பொழுதும் புல்பூண்டுகள் எடுத்து சுத்தம் செய்தும் வைக்கப்பட்டன.

பொது ஜனங்கள் புழக்கமுள்ள சுவர்ப்புறங்கள் பூராவும் வெள்ளையடிக்கப்பட்டு, தார் பூசப்பட்டது.

மாயூரத்தில் கட்டப்படும் பெண்கள் குழந்தைகள் ஆஸ்பத்திரியில் மேற்கொண்டும் வடபுறம் வார்டுகள் பிரசவஅறை முதலியன கட்டிவிடப்பட்டிருக்கின்றன. இவ்வருஷம் இதற்காக ரூ.13,675 செலவாகியிருக்கிறது.

வழக்கம்போல விசேஷகாலங்களிலும், பிற நாட்களிலும் ஏழை மக்களுக்கும் பரதேசிகளுக்கும் அன்னமளிக்கப்பட்டது. சில சமயங்களில் தலைக்கு

Koviloor Acadamy

எண்ணையும் அரப்பும் கொடுக்கப்பட்டன. வஸ்திரங்கள் கூடச் சிலருக்கு வாங்கி யளிக்கப்பட்டன. குழந்தைகளுக்குத் தின்பண்டங்களும் வர்க்கான்னங்களும் அளிக்கப்பட்டன.

பிற உதவிகள்

அடியிற்கண்டவைகளுக்கு உதவி நிதி அளிக்கப்பட்டது.

1. வள்ளலார்கோவில் குருமூர்த்தி அபிஷேகம்
2. சேந்தங்குடி துர்க்கை அபிஷேகம்
3. சிதம்பரம் பொன்னம்பலத்தில் சிவராத்திரியின் போது சுற்றி எண்ணைசாத்த
4. நாச்சியார்கோவில்சனிப்பெயர்ச்சி
5. அருணாசலக்கவிராயர் ஆண்டுவிழா
6. புத்தூர் காந்தி ஜயந்தி
7. செட்டிநாடு பத்திரிக்கைக்கு ஜீவியசந்தா
8. மாயூரம் பிரம்மோத்சவ ருக்வேதபாராயணம்
9. திருமுல்லைவாயில் காந்திசிலை திறப்புவிழா
10. வடலூர் சன்மார்க்க உற்சவசாலை திருப்பணி
11. மகாத்மாகாந்தி ஞாபகார்த்த நிதி
12. மாயூரம் திருமுறைவிழா
13. மகாத்மாகாந்தி ஞாபகார்த்த தேசிய நிதி
14. சுவாமிமலை வள்ளிகல்யாண அன்னதானம்
15. பீஜப்பூர் ஜில்லா அகதிகள்
16. மங்கைநல்லூர் இராமலிங்கசுவாமி உத்ஸவம்
17. திருப்பூந்துருத்தி சப்தாவரண அன்னதானம்.

Koviloor Acadamy

18. திருப்பனந்தாள் மாரியம்மன் களியாட்டம்.
19. வழுவூர் கோவில் லக்ஷார்ச்சனை.
20. சிதம்பரம் பால்காவடி.

அடியிற்கண்ட கோவில் கும்பாபிஷேகங்களில் அஷ்டபந்தனமருந்து, பரிவட்டங்கள், சாமான்கள் நிதி உதவி முதலியவகைகளில் ஏதாவது ஒருவிதத்தில் உதவியளிக்கப்பட்டது.

1. சிவபுரம் கும்பாபிஷேகம், பரிவட்டம் இளநீர் முதலிய அபிஷேகப் பொருள்கள்.
2. திருச்சி ஜில்லா உத்தமர்கோவில் சம்ரோக்ஷணை.
3. ஆக்கூர் கும்பாபிஷேகம்
4. நன்னிலம் தாலூகா கடகம்பாடி மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் மருந்து.
5. சீகாழி தாடாளன்கோவில் கும்பாபிஷேகம்.
6. மாயூரம் நாஞ்சில்நாடு முத்தாச்சி அம்மன்கோவில் கும்பாபிஷேகம்.
7. திருப்பரங்குன்றம் கும்பாபிஷேகம்.
8. திருமழுவாடி கும்பாபிஷேகம்.
9. தில்லைவிளாகம் விநாயகர்கோவில் கும்பாபிஷேகம் மருந்து.
10. வடக்கம்பாடி கிராமம் மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் - மருந்து
11. பாபநாசம் தாலூகா ஒன்பத்துவேலி கும்பாபிஷேகம்.

Koviloor Acadamy

அடியிற்கண்ட ஸ்தாபனங்களுக்கு உதவிநிதி அளிக்கப்பட்டது.

1. குடந்தைச்சிவனடியார் திருக்கூட்ட ஆண்டுவிழா.
2. ஷை திருக்கூட்ட உபயோகத்துக்கு கூஜா 1.
   பெட்ரோமாக்ஸ் லைட் 1.
3. சென்னை தமிழ்த் திருநாள் புலவர்விருந்து.
4. சிதம்பரம் கோவில் சபை.
5. K. C. தியாகராஜன் அண்டு பார்ட்டி கப்.
6. தஞ்சை ஜில்லா நிருபர்கள் மகாநாடு.
7. சென்னை கம்பர் கழகம்.
8. மாயூரம் ஹிந்தி ஆதரவாளர் மகாநாடு.
9. தேரழுந்தூர் விஷ்ணு சகஸ்ரநாமசபா.
10. அகில பாரத ஆதிசைவ சமாஜம்.
11. மாயூரம் சர்வோதய சம்மேளன கமிட்டி.
12. தஞ்சை கலெக்டராபீஸ் ரிக்ரியேஷன் கிளப்
13. மன்னார்குடி தீவிர ஹிந்தி பிரசார கமிட்டி.
14. திருவாரூர் தமிழ்த்திருவிழா.
15. கிருஷ்ணசாஸ்திரிகள் Peoples' purse fund.
16. சென்னை சேக்கிழார் கழகம்,
17. தமிழ்நாடு முனிசிபல் எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர்கள் சங்க மகாநாடு, பழநி.
18. மன்னார்குடி நேத்தாஜிபடை ஆண்டுவிழா.
19. சிதம்பரம் சேக்கிழார் கழக ஆண்டுவிழா.
20. திருவாரூர் அநபாயன் ஆஸ்திகசங்கம்.
21. திருப்புறம்பயம் வணிக நாடகசபா.
22. கலாமோகினி.
23. மாயூரம் தியாகப்பிரம சங்கீத வித்யாசாலை.

Koviloor Acadamy

நூல் நிலையம்:

ஆதீன நூல்நிலையத்தில் புஸ்தகங்கள் இருக்கின்றன. பழய சஞ்சிகைகள், ஏட்டுப்பிரதிகள் வேறு இருக்கின்றன. மேலும் அதிக புத்தகங்கள் வாங்கிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பிற உதவிகள் :

மாயூரம் முனிசிபல் எல்லையிலுள்ள ஹைஸ்கூல்களில் சுதந்திரதின விழாவை ஒட்டி நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெறும் பள்ளிக்கூடத்துக்கு Rolling Shield ஒன்று தயார் செய்து அளிக்கப்பட்டது.

மாயூரம் நாஷனல் ஹைஸ்கூலில் தீ விபத்து ஏற்பட்டு சேதமேற்பட்டதற்கு உதவிநிதி அளிக்கப்பட்டது.

மாயூரம் தாலூகா மணல்மேடு உயர்தர கலாசாலைக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது.

காஞ்சீபுரம் ரெட்டியப்பட்டிசுவாமிகள்மாணவ விடுதிக்கு உதவிநிதி அளிக்கப்பட்டது.

தண்டலை ஆரம்பப் பாடசாலைக் கட்டிடநிதிக்கு உதவி அளிக்கப்பட்டது.

Koviloor Acadamy

கண்ணங்குடி வேதாந்த பாடசாலைக்கட்டிட நிதிக்கு உதவியளிக்கப்பட்டது.

திருநெல்வேலிபாப்பாங்குளம்கணபதிவித்தியா சாலைக் கட்டிடநிதிக்கு உதவி.

அடியிற்கண்ட பள்ளிக்கூடத்திலிருந்து மாணவர்கள் ஆதீன மடத்திற்கு excursion வந்து பார்வையிட்டுச்சென்றூர்கள். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

1. மாயவரம் முனிசிபல் ஹைஸ்கூல் மாணவர்கள் (Social study) சமூகப்படிப்புக்காக.

2. மாயூரம் நகரிலுள்ள ஆரம்ப பாடசாலை மாணவ மாணவிகள், ஆசிரியர்கள். Variety Entertainment ஒன்று வைத்துநடத்தி மகிழ்ந்தனர்.

இதில் பங்கெடுத்துக்கொண்ட மாணவர் மாணவிகளுக்கு மெடல்கள் வழங்கப்பட்டன.

திருக்குளப்பணி.

தருமபுர ஆதீன மடாலய முகப்பு ஞானதீர்த்தம் மேலும்சிறிதளவு பெரிதாக்கப்பட்டது.

Koviloor Acadamy

யாத்திரை.

அடியிற்கண்ட தலங்களுக்கு இவ்வருஷம் சென்று வழிபாடாற்றப்பட்டது.

1. திருக்கடவூர்.
2. திருவையாறு.
3. மாயூரம் சேந்தங்குடி துர்க்கை.
4. வள்ளலார்கோவில்.
5. பழனி.
6. சுவாமிமலை.
7. மதுரை.
8. அழகர் கோவில்.
9. திருப்பரங்குன்றம்.
10. சிதம்பரம்.
11. நல்லூர்.
12. திருப்புன்கூர்.
13. எட்டுக்குடி.
14. திருக்குவளை.
15. கொறுக்கை.
16. திண்டுக்கல்.
17. திருக்கொட்டையூர்.
18. ஸ்ரீரங்கம்.
19. திருவானைக்கா.
20. சமயபுரம்.
21. கொட்டையூர்.
22. திருபுவனம்.
23. திருவையாறு.

Koviloor Acadamy

24. குத்தாலம்.
25. வேளூர்.
26. சீகாழி.
27. ஆச்சாள்புரம்.
28. மணக்குடி.
29. கருங்குயில்நாதன்பேட்டை.
30. சிக்கல்.
31. கீவளூர்.
32. உய்யக்கொண்டான்.

மேற்கண்டவற்றில் பழநி, மதுரை, தில்லை தலங்களுக்குச் சென்று வழிபாடாற்றியது குறிப்பாகச் சொல்லவேண்டியனவாம்.

பழநி தரிசனம்—விமரிசனம்:

தருமபுர ஆதீன மகாசந்நிதானமவர்கள் 30—8—48 காலை பழநி யாத்திரைக்கு எழுந்தருளினார்கள். மாலை ஏராளமான பொருட்செலவில் தண்டாயுதபாணிக்கு அபிஷேக ஆராதனை நடந்தது. கோவில் அதிகாரிகளும் முன்னேற்பாட்டுடன் மகா சந்நிதானமவர்களை வரவேற்று உபசரித்தார்கள்; உடனிருந்து சிறப்பித்தார்கள். இன்னிசை வாணர்களைக்கொண்டு தலத்திருப்புகழ் திருவகுப்பு முதலாகிய முருகன் தோத்திரப் பாடல்கள் ஓதுவிக்கப்பெற்றன. அப்பாடல்கள் அடங்கிய 'பழநி தண்டாயுதபாணி தோத்திரங்கள்' என்ற ஆதீன வெளியீடும் அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது. வரவேற்பில் அந்நகர் திருப்புகழ்ப்பேரவை,

Koviloor Acadamy

சைவசித்தாந்தசபை இவைகளின் சார்பில் நல்லுரை ஒன்றும் வாசித்தளிக்கப்பெற்றது அது வருமாறு:-

வருக! வருக! அருண்ஞானப் பெருஞாயிறுகிய
எங்கள் ஞானதேசிக மூர்த்திகளே! வருக! வருக!

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத்தின் வரவால் எங்களுக்கு ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானே 'மைக்களமும், மான் மழுவும், மதிநதியும்' கரந்தருளி, இற்றையோர் அருளுருக் கொண்டு எம்மவர்கட் கருள்சுரப்பான் வேண்டிச் சிவ ஞானிகள் தவத்தியனைய கல்லாடையும் பொன்னனைய திரு மேனியும், தேசுடைச் சடைமௌலியும், புனித வெண் ணீறும், மாசிலாததோர் மணியணி மாலையும், கருணை பொழி திருமுகமும்: கண்டாரை வசப்படுத்தும் கனிந்த வாயழகும் பூசு நீறுபோல் உள்ளும் புனிதமும்,பெருமைதரு துறவோடு பிஞ்ஞகனார் மலர்த்தாள்கள் பிரியாத மனமும், முழுதொருங்கு திரண்டு சிவஞானதேசிக வடிவாய்க்கவினத் தோன்றி இன்றெழுந்தருளிய சிறப்பால் எங்கள் சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும், ஒருங்கு பெற்றவர்களாகி நிற்கின்றோம். இன் றெமக்கருள எளிவந்த நலத்தைப் பல்லாற்றானும் பரவிப் போற்றுவோம்.

இற்றை ஞான்று, சமய நிலையை ஓர்ந்து, "நிகரறு நற்சிவதரும சிவஞானத்தை நிறுத்திடுவோனிலும் உயர்ந் தோன் நிலத்தினில்லை, பகர்பரம சிவயோகி அவனே யாகும்" என்னும் திருவாக்கின்படி, சைவசமயப் பிரசாரத் திற்கென ஒரு பொறி வண்டியை யொல்லையிலுதவி

Koviloor Acadamy

நள்ளிருளென்றும், நண்பகலென்றும் நோக்காதெங்கும் நோக்கி நிற்கும் சிவதவச் செல்வரைச் சிவநெறி பரப்புவான் செல்லவிடுத்தும், 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்' தம்மையும் பாங்குபெற நிறுவியும், சிவநெறி புரக்கும் சீரிய செயலைச் செப்புதற்கெளிதோ? இத்துணை நலத்தால் எம்மவர்க்குறுபயன் எண்ணருஞ் சிறப்பின; இன்னுமெம்போல்வார் நவைநெறி நீங்கிச் சிவநெறி மாண் பெலாம் செவ்விதினுணர இன்றருள் சகடம்போல் எண்ணிலவழங்கிச் சிவநெறிபரப்பும் செம்மையாளரைச் செல்லிடமெங்குஞ் சேரவிடுத்தும் பழைய வைதிக சைவம் பரப்பிப் பன்னெடுங் காலம் பன்னருஞ் சிறப்பாற் பாரிடை வைகி, பசுபதிப் பெயரிய ஒருதனிப் பரமன் திருவருள் வழங்கிச் செவ்வனே திகழ்க; வாழ்க தருமை; வாழ்க வாழ்கவே.

பழநி, ஸ்ரீ ஞானதண்டயுதபாணி சுவாமி திருவருள் யாண்டும் முன்னின்றருள்க.

அன்று காலை, போகும் வழியிலுள்ள திண்டுக்கல் தேவஸ்தான அதிகாரிகள், அவ்வூர் நகராட்சி ஆணையாளர், அரச வழக்கறிஞர், பெருநிலக்கிழார்கள் உள்ளிட்டபலரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்களை வரவேற்று, வரவேற்பிதழ் ஒன்றும் வாசித்தளித்தார்கள். அதுவருமாறு:—

அன்பு கனிந்த மகா சந்நிதானம் அவர்களது அரிய திருவடி மலர்கட்கு,

தேவரீர் அடியேங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, சிறிது நேரம் எங்கள் நகரில் தங்கி, எங்களை மகிழ்விக்கவும்,

Koviloor Acadamy

தேவரீரது திருவருள் தோற்றத்தாலும் அருள்நிறை மொழியாலும் எங்களை உய்விக்கவும். எதிர்பாராதவாய்த்த பெரும் பேற்றினை உன்னி உளம் பூரித்து உவகை பூக்கின்றோம்.

கடவுள் உணர்ச்சி குறைந்துபோய், மக்கள் மனம் மீகாமன் அற்ற தெப்பம்போல் புயற்கடல் வாழ்வில் புரண்டு அலைந்து, உய்ய வழிதெரியாது உழன்றுவரும் இக்காலத்திலே, திருவருள் உணர்ச்சி நாடெங்கும் நிலவ தேவரீர் அரிய பல அருட்செயல்கள் ஆற்றிவருவது அறிந்து அகமிகக் களிக்கின்றோம். ஊர்தோறும் சுற்றி உண்மை நெறி விளக்கம் புரிந்துவர, திருவார் திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களது தலைமையில் அண்மையில் தேவரீர் அமைத்தருளியுள்ள திருநெறி பரப்பும் உந்தூர்தி எங்கள் நகரத்தில் மூன்று நாட்கள் அருள் ஞானச் செய்திகளை அள்ளி வழங்கி எங்களை இன்பத்தில் ஆழ்த்தியது. தற்காலத்துக்கு மிகத்தேவையான இந்த ஏற்பாட்டைச் செய்தருளிய தேவரீரது அரும்பெரும் சிறப்பைத் தமிழ்நாடு என்றென்றும் நன்றியோடு ஏத்திப் புகழ்ந்து பாராட்டும் கடப்பாடுடையதாகும்.

இது குறித்து எங்கள் விண்ணப்பம் ஒன்றுண்டு. உந்தூர்தியின் உள்ளிருந்தபடியே பேசியும், பாடியும், இசைத்தட்டு இட்டும், ஒலிபெருக்கும் வசதியை ஊர்தியில் அமைக்கவேண்டியிருக்கிறது. அந்த அமைப்பு இல்லாமல் செய்திபரப்பல் அவ்வளவு செம்மையாக நடவாது. அப்படி இப்போதுள்ள ஊர்தியில் ஏற்பாடு செய்வதோடு அதைப்

Koviloor Acadamy

போன்ற பல ஊர்திகள் விரைவில் அமைத்துத் தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்கும், குறைந்தது மாதம் ஒரு முறையாவது சென்று சென்று திருநெறிச் செய்திகளைப் பரப்பி மக்கள் அருள் நலம் பூணுமாறு செய்தருளும்படி மிகப் பணிவோடு வேண்டிக்கொள்ளுகிறோம்.

எங்கள் நகரத்திற்கும் திருத்தருமபுர ஆதீனத்திற்கும் என்றும் அகலாத் தொடர்பு இருந்துவருமாறு தேவரீர் கடைக்கணித்தருளக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வாழ்க திருநெறி! வளர்க அருள்வளம்! வெல்க நல்லன!!

ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத் திருமண மண்டபத்தில் உபசாரக் கூட்டம் நடைபெற்றது. மகா சந்நிதானமவர்கள் ஸ்ரீ அபிராமி அம்மையைத் தரிசித்துப் பழநிக்கு எழுந்தருளினார்கள். மறுநாள் 24-வது ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமாகிய குருமூர்த்திகளின் நினைவாகப் பழநியில் அன்னதானம் செய்விக்கப்பெற்றது.

மதுரை தரிசனம்.

(ஞானசம்பந்தம் செய்திச்சுருக்கம்.)

13—12—48 சோமவாரம்; காலையில் மதுரையிலே பரபரப்பு காணப்பட்டது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத்தின் விஜயத்தை முன்னிட்டு, மதுரை முனிசிபாலிடியார் எங்குமே நீர்தெளிக்கச்செய்து

Koviloor Acadamy

தூய்மை ஏற்படுத்தினர். போலீஸார்களும் நகரெங்கும் மூலை முடுக்குகளிலெல்லாம் பந்தோபஸ்து செய்து மகாசந்நிதானத்தின் வழிபாட்டிற்கும் மக்கள் வழிபாட்டிற்கும் நன்கு உதவிசெய்தனர். எங்குமே தூய்மை; ஆலயத்திலும் தூய்மை; எங்கும் சிவமணம். எல்லா மூர்த்திகளுக்கும் திருவாபரணங்களும் பரிவட்டங்களும் சாத்தப்பெற்றிருந்தன. அடிக்கடி அதிர்வெடி முழக்கம்.

8¾-மணி இருக்கும். பலர் தெற்கு ஆவணிமூல வீதியை நோக்கி மிகவேகமாக நடந்துசென்றார்கள். அவ்வீதியிலுள்ள ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன மடாலய முகப்பில் மகரதோரணங்கள் வாழை முதலியன கட்டி அழகு செய்யப்பட்டிருந்தது. அங்குக் கூட்டமும் அதிகமாகத்தானிருந்தது. அத்துடன் யானைபோல் மோட்டார்வாகனம் ஒன்று குறுக்கே நின்றுகொண்டிருந்தது. அதன் மீது 'தருமபுர ஆதீன மடாலய சமயப்பிரசார வாகனம்' என்று எழுதப்பட்டிருந்தது. அதனுளிருந்த ஒருவரைக்கண்டு விசாரித்தேன். அவர் 'தருமையாதீன மகாசந்நிதானம் இம்மடத்தில் எழுந்தருளப்போகிறார்கள். கோவிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனை நடக்கிறது; மாலை, பிரசங்கங்களும் நடக்கும்' என்று விபரமாகச்சொல்லி, மேலும் 'இப்பொழுது மணி 9 அல்லவா? இந்நேரம் திருவாப்புடையார் கோவிலுக்கு எழுந்தருளியிருப்பார்கள். அங்கு தரிசனம் முடித்துக்கொண்டு அழகர்கோவிலுக்கும் சென்று சுவாமிதரிசனம்

Koviloor Acadamy

செய்து வருவார்கள்; எப்படியும் இங்குவர சுமார் 11-மணியாகும்' என்று மிகப்பொறுமையுடனே சொன்னார். என் மனம் பரபரந்தது. அதற்குள் சிலர் அந்தவாகனத்தில் ஏறிக்கொள்ள, வாகனம் வேகமாகச் சென்றுவிட்டது. சந்நிதானத்தைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணத்தால் நானும் மிக வேகமாகத் திருவாப்புடையார் கோவிலுக்குச் சென்றேன்.

9¼ மணியிருக்கும்; அங்கும்கூட்டம். சந்நிதானமும் காரில்வந்து இறங்கினார்கள். கோவில் நிர்வாகஸ்தர் உள்ளிட்ட பல பெருமக்களும் முன் எச்சரிக்கையாகவே நின்று சுவாமிகளை வரவேற்றார்கள். நான் முன்கண்ட பிரசாரவாகனமும் அங்குநின்றது. வழிபாடு முடிந்தது. சந்நிதானம் அழகர்மலைக்குப் புறப்பட்டுவிட்டார்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் விஜயத்தை முன்னிட்டு, அழகர் கோவிலிலும் எல்லா மூர்த்திகளுக்கும் அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தன. வரவேற்புக்குக் குறிப்பிட்டிருந்த ஆலயத்தின் முன்னிடமாகிய பதினெட்டாம்படிகறுப்பர் சந்நிதியிலேயே கோவில் நிர்வாகிகள் கோவில் மரியாதையுடன் வரவேற்றார்கள். எடுபிடிகள் சூழ மேளவாத்தியங்கள் முழங்க அழைத்துச் சென்றார்கள். முறைப்படி எல்லாசந்நிதியிலும் தரிசனம்செய்து வைத்தார்கள்.

Koviloor Acadamy

மதுரையில் திருஞானசம்பந்தர் ஆதீன மகா சந்நிதானமவர்கள், நித்திய பூஜையை முடித்துக் கொண்டு, வருகின்ற சந்நிதானத்தை வரவேற்கின்ற முறையில் எழுந்தருளியிருந்தார்கள். எங்கும் எடுபிடிகள். முகப்பில் பூர்ணகும்பங்கள். மேள வாத்திய கோஷ்டியார் ஒருபுறம். ஓதுவாமூர்த்திகள் ஒருபுறம். அரஹர முழக்கத்துடன் கூடியிருந்தது கூட்டம்.

மணி 11 இருக்கும்; வரவேற்கத் தயாராக இருக்கும் அவர்களோடு பக்கத்து நின்றுகொண்டிருக்கும் என்னைப்போன்ற பல அன்பர்கள் அவ்வழிநடையில் ஓடிக்கொண்டிருக்கும் பலகார் சத்தத்தைக் கேட்டுக் கேட்டுத் தரிசனம் செய்யும் ஆவலுடன் எழுந்திருப்பதும், 'இது அவர்கள் வருகின்ற கார் அல்லவே' என்று அமர்வதுமாக இருந்தார்கள். மணி 11½க்கு ஒரு கார்வந்து நின்றது. அதிலிருந்து பெருமக்கள் இறங்கினார்கள். அடுத்த நிமிஷமே மற்றொருகாரும் வந்தது. தருமை மகாசந்நிதானம் இறங்கினார்கள். மேளங்கள் ஒலித்தன; சின்னங்கள் ஊதின. அன்பர்களின் அரஹர முழக்கமும் உண்டாயிற்று. மடத்து வாசலிலேயே மதுரை சந்நிதானம் மாலைசூட்டி வரவேற்றார்கள். வரவேற்ற அவர்களுக்குத் தருமை சந்நிதானம் பொன்னாடை சாத்தினார்கள். திருஞானசம்பந்தர் ஆதீன ஆத்மார்த்த பூஜாமூர்த்திக்கு வழிபாடு நடந்தது. தரிசனத்தை முடித்துக்கொண்டு, பூஜைமடத்தின் முன்னிலையில் அலங்கரிக்கப்பட்டிருந்த இருவேறு

Koviloor Acadamy

ஆசனங்களில் இரண்டு மகாசந்நிதானங்களும் அருட்கொலு வீற்றிருந்தார்கள். ஆதீன ஓதுவா மூர்த்திகளால்,

"சென்றகாலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்றெழுந்தருளப் பெற்றபேறிதனுல்
எற்றைக்கும் திருவருளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்தியநாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்ரெளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்"

என்ற பாடல் ஓதப்பட்டது. 'மங்கையர்க்கரசியார் கூட அன்று ஒரு ஞானசம்பந்தரையே கண்டார். இன்று ஏககாலத்தில் நாம் இருஞானசம்பந்தரைக் கண்டு தரிசிக்கும் பேறுபெற்ருேமே! இதுவன்ருே நாம் பெற்றபயன்' என்றுபலர் பேசிக்கொண்டார்கள். புகைப்படமும் எடுக்கப்பட்டது. யாவரும் திருநீறு பெற்றுக்கொண்டார்கள். மதுரை ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்கள் சார்பில் மதுரை ஆதீன ஓதுவாமூர்த்திகள் வரவேற்பிதழ் வாசித்தார்கள்.

மதுரைப் பெருங்குடிமக்களும் தேவஸ்தான உத்தியோகஸ்தர்களும் ஒன்று சேர்ந்து தமது மகிழ்ச்சியை ஒருபாமாலை வாயிலாகத் தெரிவித்துக் கொண்டார்கள். இரு மகாசந்நிதானங்களுக்குமாக,

Koviloor Acadamy

தருமபுர ஆதீனக் கல்லூரிச் சார்பில் ஆதீனத் தமிழ்ப்பேராசிரியரால் ஒரு வாழ்த்துப்பா வாசிக்கப்பெற்றது. அதனைச்சார ஆசிரியர் திரு. நல்லசிவன் பிள்ளை அவர்களும், பாலகவி திரு. வே. இராமநாதன் செட்டியாரவர்களும் வாழ்த்துரை வாசித்தார்கள். பின் தருமை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்கள்,

சிவநேயச் செல்வர்களே !

மதுரையாதீனம் மிகப்பழமையானது. ஞானசம்பந்தப்பெருமான் புறச்சமயப் பகைவெல்ல எழுந்தருளிய படைவீடுபோன்றது. அடியாரிடத்து, அட்டமூர்த்தங்களுள் ஒன்றான தீ சென்று பற்றாது என்பதனை மெய்ப்பித்த இடம். மந்திர ராஜாவாகிய பஞ்சாக்ஷரத்தின்முன் ஏனையமந்திரங்கள் வலிமை எட்டுணையும் செல்லாது என்பதனை விளக்கிக்காட்டிய இடம். இப்படிப்பட்ட இடத்தில் சோமவாரதரிசனத்தை முன்னிட்டு எழுந்தருளினோம். நம் ஆதீனத்திற்கு ஆலவாய்ச்சொக்கர் என்றும் உரிமையானவர். அவரே அருட்பெருக்காலெழுந்தருளி ஆட்கொண்டு நித்தியானுக்கிரகம்பண்ணும் அவிச்சின்ன பரம்பரை எங்கள் ஆதீனம். ஆதலால் இந்தக் கார்த்திகைச் சோமவார நன்னாளில் வழிபட எழுந்தருளியது எவ்வளவு இன்றியமையாத கடமையும் பொருத்தமுமாம் என்பதை எண்ண அவர் திருவருட்பெருக்கின் தகுதி ஆனந்தப் பெருங்கடலில் எம்மை ஆழ்த்துகின்றது. மற்றொரு விசேஷச் செய்தி; ஞானசம்பந்தப் பெருமானுடைய

Koviloor Acadamy

அவதார ஸ்தலமான சீகாழியும் முத்திஸ்தலமாகிய ஆச்சாபுரமென்னும் நல்லூர்ப்பெருமணமும் நமது ஆட்சியின்கீழ் இருக்க அவர்கள் இடையில் விஜயஞ் செய்து வெற்றிகண்ட இடத்திற்கும் தரிசனத்திற்காக வந்திருப்பது திருவருள் வாய்ப்பினை விளக்கிக்காட்டும் நிகழ்ச்சியில் ஒன்று. ஞானசம்பந்தப்பெருமானே சென்றசென்ற இடங்களிலெல்லாம் சிவச்சோதி நேரேகாணப்பெற்றவராயிருந்தும் அநுபூதிச் செல்வராயிருந்தும் மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாத் தொழுவதற்கு நடந்துகாட்டுவார்களானால் உயிர்களுக்குச் சிவாலய வழிபாடும் சிவதீர்த்தஸ்நானமும் எவ்வளவு இன்றியமையாதன பாருங்கள். ஆலவாய்ச்சொக்கன் அருள் உங்கள் அனைவருக்கும் ஆவதாகுக.

என்று ஆசியுரை வழங்கினார்கள்.

மணி 12-30. மதுரை தேவஸ்தான நிர்வாக அதிகாரி ஸ்ரீகுமரன்நாயர் அவர்களால் தேவஸ்தான மரியாதைக்களோடு வந்து விபூதி பிரசாதம் பார்க்கப் பட்டது. 1 மணிக்கு மாகேசுவரபூஜையும் நடை பெற்றது.

கனம், பி. டி. இராஜன், கரு. முத்து. தியாகராச செட்டியார், தாயப்ப பிள்ளை, கல்யாணசுந்தரம் பிள்ளை, பரமசிவமுதலியார், சங்கரலிங்க முதலியார், கந்தசாமி செட்டியார் உள்ளிட்ட பேரன்பர்கள் பலரும் வந்து மகா சந்நிதானத்தைத் தரிசித்துச் சென்றார்கள்.

Koviloor Acadamy

மணி 3½. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் மாரியம்மன்கோயில் தெப்பக்குளத்திற்கு விஜயம் செய்து விட்டு, அடியார் கூட்டத்துடனும் அன்பர்களுடனும் திருப்பரங்குன்றத்திற்கு எழுந்தருளினார்கள். ஏராளமான கூட்டம். அங்கும் கோயில் மரியாதையோடு வரவேற்பு நடந்தது. பரங்குன்றநாதர் சந்நிதியை யடைந்ததும் திருமுருகாற்றுப் படைதிருப்புகழ் முதலியன ஓதப்பெற்றன. விசேஷ ஆராதனையின் முடிவில் ஆதீன வெளியீடாக அச்சிட்ட 'திருப்பரங்குன்றத் திருப்பதிகங்கள்' என்னும் புத்தகமும் அன்பர்கட்கு வழங்கப்பட்டது.

பின்னர், சிவகங்கைஜமீனைச்சேர்ந்த இம்மையில் நன்மைதருவார் கோயிலுக்கும், இடைக்காடர் பிணக்குதீர்த்த பெருமான் எழுந்தருளியிருக்கும் பழையசொக்கநாதர் கோயிலுக்கும், எழுந்தருளி வழிபாடு முடித்துக்கொண்டு திருமடாலயத்திற்கு எழுந்தருளினார்கள்.

இரவு மணி 8. மீனாக்ஷியம்மன் கோபுரவாசலில் ஏராளமான கூட்டம். கனம் P. T. ராஜன், கோயில் நிர்வாக அதிகாரி ஸ்ரீ குமரன்நாயர், ராமச்சந்திர அய்யர், பரமசிவ முதலியார், K. K. மேனன், சங்கரலிங்க முதலியார், மதுரை தெற்குவட்டார போலீஸ் அதிகாரி பாலகிருஷ்ண உடையார், லக்ஷ்மணபெருமாள் நாயுடு, திவான்பகதூர், கிருஷ்ணன் நாயர், லக்ஷ்மண அய்யர், H. R. E. போர்டு அஸிஸ்டெண்டு கமிஷனர், சர்க்கரைசேர்வை

Koviloor Acadamy

உள்ளிட்டபல பெருமக்கள் மகாசந்நிதானங்களின் வருகையை எதிர்நோக்கி நின்றூர்கள். மடத்து முகப்பிலும் கூட்டம் அதிகமாகவே இருந்தது. இரு சந்நிதானங்களும் ஒருசேர நின்று வழிபாடு செய் யும் காட்சி யாவர்மனத்தையும் கசியச்செய்யு மல்லவா?

மணியும் 8½. இரு சந்நிதானங்களும் கோபுர வாயிலையடைந்தார்கள். கோயில்மரியாதைகளுடன் வரவேற்போடே தலவிநாயகரை வணங்கிக்கொண்டு அம்மையார் சந்நிதியை யடைந்தார்கள். அதற்கு முன்னமேயே அங்கு ஆதீன ஓதுவாமூர்த்திகள் மீனுட்சியம்மன்பிள்ளைத்தமிழ் பாராயணம் செய்து கொண்டிருந்தார்கள். பாடல்களைக்கேட்டுப் பரவசப் பட்டு நின்ற மெய்யன்பர்களின் திருக்கூட்டக்காட்சி குமரகுருபரர் திருமலைநாயகன் பேரவையில் பெருங் கூட்டத்தில் பிள்ளைத்தமிழ் படித்த காட்சியை நினைவூட்டிற்று. அன்று போலவே அம்மையும் பிள்ளையாக இருந்து கேட்பது போலத்தான் இருந்தது. சந்நிதானங்கள் சந்நிதியடைந்ததும் பாராயணமும் நிறுத்தப்பட்டது. ஆராதனை தொடங்கி நடத்தப்பெற்றது. தலவரலாற்றுச் சிறப்புக்குறிப்புடனும் அழகிய படங்களுடனும் அச்சிட்ட மதுரைத் திருப்பதிகங்கள் என்ற ஆதீன வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பட்டது.

ஆலவாய்சொக்கரின் திருச் சந்நிதியிலும் ஆராதனை வழிபாடு, ஆதீன ஓவாமூர்த்திகள்

Koviloor Acadamy

திருவெம்பாவைப் பதிகப் பாராயணத்துடன் நிறைவேறியது. அச்சிட்ட திருவெம்பாவைத்திருப்பதிகம் என்ற புத்தகமும் வழங்கப்பட்டது. பின்னர் ஒவ்வொரு சந்நிதியிலும் வழிபாடு முடித்துக்கொண்டு மடாலயத்திற்கு எழுந்தருளினார்கள். மணியும் 11 இருக்கும். யாவருக்கும் உணவு அளிக்கப்பட்டது. பூவுலகிற் சிவலோகம் என்று பேசுகின்றபுராணக் கூற்றும் உண்மைதான் என்பதை யாவரும் உணர்ந்தனர்.

பொதுவாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களது மதுரை விஜயம் வெற்றிகரமாக முடிவுபெற மதுரை திருஞானசம்பந்தராதீன மகாசந்நிதான மவர்களும் சர். பி. டி. ராஜன், பசுபதி முதலியார் பரமசிவ முதலியார், சங்கரலிங்க முதலியார், குமரன் நாயர், சுந்தரேச பட்டர், நகராண்மைக் கழகத்தார், கலெக்டர், உதவி கலெக்டர், பால கிருஷ்ண உடையார், சர்க்கரை சேர்வை உள்ளிட்ட பலபிரமுகர்களும் மற்றுமுள்ள அன்பரும் தாமாக உற்சாகமாக எடுத்துக்கொண்ட பெரு முயற்சியும், சிவகங்கை சமஸ்தானத்தாரின் ஊக்கமும் உதவி செய்தன. மதுரைக்கு எழுந்தருளுவது தெரிந்த சென்னை அறநிலையப்பாதுகாப்புக் கழகத்தலைவர் T.M. சின்னையாப் பிள்ளை அவர்களும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களை உரியமரியாதைகளோடும் உபசரிக்கும்படி நிர்வாக அதிகாரிகளுக்கு எழுதியிருந்ததும் பாராட்டத்தக்கது.

Koviloor Acadamy

சிதம்பர தரிசனம்.

சிதம்பரம் தரிசிக்க முத்திதரும் தலம். ஆனந்தக்கூத்தரின் திவ்யதரிசனம் காணக்காணப் பேரின்பம் அளிப்பது. அண்ணலார் தமக்களித்த மெய்ஞ்ஞானமே ஆன அம்பலமும், உண்ணிறைந்த ஞானத்தெழும் ஆனந்த ஒருபெருந் தனிக்கூத்தும் கண்ணின் முன்புறக் களிப்பொடும் போற்றினர் ஞானசம்பந்தப் பிள்ளையார். 'மூர்த்தி அம்பலக் கூத்தனதுருவே' என்று உறுதி கூறியவர் குமர குருபரர். காசிசென்று எவ்வாறு மீள்வேன் என்று கவன்ற இவருக்கு 'தில்லைக்கேனும் சென்று வருக' என்று ஆணையருளினர் தருமையாதீன நான்காவது குருமூர்த்திகள். ஆகவே தில்லை காசிக்குச் சமம் என்று கூட அவர்கள் கருதி இருந் தார்கள் என்பது புலனாகும். அத்தகைய சிறந்த தலப் பெருமானைத் தரிசிக்கவேண்டுமென்ற விருப் பம் தருமையாதீன மகா சந்நிதானங்களுக்கு ஏற் படுவது இயல்பே. ஆதலின் இப்பொழுது மகா சந்நிதானமாக விளங்கி வருகின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்குத் திருவருள் வாய்ப்பால் அவ்விருப் பம் இனிது நிறைவேறும் சந்தர்ப்பம் கிடைத்தது. 30—1—49 என்று நாளும் குறிப்பிடப்பெற்றது.

முன்னேற்பாடு.

ஆதீன ஏற்பாடு: மதுரைத் தலவரலாறு வெளி யிட்டதுபோல, 'சிதம்பரம்' என்ற ஒருநூலும் வெளி

Koviloor Acadamy

யிடத் திருவுள்ளங் கொண்டார்கள். அதன்படி வெளியிடங்களுக்குஞ் சென்று தலவரலாற்றுக்கு வேண்டிய குறிப்புக்கள் தயார் செய்யப்பட்டன. மகா சந்நிதானம் தில்லையில் எங்கு தங்கியிருப்பார்கள் எந்தெந்த காலங்களில் எங்கெங்குசென்று வழிபாடாற்றுவார்கள் என்பதையறிய விரும்பிய மக்களுக்கு உதவியாக யாத்திரைத் திட்ட விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது. அபிஷேக காலங்களில் யார்யார் எந்தெந்த சந்நிதிகளில் இருந்து கவனிக்க வேண்டும் என்பதற்கு ஒரு பட்டியலும் தயாரித்துச் சிப்பந்திகளுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது.

நகரமக்கள் ஏற்பாடு: திருவாள்ர்கள் மார்க்கண்டம் பிள்ளை, கல்யாணம் பிள்ளை, முத்துகிருஷ்ண பிள்ளை முதலிய அன்பர்களும் ஆதீனத்திற்கு வந்து தில்லை தெரிசனத்துக்கு எழுந்தருள வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டார்கள். மற்றும் தல அன்பர்கள் 'பதினுயிரங்கொடுத்தாலும் பார்க்கமுடியாத காட்சி' 'தில்லை வாசிகளுக்கு அரிய சந்தர்ப்பம்', 'காணத்தவருதீர்கள்' என்ற மகுடமிட்ட பல துண்டுப் பிரசுரங்கள் மூலம் எல்லா மக்களுக்கும் அறிவுறுத்தினர்கள். சில இடங்களில் குருஞானசம்பந்த வருக!' தருமைக்கரசே வருக! என்று எழுதப்பட்ட வளைவுகள் கட்டப்பட்டிருந்தன.

அரசியலதிகாரிகள் ஏற்பாடு: தில்லைவிஜயத்தில் முனிசிபல் சபையார்களும் ஹெல்தாபீஸர் உள்

Koviloor Acadamy

ளிட்ட பல அதிகாரிகளும் பங்கெடுத்துக்கொண்டனர். அதன்பயனுக நகரெங்கும் தூய்மையாக்கப் பட்டது. நீர் தெளிக்கப்பட்டது. சுகாதாரமருந்து எங்கும் தூவப்பட்டது. கூட்டங்களைப் பாதுகாப்ப தற்காகப் போலீஸ் அதிகாரிகளும் ஆங்காங்கு நின்று பணிபுரியத் தயாராக இருந்தனர்.

செட்டிநாட்டரசர் ஏற்பாடு: திரு. ராஜா ஸர். அ. முத்தையா செட்டியாரவர்கள் மகாசந்நிதானத் தின் யாத்திரையை அறிந்து தில்லைத் தெற்குவீதி யிலுள்ள தமது விடுதியில் மகாசந்நிதானம் எழுந் தருளியிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய் வித்தார்கள். அத்துடன் விஜய தினத்தன்று மாகேசுரபூஜையும் தாமே செய்துவைக்க வேண்டு மென்றுகருதி, தமது காரியஸ்தரை அனுப்பி, அதற்காவனவும் செய்துவைக்குமாறு பணித்திருந் தார்கள். மேலும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் பல்கலைக்கழகத்தையும், பார்வையிட வேண்டிய தற்கு ஆவன செய்யக் கழகத்துணைவேந்த (Vice-Chancellor) ருக்குத் தந்திமூலம் செய்தி அனுப்பி யிருந்தார்கள்.

முதல்நாள் நிகழ்ச்சி:

29—1—49 ஸ்திரவாரம் காலை சிதம்பரத்தி லிருந்து தீக்ஷிதர்கள் கோயில் மரியாதையுடன் ஆதீனத்திற்கு வந்து மகா சந்நிதானத்தைக் கண்டு சென்றார்கள். அன்பர் கல்யாணம் பிள்ளை அவர்

Koviloor Acadamy

களும் வந்திருந்தனர். தில்லையில் திருமுறை விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் ஆதீனத்திலிருந்து எடுபிடிவிருதுகளும் யானைகளும் அனுப்பி வைக்கப்பட்டன. உத்திரவின்படி ஆதீன தேவஸ்தான ஓதுவார்களும், ஆதீனப்பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களும் பணிபுரியச் சென்றனர்.

30—1—49 ஞாயிற்றுக்கிழமை

காலை 6 மணி. சிதம்பரம் ஆலயத்தில் அதிர்வெடி முழக்கம். சூரியோதயத்தைக் காண இருக்கின்ற நகர மக்கள் இப்போது ஞானசூரியனையும் காணப்போகின்றோம் என்று பெருமிதத்துடன் இருந்தனர். நிகழ்ச்சியிற் குறிப்பிட்டிருந்தபடி சிலர் தில்லைக்காளி கோயிலிலும் கூடியிருந்தனர். சூரியன் மெல்ல மேலெழுந்தான். மகாசந்நிதானமும் காளிகோயிலுக்கு எழுந்தருளித் தரிசனம் செய்தார்கள். வழிபாடு முடிந்ததும், ராஜா ஸர் அவர்களின் விடுதிக்கு எழுந்தருளினார்கள். அங்குச் செட்டிநாட்டரசர் பிரதிநிதிகள் மேளவாத்தியத்துடன் மாலை சூட்டி வரவேற்றார்கள். மகாசந்நிதானம் அவ்விடுதியில் அமைக்கப்பட்டிருந்த கொலுவிலமர்ந்து, உபசாரம் பெற்று, யாவர்க்கும் திருநீறு வழங்கினார்கள். தீக்ஷிதர்களும் முறைப்படி அருளிப்பாடு கண்டு சென்றார்கள். ஆலயத்தில் மூர்த்திகளுக்கெல்லாம் அபிஷேகம் தொடங்கி நடத்தப்பெற்றன.

Koviloor Acadamy

மணி 8. விடுதியிலிருந்து மேளவாத்திய முழக்கத்துடன் தெற்குக் கோபுரவாயிலின் வழியாகச் சுவாமி தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள். கோபுரவாயிலிலும் தீக்ஷிதர்கள் எதிர்கொண்டு மலர்மாலை சூட்டி வரவேற்க முக்குறுணி விநாயகர், சிவகாமி துர்க்கை, பாண்டியநாயகம், நவலிங்கம் ஆகிய மூர்த்திகளை வழிபட்டுக்கொண்டு மேல்புறவாயிலாக உட்பிராகாரத்தை அடைந்தார்கள். அங்கிருந்து வலமாக நால்வர், தக்ஷிணாமூர்த்தி, அறுபத்துமூவர், திருமூலட்டானர் ஆகியோர்களை வழிபட்டுப் பேரம்பலத்தின் வாயிலாக ஆனந்தக் கூத்தர் திருச்சபையை யடைந்தார்கள். பஞ்சாக்ஷரப்படியைச் சமீபித்தவுடன் தீக்ஷிதர்கள் அங்கும் மலர்மாலை சூட்டி உபசரித்தார்கள்.

மணி 11. இரண்டாங்கால அபிஷேகம் ஆரம்பமாயிற்று. பால் 1008 சேர். மற்றைய சாமான்களும் அப்படியே அதிகமானதால் ஆராதனைகாலமும் காலங் கடந்தது. அபிஷேககாலத்தில் தேவார பாராயணத்துடன் ஆதீனப்பாடசாலை ஆகமப் பகுதி மாணவர்களின் வேதபாராயணமும் நிகழ்ந்தன. பேரம்பலத்தின் முன்பு திருவீழிமிழலை சகோதரர்கள், திருவிடைமருதூர் வீருசாமி. செம்பொன்னார்கோயில் கோவிந்தசாமி ஆகியோர்களின் நாதசுரக்கச்சேரி நடைபெற்றது. மகா சந்நிதானமவர்கள் தில்லைவாழந்தணர்களுக் கெல்லாம் உயர்ந்த ஆடை, திருநீற்றுப்பை, திருக்கை வழக்கம் ஆகியவைகள் வழங்கினார்கள். அபிஷேகம்

Koviloor Acadamy

முடிந்து தீபாராதனையும் தொடங்கப்பெற்றது. தரிசனம் முடிந்தது.

பின்னர், தில்லைக் கோவிந்தராஜப் பெருமாள் தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள். அங்கு அதன் டிரஸ்டி உள்ளிட்ட பூஜகர்கள் யாவரும் எதிர் கொண்டு உபசரித்து, ஆலய சம்பிரதாயப்படி சுவாமி தரிசனம் செய்வித்தார்கள். தரிசனம் முடிந்தவுடன் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் விடுதிக்கு எழுந்தருளினார்கள். மாகேசுவரபூஜை சிறப்பாக நடைபெற்றது. ஆலயத்திலுள் தீக்ஷிதர்களுக்கும் அறுசுவை உணவு அளிக்கப்பட்டது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தி லிருந்து வைசான்ஸலர், ரிஜிஸ்டார், தமிழ்ப்பேராசிரியர்கள் உள்ளிட்ட யாவரும்வந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைத் தரிசித்து, பல்கலைக் கழகத்தின் வெளியீடுகளைக் காணிக்கையாகச் செலுத்தி, பல்கலைக்கழகத்திற்கும் எழுந்தருளிப்பார்வையிடவேண்டும் என்று ராஜா ஸர் அவர்களிடமிருந்து செய்திவந்திருப்பதாகவும் விண்ணப்பித்தார்கள்.

மணி 7-30. மகாசந்நிதானமவர்கள் பல்கலைக் கழகத்திற்கு எழுந்தருளினார்கள். இவ்வருகையை முன்னிட்டு அங்கு யாவரும் தத்தமிடங்களில் தயாராகவே இருந்தார்கள். வைசான்ஸலர் Dr. S. G. மணவாளராமானுஜம், ரிஜிஸ்டார் திரு சச்சிதானந்தம் பிள்ளை, தமிழ்ப்பேராசிரியர், Dr. A. சிதம்பரநாதன் செட்டியார், ஏனைய புலவர்கள்

Koviloor Acadamy

இசைப்பகுதி ஆசிரியர்கள் ஆகிய யாவரும் உடனிருக்க மகாசந்நிதானமவர்கள் பார்க்க வேண்டிய இடங்களையும் பார்வையிட்டார்கள். தமிழ்ப்பகுதியின் சார்பில் Dr. A. C. செட்டியார் அவர்கள் மாலை சூட்டி வரவேற்றார்கள். இசைப் பகுதியில் மாணவ மாணவிகள் இசை விருந்து அளித்தனர். மகாசந்நிதானமவர்கள் எங்கும் பார்வையிட்டு விடுதிக்கு எழுந்தருளினார்கள்.

இரவு மணி 8-30. மகா சந்நிதானமவர்கள் அனுஷ்டானாதிகளை முடித்துக்கொண்டு மேலைக் கோபுர வாயில் வழியாகத் தெரிசனத்திற்கு எழுந்தருளினார்கள். மேல வீதியிலுள்ள திருவாதிரை மடத்தின் சார்பில் வித்வான் திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் அம்மடத்தின் முன்னர் பூர்ணகும்பங்கள் வைத்து உபசரித்து வாழ்த்துப்பா சமர்ப்பித்தனர். கோபுரவாயிலைச் சார்ந்ததும் ஆடூர் திரு. கணபதிப் பிள்ளை அவர்கள் தில்லைத் திருமுறைக் கழகத்தின் சார்பில் பூர்ண கும்பங்கள் வைத்து வரவேற்றுபசரித்து வாழ்த்துப்பாவும் அளித்தனர். இரண்டாம் பிராகார மேலைக்கோபுர வாயில் வழியாகவே மகா சந்நிதானமவர்கள் நடராஜப்பெருமான் திருச்சபையையடைந்தார்கள். இரண்டாங்காலபூஜை தொடங்கி நடைபெற்றது. பின்னர் அர்த்தசாம தரிசனமும் முடிந்தது. தீக்ஷிதர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தைப் பேரம்பலத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு

Koviloor Acadamy

பொதுவார்கள் சபை கூடிற்று. சபையின் சார்பில் மகாசந்நிதானத்திற்கு மாலைசூட்டிப் பொன் ஆடை போர்த்தி உபசாரஞ்சொல்லிப் பாராட்டினார்கள். அந்தப் பாராட்டுரைக்குப்பதில் அளிக்குமுகத்தான் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் வழங்கிய உரை வருமாறு:—

மெய்யன்பர்களே!

தில்லை அருள் நிறைந்த இடம். தில்லையில் வாழ்பவர்கள் அனைவருமே நடராஜப்பெருமானைக் காழி ஞான சம்பந்தப் பெருமானுக்குக் காட்சியளித்தனர். அக்காட்சி இன்றைக்கு எமக்கும் சித்தித்தது பரமேஸ்வரனுடைய ஸ்வரூபத்தை நன்கு தெரிவிப்பன வேத சிவாகமங்களும் தேவார திருவாசகங்களுமே. இந்தத் தென்னாட்டில் பல சிவாலயங்கள் நிறைந்திருக்கின்றன. சிவாலயங்களுக்குள்ள பெருமை எல்லாம் திருமுறைகளாலேயே. திருமுறைகள் யாவும் தில்லை நடராஜப் பெருமானுடைய சிறப்புக்களையே அறிவிக்கின்றன அங்கங்கு தில்லை வாழந்தணர்களாகிய உங்கள் பெருமையும் பேசப்படுகின்றன. திருமுறைகளுக்கு நாம் உயர்வு அளிக்கவில்லையானால் நமக்குநாமே உயர்வளிக்க நாணியவர்களாவோம் திருமுறையில் வேதசாரமான கருத்துக்கள் அறிவிக்கப் பெறுகின்றன. வேதமே திருமுறை; திருமுறையே வேதம். கோயிலைச்சாத்திய தொண்டு வேதம் செய்தது; திறந்த தொண்டு திருமுறைசெய்தது என வேதாரண்யம் இன்றைக்கும் விளக்கிக்கொண்டிருக்கிறது. ஆதலால் மறைகளுங்கூட முறைகட்குப் பின்புதான். மறைகள் விளக்கம் பெறுவது திருமுறைகளாலேயே.

Koviloor Acadamy

திருமுறைகளில் ஒன்ருகிய பெரியபுராணம் நடராஜப் பெருமான் எடுத்துக்கொடுத்த 'உலகெலாம்' என்ற முதலை வைத்துக்கொண்டு பாடப்பெற்றது. சேக்கிழார்க்குள்ள தில்லைப்பற்றைப் பாருங்கள். கூத்தப்பெருமான் கொடுத்த உலகெலாம் என்ற முதலை பதினுன்கிடங்களில் வைத்து அழகுபடுத்தியிருக்கிருர். நடராஜப்பெருமானுடைய திருவருள் வாய்ப்பினுலேயே இந்நூல் எழுந்தது; இனிது முடிகிறது; என்பதனைக் காட்ட இறுதியிலும் 'நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்' என்று முடித்தார்கள்.

தில்லைவாழ்ந்தணர் மரபிலே அவதரித்து மெய்கண்ட பரம்பரையிலேவந்த மறைஞானசம்பந்த சிவாசாரியார்களிடத்தில் அருளுபதேசம்பெற்ற உமாபதி சிவாசாரிய சுவாமிகள், சிவம் திருமுறைகளில் விளங்குவதை உணர்ந்து கோயில் என்னும் தில்லையையே முதலாவதாக வைத்துத் தலமுறை தொகுத்ததோடு, சேக்கிழார் புராணத்தையும் பாடியருளினுர்கள்.

உணர்ந்தார்க்கு உணர்வரியோனுகிய தில்லைச் சிற்றம்பலத்தொருத்தன் ஆணை திருமுறைகளையும் ஞான சாத்திரங்களையும், சிற்சபையில் தன்பக்கத்தே வைத்துப் போற்றியது. ஒரு ஞானசாத்திரமாகிய திருக்களிற்றுப் படியாரைப் பஞ்சாக்ஷரப்படியில் இருமருங்கும் உள்ள யானை, துதிக்கையால் எடுத்துக் குஞ்சிதபாத நிழலில்- அருள் நிழல்படக்கூடிய இடத்தில் வைத்தது இவற்றை எல்லாம் எண்ணிப்பாருங்கள்.

திருமுறைகளை, சைவசித்தாந்த சாத்திரங்களை நாம் சரியானபடி போற்றுவிட்டால் நடராஜப்பெருமானுடைய

Koviloor Acadamy

திருவருளை நிராகரித்த தாகுமல்லவா! ஆதலால் 'கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்' என்றும், 'எரியோம்பும் சிறப்பர்' என்றும் பலஇடங்களில் திருமுறை களிலேயே சிறப்பிக்கப்பட்ட நீங்களே, சேக்கிழார் பெரிய புராணத்தை இயற்றுதற்கு இடமாய ஆயிரக்கால்மண்டபத் தில் பெரியபுராணப் பிரசங்கம் செய்யவேண்டும்; நீங்களே அதற்குத் தகுதியானவர்கள். திருமுறைகளையும் நீங்களே பஞ்சாக்ஷரப்படியின் பக்கத்தில் நின்று பூஜாகாலங்களில் ஓதவேண்டும். மறையோதும் வாயே முறையோதும் வாய்ப் புடையது. திருமுறை உற்சவமும் நீங்களேசெய்யவேண்டும். நீங்களே கோஷ்டியாக இருந்து திருமுறைகளைப் பாரா யணஞ்செய்துகொண்டு முன்வரவேண்டும். உங்களுக்கு ஈஸ்வர கடாக்ஷம் மிகுதியாக இருக்கிறது. நீங்கள் அடுத்த ஆண்டிற்குள் அத்தகைய முயற்சியில் வெற்றிபெறுவீர்கள் என்று எண்ணுகிறோம். ஆனந்த நடராஜருடைய திருவுள்ள மும் இதுவே.

கூட்டம் முடிவுற்றபின் தீக்ஷிதர்களும் உடன் வர ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாமந்நிதானமவர்கள் இரண்டாம் பிராகாரக் கீழக்கோபுர வாயிலின் வழியாக வெளிப் பிராகாரம் வந்து வலமாகத் தெற்குக்கோபுரவாயி லின் வழியாகத் தெற்குத் திருவீதியினை யடைந்து விடுதிக்கெழுந்தருளினார்கள்.

சிதம்பர யாத்திரை நினைவாக அச்சிட்ட சிதம்பரம் என்னும் ஆதீன வெளியீடும் அன்பர் கட்கு வழங்கப்பட்டது.

Koviloor Acadamy

ஆதீன உபயம்:

ஸ்ரீமந் நடராஜப்பெருமான் அபிஷேகங் கொண்டருளுவதற்கு, சுமார் ரூ. 6000 பெறுமானமுள்ள தங்க அபிஷேககலசம் ஒன்று, ரூ. 125. பெறுமானமுள்ள வெள்ளிக்கலசமொன்று ஆகிய இரண்டும் அளிக்கப்பட்டன.

காந்திநினைவுநாள்:

உலகம் போற்றும் உத்தமராக விளங்கிய பெரியார் மகாத்துமாகாந்தி அடிகளின் சிரார்த்த தினம் 30-1-49 ஆதலின் அவ்வடிகளின் நினைவாக ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. உலகப் பொதுநூலாகிய திருக்குறளில் அரசியலார் பாடத் திட்டப்படி அமைக்கப்பெற்றதும், நான்காம் உயர் வகுப்புக்குரியதுமான எண்பது குறளுக்குப் பத வுரை, கதை முதலியன எழுதுவித்து, திருக்குறள் - கதைகள் என்ற பெயருடன் ஆதீனவெளியீடாக அச்சிட்டு அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

பிரசாரம்:

திருவையாறு, திருவாசகமணி. திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்களைக் கொண்டு அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் 31-1-49 அன்று 'முடிந்த முடிபு' என்பதுபற்றி ஓர் ஆங்கிலச் சொற்பொழிவு செய்விக்கப்பட்டது.

Koviloor Acadamy

திருமுறைவிழா:

திருநாரையூரில் அவதரித்து ஸ்ரீ பொல்லாப் பிள்ளையார் உணர்த்த உணர்ந்த நம்பியாண்டார், இராஜராஜனுடன்வந்து திருமுறை எடுத்த இடமாகிய நால்வர் சந்நிதியிலேயே திருமுறைகளைவைத்து அலங்காரஞ்செய்யப்பட்டது. 9மணிக்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் நால்வர்சந்நிதியடைந்ததும் ஆசாரியமூர்த்திகளுக்குத் தீபாராதனைநடந்ததோடு திருமுறைகளுக்கும் தீபாராதனை செய்யப்பெற்று, திருமுறைப்பாராயணத்துடன் திருமுறை விழா தொடங்கப்பெற்றது. தொடக்கத்தில் வைசான்ஸலர், ரிஜிஸ்டார், தமிழ்ப்பேராசிரியர், புலவர் பெருமக்கள் ஆகியோர்களும் உடனிருந்து சிறப்பித்தனர். பாராயணத்தோடு அங்கிருந்து திருமுறைகளை எழுந்தருளச்செய்துகொண்டு வலமாகவே ஸ்ரீ நடராசப்பெருமான் திருமுன்பு கொண்டுவந்து வைக்கப்பட்டது. பன்னிருதிருமுறைகளோடு தலப்பதிக முழுவதுமே பாராயணஞ்செய்யப்பட்டது. சுமார் 1-மணிவரையும் நிகழ்ந்தது. மாலை 8-30 மணிக்கு மீண்டும் ஆரம்பமாயிற்று. அங்கிருந்தபடியே எழுந்தருளச் செய்துகொண்டு பிராகாரத்தில் வலமாகக்கொண்டுவரப்பட்டது. திருமுறை காட்டிய விநாயகர் சந்நிதியை (இரண்டாம்பிராகார மேலைக் கோபுரவாயிலை) அடைந்ததும் மகாசந்நிதானமவர்களும் வந்து கலந்துகொண்டார்கள். அவர்கள் உடன்வர நால்வர் சந்நிதியில் கொண்டு

Koviloor Acadamy

போய்வைத்துத் திருமுறைகள், திருப்புகழ், பிள்ளைத் தமிழ் முதலியன ஓதித் தீபாராதனை செய்து, தொடங்கிய இடத்திலேயே விழாவும் முடிக்கப் பட்டது. திருமுறைப்பாராயணம் செய்த அனைவருக்கும் மகாசந்நிதானமவர்கள் திருக்கைவழக்கம் வழங்கினார்கள்.

பெருமக்கள்:

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து வைஸ்சான்ஸலர், ரிஜிஸ்ட்ரார், தமிழ்ப்பேராசிரியர், தமிழ்ப் புலவர்கள், விஞ்ஞான ஆசிரியர்கள், திருவாளர்களான மார்க்கண்டம்பிள்ளை, கல்யாணம் பிள்ளை, கல்யாணசுந்தரநாடார், ஆரூர் கனகசபைப் பிள்ளை, முனிசிபல் சேர்மன், டிப்டிகலெக்டர், தாசில்தார், முனிசிபல் கமிஷனர், இஞ்சினீயர், ஹெல்தாபீஸர், முனிசிபல் மானேஜர், பழனியப்ப முதலியார், சாதுசாமி, ஆச்சாள்புரம் வெங்கடேசம் பிள்ளை, படக்கடை முத்துகிருஷ்ணம் பிள்ளை, சோமாஸ்கந்தபிள்ளை, தண்டபாணிபிள்ளை, பெருமாள்கோயில் டிரஸ்டி.

பாராட்டு:

யாத்திரை சிறப்புற நடைபெறுதற்கு ஆடலரசின் திருவருள் ஓர்புறமிருப்ப, செட்டிநாட்டரசர் முயற்சி, நகரத்திலுள்ள அரசியல் அலுவலாளரின் ஊக்கம், மார்க்கண்டம் பிள்ளை கல்யாணம் பிள்ளை

Koviloor Acadamy

போன்ற அன்பர்களின் ஆதரவு, பொதுமக்களின் அன்பு ஆகியன பாராட்டத் தக்கதாயிருந்தது. மற்றும் தில்லைவாழந்தணர்கள் அனைவரும் ஒன்று கூடியிருந்து ஆவன செய்ததும், கடைசியாக மகா சந்நிதானத்திற்கு உபசாரஞ் சொல்லப் பேரம்பலத்தில் சபைகூட்டியதும், விடுதிவரையில் தாங்களும் உடன்வந்து சிறப்பித்ததும் அன்பர்கள் உளமாரப் பாராட்டத்தக்கதொரு நிகழ்ச்சியாகும்.

மற்றும் இவ்யாத்திரையில் தருமபுர ஆதீனக் கட்டளை தீக்ஷிதருக்கு ஆதீனச் செலவில் கோயில் சம்பிரதாயப்படி பூசை எழுந்தருளச் செய்து கொடுத்து, அவரையும் அம்பலவாணரைப் பூசை செய்யும் முறைக்கு உரிமையாக்கிப் பொன்னாடை அளித்தது குறிப்பிடத்தக்கதாம்.

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சிக்கு எழுந்தருளியாகி வழிபாடுகள் நடத்தப்பட்டன. ஏழைகளுக்கு எண்ணெ அறப்பு வழங்கப்பெற்றன. மத்தியானம் விருந்தும் அளிக்கப்பெற்றது. காலையிலிருந்து சமயப்பிரசாரமும் நடைபெற்றது.

எல்லையிலேயே காரைக்கால் பிராந்திய மேலதிகாரிகள் கோவில் மரியாதைகளுடன் வரவேற்றுபசரித்தார்கள். மாலையில் திரும்புகாலிலும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தைப் பேட்டிகண்டு வழிஅனுப்பினார்கள்.

Koviloor Acadamy

எங்கும் அடக்கமான முறையில் காரிலேயே சென்று வழிபாடாற்றி வந்தார்கள்.

விசேஷவழிபாடுகள்-

அடியிற்கண்ட தலங்களில் லக்ஷார்ச்சனைகள் நடத்தப்பெற்றன.

1. திருநள்ளாறு (லக்ஷார்ச்சனை, லக்ஷதீபம்.)
2. சேந்தங்குடி துர்க்கையம்மன் ,,
3 புள்ளிருக்கு வேளூர்
   ஸ்ரீ வைத்தியநாதஸ்வாமி ,,
   ஸ்ரீ வாலாம்பிகை ,,
   ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி ,,
4. ஸ்ரீ ஞானபுரீஸ்வரஸ்வாமி லக்ஷார்ச்சனை. லக்ஷதீபம் ஏகதின லக்ஷார்ச்சனை திருமுறைஉற்சவம்.
5. வள்ளலார்கோவில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி.
6. திருவாரூர் சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி.
7. சீகாழி திருஞானசம்பந்தர்
8, திருக்கடவூர்.

திருநள்ளாறு லக்ஷார்ச்சனை முடிவுக்கு, திருநள்ளாற்றுக்குப்பரிவாரங்களுடன் எழுந்தருளியாகியிருந்து எல்லோருக்கும் எண்ணை அறப்பு வழங்கியும் விருந்தளித்தும் வழிபாடாற்றி வந்தனர். காரைக்கால் பிராந்திய அதிகாரிகள் பலரும்வந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் வரவேற்பிலும் வழிபாட்டிலும் கலந்து கொண்டார்கள். சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

Koviloor Acadamy

மேலக்கோவிலென வழங்கும் ஸ்ரீ ஞானபுரீஸ்வரஸ்வாமி ஆலயத்தில் ஒரே நாளையில் லக்ஷார்ச்சனை நிகழ்த்தப்பட்டது.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதராலயத்தில் ஸ்ரீ ஸ்திர சுந்தரிக்கும், திருவாரூரில் ஸ்ரீ தியாகராஜராலயத்திலுள்ள சித்தீச்சரம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கும், லக்ஷார்ச்சனைகள் சிறப்புற நடத்தப்பெற்றன.

பொதுவாக இவ்விதம் நிகழ்த்தப்படும் விசேஷ வழிபாடுகளுக்கு எல்லாம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் நேரில் விஜயம் செய்து வழிபடுவது வழக்கம்.

நவராத்திரி காலத்தில் தினம் தேவி மகாத்மியப் பாராயணமும் நடத்தப்பட்டது. அடியிற் கண்ட விசேஷ வழிபாடுகளும் நடத்தப்பட்டன. துர்க்கா சகஸ்ரநாம வழிபாடுகள்.

1. மேலக்கோவில் ருத்ரஜெபஹோமம்.
2. கந்தசஷ்டியில்—ஆறுபடை வீடுகளிலும் அபிஷேக அர்ச்சனை வழிபாடுகள்
ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் ஆறுநாட்களிலும் உபவாசமிருந்து சஷ்டிமுடிவில் பாரணை செய்து ஏழைகளுக்கு விருந்துமளித்தார்கள்.
3. சுவாமிமலையில் அபிஷேக ஆராதனைகள்.
4. தில்லைக்காளி அபிஷேக ஆராதனைகள்.
5. மகாலெக்ஷ்மி யாகம் அபிஷேக ஆராதனைகள்.

Koviloor Acadamy

6. பாசஹூர் அபிஷேக ஆராதனைகள்.
7. வள்ளலார்கோவில் குருமூர்த்தி.
8. ஞானபுரீஸ்வரருக்கு பஞ்சமுகார்ச்சனைகள்.
9. சுவாமிமலை திருச்செந்தூர் தலங்களில் ஷண்முகார்ச்சனைகள்.
10. கடலூர் ஸ்ரீ சம்மாரமூர்த்தி அபிஷேகம்.
11. திக்பாலகயாகம், ஜபம்.
12. கொட்டையூர் அபிஷேகம்.
13. திண்டுக்கல் ஸ்ரீ அபிராமி அம்மன் கோவில் வழிபாடு.

நிலையீட்டில்பணம்:

இவ்வருஷத்தில் ரூ. 10,000 கும்பகோணம் கோவாப்பரேட்டிவ் சென்ட்ரல் பாங்கில் பணம் போட்டுவைக்கப்பட்டது.

இவ்வருஷத்தில் போஸ்டல் சேவிங்ஸ் பாங்கில் கணக்கு துவக்கப்பட்டது.

கட்டளைகள்:

1. சிதம்பரம் அபிஷேகக்கட்டளை.
2. நெல்லை பால் கட்டளை அன்னதானம்.
3. செம்பொனார்கோவில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி சாயரட்சை கட்டளை
4. சிவசைலம் மடம்.

Koviloor Acadamy

5. பாபநாசம் அன்னதானம்
   ஷை கோவில் கட்டளை.
6. ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீகாந்தீஸ்வர மடம்
   விநாயகர் பூஜை.
7. மௌன மடம் மாகேஸ்வர பூஜை.

முதலியன வழக்கம்போல் நடத்தப்பட்டன.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் மாதஜன்ம நக்ஷத்திரத்தில் சென்ற வருஷம்போல அடியிற் கண்ட தலங்களுக்கு ஆதீன ஓதுவாமூர்த்திகளை அனுப்பி அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப் பட்டன. அவ்வத்தலப்பதிகங்கள் அச்சிட்டு வழி பாட்டுக் காலத்தில் பாராயணம் செய்து அன்பர் களுக்கு வழங்கப்பட்டன.

1. திருவியலூர்.
2. திருக்கொட்டையூர்.
3. திருஇன்னம்பூர்.
4. திருப்பாதிரிப்புலியூர்.

ஆதீனவித்வத் கோஷ்டியில் அடியிற்கண்ட வித்துவான்களுக்கு சிறப்புக்கள் வழங்கி பட்டங் களும்வழங்கிச் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள்.

1. திருமதி K. B. சுந்தராம்பாள், "ஏழிசை வல்லபி"
2. திருமதி N. C. வசந்தகோகிலம், "கானசூடா மணி"

Koviloor Acadamy

3. திரு. M. K. தியாகராஜ பாகவதர் "ஏழிசைச் செல்வன்"

திருச்சி வானொலி கோஷ்டியார் குருபூஜை காலத்தில் வந்திருந்து கோஷ்டிகானம் வைத்த தற்கு, தலைவர்க்குச் சிறப்புக்கள் வழங்கி வெள்ளிக் கோப்பை வழங்கப்பட்டது.

சமூகத்தொண்டு:

ஆதித்திராவிட மாணவ மாணவிகளுக்கு வழக்கம்போல புத்தகங்கள் வாங்கி வழங்கப்பட்டன. அரசாங்கத்தாரால் மாயவரத்தில் நடத்தப்பட்ட கிராம முன்னேற்ற சங்கப்பயிற்சி வகுப்புமுடிவில் வைத்த தேர்வில் பரிசுகள் வழங்கப்பட்டன. அந்தப் பயிற்சியாளர்களைத் தருமபுரத்திற்கு வரவழைத்துச் சிற்றுண்டி வழங்கி உபசரித்ததோடு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அப்பயிற்சியாளருக்கு அளிக்கப்பட்ட ஒவ்வொருபயிற்சியின் விபரத்தை யும் கேட்டும் ஆட்டங்கள் முதலியவற்றைப் பார்த் தும் மகிழ்ந்தார்கள்.

கூட்டுறவு பண்டகசாலை:

ஆதீன சம்பந்தப்பட்ட சிப்பந்திகளும், குடி மக்களும், ஸ்தாபனங்களும், தங்களுக்குத் தேவை யான பண்டங்களை மாயூரம் சென்று வாங்கிவர வேண்டியிருந்தது. அதிலும் கட்டுப்பாடுகள் உள்ள

Koviloor Acadamy

அத்யாவசியப் பொருள்கள் கிடைப்பதரிதாயிற்று. இதனால் பலரும், துன்புறுவதுகண்ட ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஆதீன சம்பந்தப்பட்ட எல்லாஸ்தாபனங்கள், சிப்பந்திகள் எல்லாமாகப் பங்குசேர்ந்து கூட்டுறவுமுறையில் ஒருபண்டகசாலை அமைக்க அனுமதித்தார்கள். அதற்கு இடமும் மற்றும் எல்லா உதவியும் தந்தருளிப் பலசரக்கு, ஜவுளி, ஷாப் சாமான்கள் எல்லாம் கிடைக்கக் கூடியதாக வசதிசெய்து கொடுத்தார்கள். இதனால் லேசாகத்தருமபுரத்திலேயே எல்லாப்பண்டங்களும் கிடைப்பது வசதியாயிற்று. பெரிய ஸ்தாபனங்களையும் இங்கு சாமான்கள் வாங்கும்படி உத்தரவு செய்திருப்பதால் மாதா மாதம் ஒரு திட்டத்தில் வியாபாரம் அதிகப்படுவதாயிற்று. சுற்றுப்புறத்திலுள்ள ஆதீனக் குடிமக்களுக்கும் நல்ல சாமான்களாக மாயூரம் நகரத்திற்குச்செல்லாமல் அவர்கள் ஊருக்குச் சமீபத்திலேயே கிடைப்பதுபற்றிப் பெருமகிழ்ச்சியடைகிறார்கள்.

Koviloor Acadamy

செய்திகள்

இந்துமதப் பிரசாரம்

தருமபுர ஆதீனத்தின் ஆதரவில் ஆரம்பிக்கப்பட்ட இந்துமத பிரசார மோட்டார் வண்டியின் ஆரம்ப விழா, மைலாப்பூர் கபாலீசுவரர் கோயில் முன்னிலையில் கொண்டாடப்பட்டது. மேற்படி விழாவிற்கு மந்திரி அவினாசி லிங்கம் செட்டியார் தலைமை வகித்தார்.

—தினத்தந்தி, 7—7—48.

சென்னையில் தருமபுர ஆதீன சமயப் பிரசாரம்

17-7-48 புதன்கிழமை மாலை 5-மணி முதல் 7-மணி வரையிலும் புதுப்பாக்கம் பைகிராப்ட்ஸ் ரோடு ஸ்ரீ சிவ சுப்பிரமணிய பக்தஜன சபை மன்றத்தில் ஆதீனத்துக் கோஷ்டியார் தேவார பாராயணம் ஓதினர். பின்னர் ஆதீனத்துப் பிரசாரகர் வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் ஆலயவழிபாடும் விக்ரக ஆராதனையும் என்ற பொருள் பற்றி இனியமொழிகளில் பேசி, சைவசமயத்திலும் ஆலய வழிபாட்டிலும் உண்மைப்பற்று ஏற்படுமாறு செய்தார். சென்னைவாசிகளாகிய ஸ்ரீ ஜகந்நாத நாயுடுவும், பிரசங்க பூஷணம் பு. ரா. இரத்தின சபாபதி நாயகரும் முறையே ஆலய வழிபாட்டு முறை சைவம் என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள். வேலூர் கட்டளை ஸ்ரீ-ல-ஸ்ரீ சோம

Koviloor Acadamy

சுந்தர சுவாமிகள் தலைமை வகித்தார். வேல்முருக சித்தர். ராவ்சாகிப் ப. சு. லோகநாத முதலியார் (சபைத்தலைவர்) ஷை சுவாமிகளையும் மற்ற கோஷ்டியையும் வரவேற்றார்.

—சுதேசமித்திரன் 12—7—1948.

ரொம்பவும் அழகாகவும். உபயோகமுள்ளதாகவும், பார்ப்பவர்கள் 'பலே' என்று சொல்லும்படியாகவும் தயாரிக்கப்பட்டிருக்கிறது தருமபுர ஆதீன சமயப்பிரசாரத்திற்கு உதவப்போகும் மோட்டார் வாகனம். இந்த வாகனத்தோடு செவிக் கினிமையாகப்பாடும் தேவார சங்கீத கோஷ்டி ஒன்று சென்றவாரம் வந்திருந்தது. அறிவிற்கு உணவுதரும் வகையில் பேசக்கூடிய தம்பிரான் ஒருவரும் வந்திருந்தார். இவர்களது கானத்தையும், பேச்சையும் கேட்டபின், கனம் மந்திரி ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார், வெகுநேரம் பேசினார். ஷை பிரசாரவாகனத்தில் 'பாட்டரி' மூலம் இயங்கும் ஒலிபெருக்கி மந்திரியின் பேச்சை எல்லோரது செவிகளிலும் விழச்செய்தது. காலத்திற் கேற்றபடி சமயப்பிரசாரத்தைச் செய்ய வேண்டும் என் பதை அழுத்திச் சொன்னார் அவர்.

அவர் வெகுநேரம் பேசிய பேச்சிலிருந்து, அவர் இம்மாதிரி சமயப்பிரசாரத்தை ஆதரிக்கிறாரா, இல்லையா என்பதே நிச்சயமாக விளங்க வில்லையே என்றார்கள் அவர் பேச்சைக்கேட்ட சிலர். காலத்திற்கேற்றபடியே மதப்பிரசாரத்தைச் செய்ய வேண்டும் எனும் நோக்கத் துடன்தான் தருமபுர ஆதீனத்தார் இம்மாதிரி ஒலிபெருக்கி புத்தகசாலை, மோட்டார் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்

Koviloor Acadamy

திருக்கவேண்டும்; அதற்கு அவர் ஆசி கூறவே இல்லை. தருமபுர ஆதீனத்தாரைக் குறித்தும் சரியாக நாலுவார்த்தைகள்கூடச் சொல்லவில்லை. அது என்னமோபோலிருந்தது.

ஆனால், அன்று வந்திருந்தவர்களில் பலர் "இது நல்ல ஏற்பாடு" என்று கூறினர் பிரசார வாகனத்தை இருமுறை சுற்றிப்பார்த்துவிட்டு.

—நாரதர் 7—7—1948.

RELIGIOUS PROPAGANDA THROUGH MOBILE VAN.

Religious propaganda in a moble van by Kattalai Vicharanaikartha Sri Somasundara Thambiran of the Dharmapuram Adhinam was inaugurated last evening in front of Sri Kapaliswarar Temple, Mylapore by Mr. T. S. Avinashilingam Chettiar, Minister for Education, in the presence of a large gathering.

Thevaram Oduvar of the Dharmapuram Mutt sang Thevaram and Tiruppugal songs.

Mr. S. Sachchidanandam Pillai retired Educational Cfficer of the Corporation of Madras, welcomed the Kattalai Vicharanaikartha of the Dharmapuram Adhinam and the Minister.

Koviloor Acadamy

Sri Somasundara Thambiran, explainning the objects of the mobile religious propaganda van, said that in these days, even belief in God was fading people forgot that the existence of the sun and the moon were proof positive of the existence of God. This ignorance was due to lack of understanding of religion. There was a great need at present for a religious college. If people were taught properly in religion, it would lead them to high thinking, plain living and a firm belief in God.

Mr. Avinashilingam Chettiar said the temples were doing good work in their own way. But people did not properly understand the purpose of the temple. Otherwise, they would not be making it the venue of quarrels, and allow their children to play pranks there. This was due to the inability of the people to understand religious principles properly. The object of the mobile van was to remove such ignorance. When this was done, the temples would play an important part in the lives of the people.

—The Indian Express, 5—7—48.

கந்தசஷ்டி விரதச் சிறப்பு

(எழுதியவர் க. வச்சிரவேலு முதலியார் B. A., L. T.)

இறைவன் அருள் பெற்றுய்வதற்குரிய விரதங்களுள் முக்கியமானது கந்தசஷ்டி விரதமும் ஒன்ருகும். அத்தகைய சஷ்டி விரதத்தின் சிறப்பு, அதனை அநுட்டிக்கும் முறை, கந்தன் அவதாரம், அதன் வாயிலாக நாமறியும்

Koviloor Acadamy

உண்மைகள் ஆகியவைகள் இந்நூலில் இனிது விளக்கப் படுகின்றன. பாராயணத்திற்குரிய 'திருமுருகாற்றுப் படையும்' சேர்க்கப்பட்டுளது. சைவமும் தமிழும் தமிழகத்தில் தலைசிறந்தோங்க தக்க தொண்டுகளாற்றி வரும் தருமபுர ஆதீன இருபத்தைந்தாவது மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் கருணைத் திறத்தைப் பெரிதும் பாராட்டுகின்றோம். சைவ மெய்யன்பர்கள் இந்நூலினைப் படித்து முருகன் அருளுக்கு உரியாராகுக.

அமைதி. எழுதியவர்: ச. தண்டபாணி தேசிகர். தருமபுர ஆதீனப்பிரசார உந்தூர்தி வாகன வெளியீடு.

இன்று உலகம் நாடுவது அமைதியை. அதை அடைவதற்கு 'எத்தனை எத்தனையோ துறைகளில் அறிஞர்கள் முயல்கின்றனர். இன்றுவரை அமைதியின் எல்லையைக் கண்டிலர். அமைதிக்கு அடிப்படை இன்பம். இவ்வமைதியின் இருப்பிடத்தை ஆராய்ந்த ஒருவரின் வரலாற்றை எவரும் புரியக்கூடிய இனிய தமிழ் நடையில் திரு. தண்டபாணி தேசிகர் அவர்கள் வரைந்துள்ளார்கள்.

—தொண்டன் 1—12—1948.

மதுரைத் திருப்பதிகங்கள். எழுதியவர் ச. தண்டபாணி தேசிகர். தருமபுர ஆதீன வெளியீடு.

தமிழும் சைவமும் தழைத்து வளர்ந்த இடம் மதுரை. அதன் அருமை பெருமைகளை அளவிட்டுக் கூற முடியாது.

Koviloor Acadamy

இந்தத் தலத்தின் சிறப்பை எடுத்துக்கூறி, இதைப் பற்றிய திருப்பதிகங்களையும் ஒன்றாகச் சேர்த்து அச்சிட்டுக் கொடுக்கும் இச் சிறு நூலைத் தருமபுர ஆதீனத்தார் நன்றாக வெளியிட்டிருக்கிறார்கள்.

—'தினசரி' மடல் 25—12—1948

இந்துமதப் பிரசாரம் அவசியம்

மேயர் கிருஷ்ணராவ் வேண்டுகோள்

தருமபுர ஆதீன முயற்சிக்குப் பாராட்டு

"நமது தேசத்தின் ஐக்கியத்தையும் கலாசாரத்தையும் வளர்க்கும் முக்கிய சாதனம் மதமாகும். சரியான முறையில் மதப்பிரசாரம் செய்யவேண்டும்" என்று மேயர் டாக்டர் கிருஷ்ண ராவ் கூறினார். மதப்பிரசாரத்துக்காகத் தக்கர் பாபா வித்யாலயத்தில் (தியாகராயநகர்) தர்மபுரம் ஆதீனத்தார் கூட்டியிருந்த கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அவர் இவ்விதம் சொன்னார்.

இந்து மதத்தில் பல உட்பிரிவுகளிடையே உள்ள வேற்றுமை மறையவேண்டும் என்று டாக்டர் கிருஷ்ண ராவ் கேட்டுக்கொண்டார். கிறிஸ்தவ மதப்பிரசாரகர்கள் செய்வதுபோல் இந்துமத ஸ்தாபனங்களும் தீவிர மதப் பிரசாரத்தில் இறங்கவேண்டும் என்று அவர் சொன்னார்.

எல்லோரையும் டாக்டர் திருமூர்த்தி வரவேற்றார். அந்நிய ஆட்சிக் காலத்தில் இந்துமதம் வளரமுடியவில்லை

Koviloor Acadamy

என்றும் ஜீவனோபாயத்திற்காகப் பலர் மதமாறினர் என்றும் அவர் குறிப்பிட்டார். இப்போது பெரும்பணியைத் தருமபுர ஆதீனம் ஏற்றுக்கொண்டதை அவர் பாராட்டினர்.

ஒழுக்கத்தை அடிப்படையாகக்கொள்ளாத நாகரிகம் நிலைக்காது என்றும், கலாசாரத்தை அபிவிருத்தி செய்வதில் மதத்திற்கு முக்கிய பங்கு உண்டு என்றும் ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் கூறினர்.

ஸ்ரீ பாலகுருஸ்வாமி முதலியாரும் பேசினர். கூட்டத்தில் அசெம்பிளி சபாநாயகர் ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளையும் பிரசன்னமாயிருந்தார்.

—தினமணி. 12—7—48.

தருமபுர ஆதீனத்தாரின் சிரிய செயல்.

3—7—48 மாலை 5மணிக்கு தருமபுர ஆதீனத்தாரின் சைவப்பிரசார மோட்டார் வாகனத்தின் சுற்றுப்பிரயாணத்தொடக்கவிழா சென்னை மைலாபூர் கபாலீஸ்வரர் ஆலயத்தினின்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சென்னை அரசாங்கக் கல்விமந்திரி கனம் அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் விழாவைத் தொடங்கிவைத்து, சமயப் பிரசாரத்தின் அவசியத்தைக் குறித்துப் பேசினர்கள். பின்னர் திருப்புகழ் மணி T. M. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத் தலைவர் திரு T. M. சின்னையாபிள்ளை அவர்கள், திருமதி E. T. இராஜேஸ்வரி

Koviloor Acadamy

அம்மையார் அவர்கள் ஆகிய பலரும் சமயப் பிரசாரத்தின் தேவையையும் தருமையாதீனத்தின் முற்போக்கையும் பாராட்டினார்கள். பின்னர் திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் யாவர்க்கும் நன்றிகூற மங்கல வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது. காலப்போக்கையும் சமய நிலையையும் உணர்ந்து தக்க முறையில் சமயப்பணி புரிந்து வரும் தருமபுர ஆதீனம் மகாசந்நிதானத்தின் சீரிய செயல்கள் என்றும் பாராட்டிப் போற்றற்குரியனவாகும்.

—தொண்டன். 1—8—1948.

ராஜாஜி பதவி ஏற்றதன் ஞாபகார்த்த மண்டபம்

ஒப்பற்ற தலைவர் ராஜாஜி சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர்ஜனரலாக நியமிக்கப்பட்டிருப்பதின் ஞாபகார்த்தமாக, தருமபுரம் ஆதீன கர்த்தரால் மாயூரம் டவுன் சேந்தங்குடி ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரி அம்மன் கோவிலில் வடபுறத்தில், புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் ஜன்னல் மண்டபத்தைத் தருமபுர மடத்தின் அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நேற்று இரவு திறந்துவைத்தார். பக்தர்கள் கோவிலுக்கு வெளியிலிருந்தபடி தாராளமாய் தரிசனம் செய்ய வசதியாகக் கட்டப்பட்டிருக்கும் புதியமண்டபம் இது. அபிஷேக ஆராதனையும், சந்தனக்காப்பு அலங்கார வைபவமும் வெகுவிமரிசையாக நடைபெற்றன.

—சுதேசமித்திரன். 18—8—48.

Koviloor Acadamy

திருக்கடவூரில் அபிராமி சுந்தரி வெளியீடு.

தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி ஆலயத்தில் அபிராமி அந்தாதி உரை வெளியீட்டு வைபவம் நேற்று மாலை குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் ஸ்ரீ குமாரசாமிச் செட்டியார் தலைமையின் கீழ் வெகுவிமரிசையாக நடைபெற்றது. தருமபுர மடத்தின் அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நேரில் விஜயம் செய்து வைபவத்தை வெகுவிமரிசையாக நடத்திவைத்தார். நூற்றுக்கால் மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஆதீனத்துத் திருக்கூடத்து அடியார்களும், ஆதீனக் கல்லூரி ஆசிரியர்களும், மற்றும் பலஅறிஞர்களும் பிரசங்கம் செய்தார்கள்.

கோவில் முழுவதும் புஷ்பங்களினுலும் தோரணங்களினுலும் விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அபிஷேக ஆராதனைகளும் ஸ்ரீ அபிராமி அம்மனுக்கு சந்தனலங்கார விசேஷ வழிபாடும் வெகு விமரிசையாக நடைபெற்றன. ஏராளமான ஏழை ஜனங்களுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. ஒலிபெருக்கிச் சாதனத்துடன் அமைந்துள்ள ஆதீன மட்ாலய தேவாலய சமயப் பிரசார வாகனமும் விழாவில் கலந்துகொண்டதோடு தேவஸ்தான தேவார வகுப்பு ஆசிரிய மாணவர்களின் திருமுறைப் பாராயணமும் நடைபெற்றது.

—சுதேசமித்திரன், 4—8—48.

Koviloor Academy

மாயவரத்துக்கருகே சேந்தங்குடியிலே பிரசித்தி பெற்ற துர்க்காபரமேஸ்வரி அம்மன் ஆலயம் ஒன்றிருக்கிறது. அங்கே கடைசி வெள்ளியன்று விசேஷ பூஜை அலங்காரம் எல்லாம் நடந்தனவாம். தருமபுர ஆதீனகர்த்தர் உபயமாக அன்று காலை ஆயிரக்கணக்கான ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றினார்களாம்.

மாயூர க்ஷேத்திரப் பிரமுகர்களான ஸ்ரீ சாமி அய்யங்கார், லோகல் போர்ட் உதவி இன்ஸ்பெக்டர், ஜில்லா ரிஜிஸ்த்ரார் ஆகியோரனைவரும் அங்குபோய் அம்மன் தரிசனம் செய்துவிட்டு திருமாளம் ஸ்ரீமதி டி. கே. தங்கமணி அளித்த சங்கீத விருந்தையும் அநுபவித்து விட்டுத் திரும்பினார்களாம். மதுரை மணி அய்யர்வாள் பாணியில் பல உருப்படிகளை இப் பாடகி நல்ல கற்பனைகளுடன் அழகாகப் பாடினாராம். அன்றிரவு தர்மபுர மடாதிபதி கோயிலுக்கு எழுந்தருளினார்களாம்.

—நாரதர், 18—8—1948.

மதப் பிரசாரத்தில் ஹரிஜனங்கள் சிரத்தை.

தர்மபுர ஆதினத்தாராலும் மற்றும் திருவாவடுதுறை திருப்பனந்தாள் காசி மடத்தாராலும் சமயப் பிரசாரம் தீவிரமாய் நடத்தப்பட்டு வருகின்றது. தேறிய உபன்யாசகர்களைக் கொண்டு ஊர் ஊராய்ப்போய் போய் இந்தப் பிரசாரம் நடைபெற்று வருகிறது. பொது ஜனங்கள் மிகவும் உற்சாகத்துடன் திரண்டுவந்து கேட்டு ஆனந்திக்கிறார்கள். வெளியூருக்கும் விநியோகிக்கப் படுகின்றன.

Koviloor Acadamy

மனிதன் சாந்தமான வாழ்வு வாழவேண்டிய அவசியமும் பொறாமை துவேஷம் இவற்றினால் வரும் கெடுதியையும் அன்பின் மேன்மையையும் தெய்வ சக்தியையும் விளக்கிப் பிரசுரங்கள் வழங்கப்படுகின்றன. இதில் தர்மபுர ஆதீனத்தின் பங்கு மிகப்பெரியதாகும். ஹரிஜனங்கள் இதில்மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்வது குறிப்பிடத் தக்கதாகும்.

—தினமணி, 7—6—48.

தருமபுரத்தில் சுதந்திர தினம்

தருமபுரம் ஆதீன மடாலயத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும் 15-ந் தேதி சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேஷமாக அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டன. ஏழைகளுக்கு ஏராளமாக அன்னம் அளிக்கப்பட்டது. மடத்தின் அதிபர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், சுதந்திர தின ஞாபகார்த்தமாக மாயூரத்தில் ஆதீனத்தில் கட்டப்பட்டுவரும் பெண்கள் குழந்தைகள் ஆஸ்பத்திரி காம்பவுண்டில் வேப்பமரங்களை நட்டுவைத்தார், கவர்னர் ஜெனரல் ராஜாஜி, பிரதம மந்திரி பண்டிதநேரு, காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ராஜேந்திர பிரஸாத், சென்னை பிரதமர் ஸ்ரீ ஓ பி. ராமஸ்வாமி ரெட்டியார் ஆகியவர்களுக்கு மடத்தின் அதிபர் சுதந்திர தின வாழ்த்துசெய்தி அனுப்பினார். பண்டித நேருவிடமிருந்து பதில் செய்தி வந்துள்ளது.

—சுதேசமித்திரன், 28—8—48.

Koviloor Acadamy

தருமபுர ஆதீன கர்த்தர் சுற்றுப்பிரயாணம்,

தென்னிந்தியாவில் பிரதான சைவ மடமாகிய தருமபுர மடத்தின் அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தென்னிந்தியாவில் பிரதான க்ஷேத்திரங்களுக்கு 30-ந்தேதி விடியற்காலை சுற்றுப்பிரயாணமாகப் புறப்பட்டு திண்டுக்கல் பழனி முதலிய க்ஷேத்திரங்களுக்கு விஜயம் செய்தார். திண்டுக்கல் ஸ்ரீ அபிராமி மண்டபத்தில் ஸ்ரீ சுவாமிகளுக்கு உற்சாகமாகவரவேற்புஅளிக்கப்பட்டது. நகரவாசிகளும், பிரபலஸ்தர்களும், கூட்டமாய் விஜயம் செய்து வரவேற்பில் கலந்து கொண்டனர். பல ஸ்தாபனங்கள் சார்பாக ஸ்வாமிகளுக்கு நல்வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. பழனியில் ஸ்ரீ தண்டாயுதபாணிக்கு ஏராளமான பொருட் செலவில் அபிஷேகஆராதனைகள் நடைபெற்றன.

—தினமணி, 3—9—48.

திருந்துதேவன்குடித் திருப்பதிகம்.

தருமபுர ஆதீனத்தாரால் வெளியிடப்பட்டுள்ள, ‘திருந்துதேவன்குடித் திருப்பதிகம்’ எனும் சிறுநூல் வரப்பெற்றோம்.

—வீரகேசரி, சர்வதாரி ஆவணி 7உ

தருமபுர ஆதீனகர்த்தாவர்களின் யாத்திரை.

வழக்கம்போல தருமபுர ஆதீனம் சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 22—8—48 காலை

Koviloor Acadamy

யில் திருவையாறு பஞ்சநதீஸ்வரசுவாமி கோவிலைப்பார்வையிட எழுந்தருளினார்கள். அன்று அவ்வாதீனத்துக்குச் சொந்தமான திருச்சி உய்யக்கொண்டான் உஜ்ஜீவநாத சுவாமி கோவிலுக்கு எழுந்தருளித் தரிசனம் செய்து கொண்டு ஸ்ரீரங்கம் திருவானைக்காவல் கோவிலுக்கும் எழுந்தருளினார். ஆங்காங்கு தகுந்த மரியாதைகளுடன் கோவில் நிர்வாக அதிகாரிகளாலும் மற்றும் பிரமுகர்களாலும் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்டார்.

—தினத்தந்தி, 17—8—48.

தருமபுர ஆதீனகர்த்தரவர்களின் யாத்திரை.

வழக்கம்போல் தருமபுர ஆதீனம், ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 22—8—48 காலையில் திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வர சுவாமி கோவிலைப் பார்வையிடஎழுந்தருளினார்கள். அன்று அவ்வாதீனத்துக்குச் சொந்தமான திருச்சி உய்யக்கொண்டான் ஸ்ரீ உஜ்ஜீவநாத சுவாமி கோவிலுக்கு எழுந்தருளித் தரிசனம் செய்துகொண்டு ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாதப்பெருமாள் கோவிலுக்கும் திருவானைக்காவல் ஸ்ரீ ஜம்புகேசுர சுவாமி கோவிலுக்கும் எழுந்தருளினார்கள். அங்கங்கு தகுந்த மரியாதைகளுடன் கோவில் நிர்வாக அதிகாரிகளாலும் மற்றும் பிரமுகர்களாலும் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்டார்கள்.

—பாரததேவி, 28—8—48.

Koviloor Acadamy

திண்டுகல்லில் சொற்பொழிவு

நேற்று மாலை இந்நகர் அபிராமி அம்மன் கோவில் கல்யாண மண்டபத்தில் வழக்கறிஞர் ஸ்ரீ கே. குப்புசாமி அய்யர் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் 'சைவசமயம்' என்பது பற்றியும் ஸ்ரீ நாகலிங்கத் தம்பிரான் 'நெஞ்சமே கோவில்' என்பது பற்றியும் ஸ்ரீ நடராஜ தேசிகர் 'அப்பர் கட்டளை' பற்றியும் ஸ்ரீ 'தோத்திரம்' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்கள்.

—சுதேசமித்திரன், 2—9—48.

பழனி தண்டாயுதபாணி தோத்திரங்கள்.

இச்சிறந்த வெளியீடு, திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதினம் 25-வது மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பழனிக்கு யாத்திரையாய் எழுந்தருளிச் சென்று, அங்கு மலைமேல் திருக்கோயில் கொண்டு விளங்கும் கலியுக வரதரும், கண்கண்ட தெய்வமுமாகிய பாலதண்டாயுத பாணிக்கு ஆதினச் சார்பில் விசேட அபிடேக அலங்கார ஆராதனை செய்வித்தபோது வழங்கப்பட்டதாகும். இதில், தொடக்கத்தில் பதிப்புரையும், மதுரைக் கடைச்சங்கத்துச் சான்றோராகிய நக்கீரதேவ நாயனர் அருளிய திருமுருகாற்றுப்படையில் திருவாவினன்குடியைப் பற்றியபகுதியும், ஆறுமுகக் கடவுள் அநுபூதிமானுகிய ஸ்ரீ அருணகிரிநாதரால் சாங்கோபாங்கமாய்த் தேனும் தெள்ளமுதத்திர

Koviloor Acadamy

ளும்போல் அருளிச்செய்த 90 திருப்புகழ்ப் பாடல்கள், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருவகுப்புச்செய்யுட்களும், பழனிப்பிள்ளைத் தமிழ், க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழ், 'பழனி' என்ற பெயர்க்காரண வியாசமும் அடங்கியுள்ளன. இது, வெள்ளிய வொள்ளியகடிதத்தில் தெள்ளிய முறையில் அச்சிடப்பெற்றுள்ளது. இத்தகைய வெளியீடுகள் பல வெளிவரத் திருவுளங்கொண்ட ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத்தின் தமிழ்ப்பற்றைத் தமிழுலகம் புகழ்ந்து போற்றுகின்றது. இதனது பிரதியொன்று அடியேற்கு அனுப்புவித்த அப்பெருந்தகையார் அன்புக்கு என்றும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையோம்.

—யதார்த்தவசனீ, 1—9—48

மெய்கண்டார் நூற்பொருட் சிறப்பு

(தருமபுர ஆதீன வெளியீடு.)

வைத்தீஸ்வரன் கோவிலில் அண்மையில் சித்தாந்த சாத்திர கோடைக்காலப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது அன்பர்களுக்கு நினைவிருக்கலாம். அதன் நிறைவு நாள் நினைவு வெளியீடாக மெய்கண்ட நூல்கள் இன்னின்னவை என்பதையும், அவைகளால் விளக்கப்படும் பொருள்கள் இவைஇவை என்பதையும் சைவத் திரு க. வச்சிரவேல் முதலியார் அவர்களைக்கொண்டு எழுதுவிக்கச் செய்து இந்நூல் வெளிவந்துள்ளது. அன்பர்கள் இச்சிறு நூல் வாயிலாகப் பெரிதும் பயன்பெறலாம்.

—தொண்டன், 1—9—48.

Koviloor Acadamy

அபிராமி அந்தாதி உரையுடன்.

(தருமபுர ஆதீன வெளியீடு. உரையாசிரியர் வித்துவான் ச. தண்டபாணி தேசிகர்.)

திருக்கடவூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அபிராமியின்மீது ஷை ஊர் அபிராமிபட்டர் அவர்கள் பாடியது. இந்நூலில் திருவாசகத் தீஞ்சுவையும், திருமந்திரம் தேவாரம் முதலியவற்றில் காணப்பெறும் கருத்துக்களையும் இனிது காணலாம். நல்ல அழகான பதிப்பு. சைவசித்தாந்திகள் படித்துப் பயன் பெறுவார்களாக.

—தொண்டன், 1—9—48.

மெய்கண்ட நூற்பொருட் சிறப்பு.

(தருமபுர ஆதீனத்தின் 167-வது வெளியீடு. தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான (வேளூர்) வைத்தீஸ்வரன் கோவில் தேவஸ்தானச் சார்பில் 1-6-48 தொடங்கி நடத்தப்பெற்ற சித்தாந்த சாத்திர கோடைக்காலப் பயிற்சி வகுப்பு நிறைவுவிழா நன்னாள் நினைவுவெளியீடாக வெளிவருகிறது. வகுப்பு ஆசிரியர் ஸ்ரீ க. வச்சிரவேலு முதலியார் பி. ஏ. எல். டி. அவர்களால் எழுதப்பெற்றது.

தமிழர் கண்ட சித்தாந்த ஞானம்பெற விழைவோர் மெய்கண்ட நூல்கள் எனப்பெயர் பெறும் பதினான்கு நூல்களை ஓதியுணர்தல் இன்றியமையாததாகும். இந்நூல்கள் இன்னின்னவை என்பதையும், இவற்றால் விளக்

Koviloor Acadamy

கப்படும் பொருள்கள் இவை என்பதையும் ஆசிரியர் இந் நூலில் சுருக்கமாக இனிய செந்தமிழ் நடையில் விளக்கு கிறார். அனைவரும் படிப்பதற்குரிய நூல். தமிழ் மக்கள் அறிவை வளர்க்கும் இத்தகைய நூல்களை வெளியிட்டுதவும் தருமபுர ஆதீனத்தாரை எவ்வளவு போற்றினாலும் தகும்.

—சுதேசமித்திரன், 6—9—48.

தருமபுர ஆதீனப் பிரசாரம்: தி-நகர் தக்கர் பாபா வித்தியாலயத்தில் இன்றுமாலை · மேயர் கிருஷ்ணராவ் தலைமையில் நடைபெறும். டி. எம். கிருஷ்ணசாமி அய்யர், பால குருசிவம் ஆகியோர் பேசுவர்.

—தினத்தந்தி, 10—7—48.

தருமபுர ஆதீனப் பிரசாரம்: தி-நகர் தக்கர்பாபா வித்யாலயத்தில் நாளைமாலை 6-மணிக்கு மேயர் ஸ்ரீகிருஷ்ண ராவ் தலைமையில் ஸ்ரீமான்கள் டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் எஸ். பி. ஐ. பாலகுருசிவம் ஆகியோர் பேசுவர்.

—தினமணி, 10—7—48.

We have received a copy of the second edition of the book "Kandha Sashti Virtha Chirappu' in Tamil Published by the Dharmapuram Adhinam, Dharmapuram It is Priced As. 5-6. per copy.

Hindu, 28—11—48.

Koviloor Acadamy

தருமபுரம் ஆதீனகர்த்தர் சுற்றுப்பிரயாணம்.

தருமபுரம் மடத்தின் அதிபர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மதுரை முதலிய ஸ்தலங்களுக்குத் தமது பரிவாரங்களுடன் சுற்றுப் பிரயாணமாகச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு நேற்று காலையில் திரும்பி வந்தார்கள். சுவாமிகள் மதுரைக்கு அருகாமையிலுள்ள திருவாப்புடையார் கோவில் கல் அழகர், திருப்பரங்குன்றம் நன்மை தருவார் கோவில், இடைக்காடனூர் பிணக்கு தீர்த்தஸ்தலம் முதலிய சிவ க்ஷேத்திரங்களுக்குச் சென்று சுவாமிதரிசனம் செய்து விட்டு மதுரை திருஞான சம்பந்த சுவாமிகளாதீன மடாலயத்துக்கு விஜயம் செய்தார். ஸ்ரீ சுவாமிகள் மதுரை வாசிகளால் உற்சாகமாக வரவேற்கப்பட்டு மதுரை தமிழ்சங்கம் திருஞானசம்பந்த மடாலய திருக்கூட்டத் தம்பிரான்களாலும் மற்றும் பல பொதுஸ்தாபனங்கள் சார்பாகவும் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டது. சர்; பி. டி. ராஜன் முதலிய பல பிரபலஸ்தர்கள் வரவேற்பில் கலந்து கொண்டனர் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரஸ்வாமிக்கு சுமார் ரூ. 3000 செலவில் அபிஷேக ஆராதனைகள் கடைசிச் சோமவாரதினத்தில் செய்விக்கப்பட்டது. தருமபுரம் ஆதீனம் திருக்கூட்டத் தம்பிரான்களும், தேவார பாடசாலை ஓரியண்டல் காலேஜ் ஆசிரியர் மாணவர்களும், பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டரயில்வே கம்பார்ட்மெண்டில் சென்று சைவ சமயப் பிரசங்கங்கள் செய்தார்கள்.

—சுதேசமித்திரன் 21—12—48.

Koviloor Acadamy

" இன்பம் "

தருமபுர ஆதீன வெளியீடு; இன்பம் பற்றிய ஒரு சிறு வசன நூல்.

—சிவாஜி, 11—7—48.

அதி மும்மரமாகத் தங்கள் மதப் பிரசாரத்தைத் தொடங்கி விட்டார்கள் தருமபுரமடாலயத்தார். கனம் மந்திரி அவினாசிலிங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பெற்றது இந்தத் திட்டம் இதற்கென்றுள்ள மோட்டார் வாகனத்தோடு தேவாரகோஷ்டி, பிரசங்கி எல்லோரும், போன சனியன்று, தியாகராய நகரில், தக்கர் பாபா ஹரிஜனப் பள்ளியில், மேயர் ராயர் அவர்கள் தலைமையில், தங்கள் சேவையைச் செய்தார்கள். இந்தப்பிரசார முறையை மேயர் அவர்கள் பெரிதும் பாராட்டினார்கள்.

—நாரதர், 14—7—50.

NEED FOR PROPAGANDA FOR HINDUISM

Dr. U. Krishna Rao, Mayor of Madras presiding over a meeting organised by Dharmapuram Adhinam at Thakkar Bapa Vidyalayam, Thyagaroyanagar, last evening made a vigorous plea for the propagation of religious education on right lines. He congratulated the Adhinam Mutt on the great task they had undertaken in educating the public on religious matters.

Dr. Krishna Rao regretted the existence of differences among various sections of the Hindu society

Koviloor Acadamy

and pleaded for a unified outlook. He stressed the need for having missionaries to do the propaganda work. In this connection he suggested that Hindus might follow the Christians.

Dr. T. S. Tirumurthi welcoming the gathering emphasised the need for intensive propaganda. In the past he said, Hinduism had not the opportunity to do it successfully. Many Hindus had embraced other religions for the sake of eking out a livelihood. Now as conditions have changed it was timely that Dharmapuram Adhinam had undertaken such a great task.

Mr. T. M. Krishnaswamy Iyer speaking next observed that Hindu religion had the great attribute of toleration. Religion had a great part to play in promoting culture. The sectional differences, he said, were merely artificial. Learned men never took them in to consideration.

Mr. S. P. I. Balaguruswamy and several others addressed the gathering.

Mr. J. Sivashanmugam Pillai Speaker of the Madras Legislative Assembly was also present at the meeting.

—Indian Express, 12—7—48.

திருஆப்பாடித் தலச்சிறப்பு

இத்தலத்திற்குரிய தேவாரப் பதிகமும் இத்திருப் பதிகப் பொருள் விளக்கமும் தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ

Koviloor Acadamy

மகாசந்நிதானமவர்களின் சென்ம நக்ஷத்திரத் திருநாட் போது (22-4-48) ஸ்ரீ பாலுகந்தநாத சுவாமிக்கு விசேஷ அபிஷேகம், ஆராதனை செய்தபின், சிறு பிரசுரமாக வழங்கப் பெற்றன. இது தருமபுர ஆதீனத்து 150 ம் வெளி யீடாகும்.

—இந்துசாதனம், சர்வதாரி ஆனி 23உ

திருந்துதேவன்குடித் திருப்பதிகம். வெளியீடு எண் 103. தருமபுர ஆதீனம், தருமபுரம்.

—சுதேசமித்திரன், 30—7—48.

தருமபுர ஆதீனப் பிரசாரம்:- ஊர்ஊராகச் சென்று சமயப்பிரசாரம் செய்யும் திட்டத்தில் இந்தமாதத்தில் ஆதீனப்பிரசார கோஷ்டியார் அதற்கென ஏற்பட்ட மோட்டார்வாகனத்தில் அடியிற்கண்ட ஊர்களுக்குச் சென்று சொற்பொழிவுகள்நடத்துவார்கள். 19—8—48-ல் சுற்றுப்பிரயாணம் தொடங்கி கிருத்திகை தினத்தன்று பழனி சென்று 3—9—48-ல் திருவாரூரில் முடித்துக் கொள்வதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பிரசார கோஷ்டிக்குத் தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமைவகித்துச் செல்லுகிறார்கள். திருவிடைமருதூர், கும்பகோணம், திருவையாறு, கரந்தை கல்லூரி, திருச்சி, திண்டுக்கல், பழனி, மணப்பாறை, திருவானைக்கா, வல்லம், நீடாமங்கலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, திருநெல்லிக்கா, திருக்காரவாசல், திருவாரூர், பொதுவாக அந்தந்த ஊரிலுமுள்ள கோவில் களில் சொற்பொழிவுகள் நடைபெறும்.

—யதார்த்தவசனீ, 22—8—48.

Koviloor Acadamy

தருமபுர ஆதீன சமயப்பிரசார 'வான்'

தருமபுர ஆதீனத்தாரின் சமயப்பிரசார 'வான்' 19—8—48 அன்று தருமபுரத்தைவிட்டுப் புறப்பட்டுள்ளது.

திருவிடைமருதூர், கும்பகோணம், திருவையாறு, கரந்தைக்கல்லூரி, திருச்சி, திண்டுக்கல், பழனி, மணப்பாறை, திருவானைக்கா, வல்லம், நீடாமங்கலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, திருநெல்லிக்காவல், திருக்காரவாசல், திருவாரூர், முதலிய இடங்களில் சைவப்பிரசாரம் செய்துகொண்டுவர ஏற்பாடாகியிருக்கிறது. இந்தப்பிரயாணம் 3—9—48 அன்று திருவாரூரில் முடிவுபெறும். பிரசார கோஷ்டிக்கு ஆதீனத்தைச்சார்ந்த சோமசுந்தரத்தம்பிரான் தலைமைதாங்கிச் செல்லுகிறார்.

—தினத்தந்தி, 24—8—48.

His Holiness Sri la Sri Pandara Sannadhi Swamigal of Dharmapuram Adhinam, who arrived here on August 23, visited the Srirangam and Jambukeswaram temples in the evening. He was received by the authorities of the temples. He left the same day for Dharmapuram.

Sri Somasundara Thambiran of Dharmapuram Mutt delivered two lectures on "Saivism" at the Hundred-pillared Hall, Rockfort Tiruchirapalli, on August 23, and at the Mandapam opposite to Sri Akilandeswari Temple, Tiruvanaikoil on August 24.

—The Hindu, 28—8—48.

Koviloor Acadamy

தருமபுரம்

தருமபுரம் ஆதீன மடாலயத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும் 15-ந் தேதி சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேஷமாக அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டன. ஏழைகளுக்கு ஏராளமாக அன்னம் அளிக்கப்பட்டது. மடத்தின் அதிபர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சுதந்திரதின ஞாபகார்த்தமாக மாயவரத்தில் ஆதீனத்தில் கட்டப்பட்டுவரும் பெண்கள் குழந்தைகள் ஆஸ்பத்திரி காம்பவுண்டில் வேப்பமரங்களை நட்டுவைத்தார். கவர்னர் ஜெனரல் ராஜாஜி, பிரதம மந்திரி பண்டிதநேரு, காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ராஜேந்திர பிரஸாத், சென்னை பிரதமர் ஸ்ரீ ஓ. பி. ராமசாமி ரெட்டியார் ஆகியவர்களுக்கு மடத்தின் அதிபர் சுதந்திர தின வாழ்த்துச்செய்தி அனுப்பினர். பண்டிதநேருவிடமிருந்து பதில் செய்தி வந்துள்ளது.

—சுதேசமித்திரன், 28—8—48.

The annual celebrations of the elementary schools, Thevara Veda Sivagama Patasala, and the Oriental College under the control of the Dharmapuram Adhinam took place on September 12, when Mr. G. Subramania Pillai, presided. The special poojas and abishekams to Sri Chokkalingamoorthy in the Adhinam premises on the occasion of Avani Moolam were also conducted by His Holiness the Maha Sannidhanam. There were interesting lectures and poor-feeding.

—Indian Express, 19—9—1948

Koviloor Acadamy

திண்டுக்கல்லில் சமயப் பிரசார வாகனம்

தருமபுர ஆதீன சேவைக்குப் பாராட்டு.

தற்கால சேவையை உணர்ந்து தருமபுர ஆதீன பண்டார சந்நிதிகள் சமயப் பிரசாரத்திற்காக ஏற்படுத்தியிருக்கும் மோட்டார் வாகனம் இந்நகருக்கு ஆகஸ்ட் 25-ந் தேதி மாலை வந்தது. பிரபல வக்கீல் ஸ்ரீ கி. குப்புசாமி அய்யர் தலைமையில் ஸ்ரீ அபிராமி அம்மன் கோவிலில் சமயப்பிரசார கூட்டம் நடந்தது. பிரசாரக் குழுவின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் ஸ்வாமிகளும், திருச்சி மலைக்கோயில் கட்டளை விசாரணை மௌன மடத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ நாகலிங்கத் தம்பிரான் சுவாமிகளும், பிரசாரக் கமிட்டியைச் சேர்ந்த மற்ற இருவரும் தெய்வ உணர்ச்சி ஊட்டக்கூடிய கருத்துக்களைப் பழைய சமய நூற்களின் ஆதாரத்தோடு விளக்கினார்கள்.

மறுநாள் மாலை ஸ்ரீ ரேணுகாதேவி அம்பாள் கோயிலில் பிரசாரம் நடந்தபோது பழனி வேதாகம பாடசாலை அத்யட்சகர் ஸ்ரீ காசிவாசி ஈசானசிவாசாரிய சுவாமிகளும் பேசினார்.

ஆகஸ்ட் -30ல் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானம் இந்நகருக்கு விஜயம் செய்து கோவில் வழிபாடு செய்து தெய்வங்களுக்குப் புதுவஸ்திரங்கள்சாத்திப் பக்தர்களுக்கு உபதேசங்கள் கூறினார்.

—பாரததேவி, 6—9—48.

Koviloor Acadamy

திருஇன்னம்பர் தலச்சிறப்பு

இத்தலத்திற்குரிய தேவாரப் பதிகங்கள் "பொருள் விளக்கத்தோடு" தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் ஜந்மநக்ஷத்ர நாளில் (5—9—48) மேற்படி ஆதீன அச்சியந்திரசாலையில் அச்சிட்டு அழகிய சிறிய பிரதிகளாக்கி அன்பர்கட்கு வழங்கப்படலாயின,

—இந்துசாதனம், 17—9—48

தருமபுரத்தில் ஆவணிமூலத் திருநாள்

தருமபுர ஆதீனத்தில் ஆத்மார்த்த பூஜாமூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானுக்கு ஆவணிமூலத் திருநாள் வெள்ளி, சனிக்கிழமைகளில் அபிஷேக ஆராதனைகள் வெகு விமரிசையாக நடைபெற்றன. காலையில் பல அறிஞர்களால் சைவசமயப்பிரசங்கங்கள் நடைபெற்றன. முற்பகலில் மாஹேஸ்வர பூஜையும் மாலையில் ஹரிகதா காலக்ஷேபமும் நடைபெற்றன. ஏராளமான ஏழை ஜனங்களுக்கு அன்னம் அளிக்கப்பட்டது.

தருமபுர ஆதீனக் கல்விநிலையங்கள் வருஷ விழா

தருமபுரம் ஆதீனத்தின் நிர்வாகத்துக்குப் பட்ட கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தேவார வேத சிவாகம பாடசாலை, ஆரம்பப்பாடசாலை ஆகிய கல்வி ஸ்தாபனங்களின் வருடாந்திரக்கொண்டாட்டம் நேற்றுமாலை அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் வித்துவான்

Koviloor Acadamy

ஜீ. சுப்பிரமணியபிள்ளை தலைமையின்கீழ் வெகு விமரிசையாக நடைபெற்றது. கல்வி ஸ்தாபனங்களின் வருஷாந்திர அறிக்கைகள் படிக்கப்பட்டபின் தலைவர் தன்னுடைய முடிவுரையில் கல்வி அபிவிருத்திக்காக, பலகல்விஸ்தாபனங்களை ஏற்படுத்தி மேற்படி ஸ்தாபனங்களை மேன்மேலும் பல துறைகளிலும் விசேஷமாக அபிவிருத்தி செய்துவரும் மடத்தின் அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் உதாரகுணத்தைப் பாராட்டிப் பேசினார். இரவில் ஆதீனக்கல்லூரி மாணவர்களால் "சுந்தரர்" என்ற நாடகம் அதிவிமரிசையாக நடத்திக் காண்பிக்கப்பட்டது.

—சுதேசமித்திரன், 20—9—48.

தருமபுரம் கீழ்திசைப் பல்கலைக்கல்லூரி ஆண்டுவிழா

தருமபுர ஆதீனத்திற்குட்பட்ட ஆரம்பப்பாடசாலை தேவார வேதசிவாகம பாடசாலை கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி முதலிய கல்விஸ்தாபனங்களின் ஆண்டுவிழாக்கள் சனிக்கிழமை தருமபுரத்தில் வித்துவான் ஸ்ரீ ஜீ. சுப்பிரமணிய பிள்ளை தலைமையில் சிறப்பாக நடந்தது.

தருமபுர ஆதீனத்தில் ஆத்மார்த்த பூஜாமூர்த்தியாக இருக்கும் ஸ்ரீ சொக்கலிங்க மூர்த்திக்கு ஆவணிமூலத் தன்று விசேஷ அபிஷேக ஆராதனைகள் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களால் சிறப்பாக நடந்தன. சொற்பொழிவுகளும் நாடகமும் அன்னதானமும் நடைபெற்றன.

—தினமணி, 22—9—50.

Koviloor Acadamy

திருவியலூர்த் திருப்பதிகம் (தருமபுர ஆதீன வெளியீடு)

தருமபுர ஆதீன தேவார வேதசிவாகம பாடசாலை ஏழாவது ஆண்டு அறிக்கை 1947—1948.

தருமபுர ஆதீனக் கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி இரண்டாவது ஆண்டு அறிக்கை 1947—48.

சுந்தரர் காட்சி விளக்கம் தருமபுர ஆதீனக் கல்வி நிலையங்கள் ஆண்டுக்கூட்டத்தின்போது நடந்தது.1-19-48.

திருஇன்னம்பர் திருப்பதிகங்கள் தருமபுர ஆதீன வெளியீடு. எண். 179.

இதில் இன்னம்பரில் எழுந்தருளும் ஈசன்மீது திருஞானசம்பந்த சுவாமிகளும், திருநாவுக்கரசரும் பாடிய திருப்பதிகங்களும் திருப்பதிகப் பொருள் விளக்கமும் அடங்கியுள்ளன.

—சுதேசமித்திரன், 28—9—48.

மாயவரத்தில் நன்றியறிவிப்பு தினம்.

ஹைதராபாத்தில் இந்திய சர்க்கார் எடுத்த நடவடிக்கைகள் வெற்றிகரமாக முடிவடைந்ததைக் கொண்டாட வேண்டும என்று கவர்னர் ஜெனரல் ராஜாஜி விடுத்த வேண்டுகோளுக்கிணங்க தருமபுரம் ஆதீனத்தின் அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகளின் உத்தரவுப்படி ஆதீனத்தின் ஆதிக்கத்திலுள்ள எல்லா தேவாலயங்களிலும் இன்றையதினம் ஏராளமான

Koviloor Acadamy

பொருட்செலவில் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. மேலும் நமது நாட்டில் அமைதியும் நல்லுறவும் நிலவ ஏராளமான ஏழை ஜனங்களுக்கு அன்னமளிக்கப்பட்ட தோடு ஆதீனத்தின் நிர்வாகத்திலுள்ள எல்லா ஆலயங் களிலும் பிரார்த்தனையும் வைத்தீஸ்வரன்கோவிலிலுள்ள ஸ்ரீ முத்துக்குமரஸ்வாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனை களும் நடைபெற்றன. தேவாலயங்களில் செய்யப்பட்ட அபிஷேக ஆராதனைகளின் பிரசாதங்கள் கவர்னர் ஜெனரல் ராஜாஜி, பிரதம மந்திரி பண்டித நேரு, உதவிப் பிரதம மந்திரி சர்தார் வல்லபாய் படேல் முதலிய தலைவர்களுக்கு அனுப்பப்பட்டன.

—சுதேசமித்திரன், 28—9—48.

இலவசமாக வரும் இன்பம்

இன்பத்தை எத்தனையோ வகைகளில் அடையலாம் என்று அறிவாளிகள் கூறுகின்றார்கள், இலவசமாகவும் இன்பத்தைப் பெறலாம் என்று நாம் இப்பொழுது சேர்த்துச் சொல்லுகிறோம். இன்பம் என்ற பெயருடன் தருமபுர ஆதீனத்தார் வெளியிட்டுள்ள அழகான சிறு புத்தகம் இலவசமாகவே கிடைக்கிறது என்பதையே மேற் கண்டவாறு குறிப்பிட்டோம். சமயப்பிரசார கைங்கரியத் திற்கு மேற்படி மடத்தார் ஒரு 'மோட்டார் வானை' நிர் மாணிக்கச் செய்தார்கள் அல்லவா? அதிலே எடுத்துச் சென்று எல்லோருக்கும் விநியோகம் செய்வதற்கென்று சில சிறு புத்தகங்கள் அச்சிடப் பட்டிருக்கின்றன. அவற் றுள் இதுவும் ஒன்று.

Koviloor Acadamy

'பூவின் மணம்போல, உயிருக்கு மணம் சமயம். மணமில்லாமலர் மகிழ்ச்சிதராது. சமயமில்லா உயிரும் அப்படியே! ஒழுக்கம், பழக்கம் எல்லாம் சமயமே! உண்மைச் சமய நிலை அமைதியை அளிப்பது. அமைதியில் இன்பம் இருக்கிறது; அன்புடையார் இன்பம் பெறுவார்களாக' என்ற அழகிய முன்னுரையோடு தருமபுர ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் ஸ்ரீ ச. தண்டபாணி தேசிகர் இப்புத்தகத்தில் இன்பத்தை எளிய நடையில் எல்லோருக்கும் புரியும்படி விளக்கியிருக்கிறார். ஒவ்வொருவரது மனத்திலும் பதியவேண்டிய அரிய கருத்துக்கள் பல இதில் அடங்கியிருக்கின்றன'. வைரவிற்பனைக்கும் விளம்பரம் தேவை என்பதைக் குறிப்பிட்டு, சமயங்கள் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், அவற்றை விளக்கம் செய்யப் பிரசாரங்கள் தேவை என்று ஒரு இடத்தில் இவ்வாசிரியர் குறிப்பிட்டிருப்பதிலிருந்து, காலத்திற்கேற்ற கருத்துக்களே இதிலிருக்கின்றன என்று தெளியலாம்.

—நாரதர், 7—10—48.

மதிப்புரை

ஞானசம்பந்தம்: [அடியிற்கண்ட புஸ்தகங்கள் வரப்பெற்றோம். 7-வது ஆண்டுமலர் விலை ரூ. 4 கிடைக்குமிடம்: ஞானசம்பந்தம் காரியாலயம், தருமபுரம், மாயவரம் போஸ்டு, தஞ்சை ஜில்லா.] இது ஓர் அழகிய கலைக் களஞ்சியம் போன்ற மாத வெளியீடு. தருமபுர ஆதீனம் சிவனடியார்களுக்கு ஓர் உயர்ந்த ஊன்றுகோலாயுள்ளது. பிரதி மாதமும் சைவ சித்தாந்தத்தின் உயர்ந்த விஷயங்கள் வெளியிடப்படுவதுடன், ஆண்டுமுடிவில் உயர்ந்த சித்திரங்களு

Koviloor Acadamy

டனும், வர்ணப் படங்களுடனும், பலவித போட்டோக்களுடனும் சைவ நறுமணம்வீச பல ரஸமான கட்டுரைகளுடனும் சுமார் 100 பக்கங்கொண்ட புத்தகம் வெளியிடப்பட்டு வருகிறது. ஷை மலர் அழகிய நடராஜாவின் தங்க வர்ணப்படத்துடன் விளங்குகிறது. பல பிரசித்தி பெற்ற வித்வான்களாகிய ரா. பி. சேதுப்பிள்ளை, திரு. சிவக்குழந்து, திரு. ஜி. சுப்பிரமணியப்பிள்ளை M. A., B. L., திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை முதலியோர்களின் அழகிய கட்டுரைகள் நிறைந்துள்ளது. பலவித கோவில் காட்சிகளும் சித்திரப்படங்களுடனும் கூடியது. சைவ சமயத்தைப் பரவச்செய்ய தருமபுர ஆதீனம் 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் உயர்ந்த ஊக்கமும் பிரசாரசக்தியும் மிகவும் போற்றத்தக்கவை. அவ்விதமே மற்ற ஆதீனங்களும் முயற்சிசெய்து வருமேயானால் நம் நாட்டிற்கும் மதத்திற்கும் அழியாப் பெருமை உண்டென்பதில் ஐயமில்லை.

பண்டார சாத்திரம்: முதல் பகுதி. ஷை ஆதீனத்தின் வெளியீடுகளில் இதுவும் ஒன்று. சுமார் 300 பக்கம் கொண்ட இவ்வழகிய நூலில் சிவபோக சாரமாயுள்ள பண்டார சாத்திரங்கள், அழகிய வெண்பாக்களுடனும் பொழிப்புரைகளுடனும் வெளியிடப்பட்டுள்ளன. தவிர ஆதீன வெளியீடுகளாகிய-பல க்ஷேத்திரங்களைப் பற்றிய திருப்பதிகங்களும் கிடைக்கப்பெற்றோம். அவையாவன; திரு அன்னியூர், திருவேள்விக்குடி, திருமணஞ்சேரி, திருப்பந்தணைநல்லூர் ஆகிய க்ஷேத்திரங்களைப் பற்றிய திருப்பதிகங்கள்.

Koviloor Acadamy

சுவாமிநாதன்:- (கந்தபுராண வரலாறு) இது சுமார் 40 பக்கங்களுள்ள சிறு புத்தகம். கந்தபுராண வரலாற்றைச் சுருக்கமாகக் கொண்டுள்ளது.

இன்பம்: இதுவும் ஷெ ஆதீன வெளியீடு, நம் மனத்திற்கு இன்பமளிப்பது யாது என்பதைபற்றி இன்பமாக விளக்கி, சமயந்தான் இன்பம் தருவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

நல்வழி: இதுவும் ஓர் ரசமான துண்டுப் பிரசுரம்.

—மார்க்கபந்து, ஸர்வதாரி ஆவணி

தருமபுரம் மடாதிபர் போனவாரம் ஒரு நாள் திடீரென நினைத்தமாத்திரத்தில் பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி தரிசனத்திற்கென்று பிரயாண மானாராம். அங்கு போய் ஆனந்தமாக ஸ்ரீ பழனியாண்டவனைத் தரிசித்து மகிழ்ந்து விட்டு, மறுநாள் பூஜைக்குத் தருமபுரத்திற்குத் திரும்பி விட்டாராம். அவரது ஆதீனப் பிரசார (மோட்டார்) வாகனம் தஞ்சை, திருச்சி, மதுரைஜில்லாக்களில் சைவ மதப் பிரசாரத்திற்காகச் சுற்றி வருகின்றதாம். மடாதிபரின் பழனி விஜய நினைவாகப் பழனி தண்டாயுதபாணி தோத்திரங்கள் என்ற பெயருடன், வெகு அழகாக அச்சிடப்பெற்ற அருணகிரியாரின் திருப்புகழ், கந்தரந்தாதி, கந்தரலங்காரம் ஆகிய பாடல்களைக்கொண்ட ஒரு பிரசுரத்தை, எல்லோருக்கும் இலவசமாக அளித்தார்களாம். அர்த்த புஷ்டியுள்ள, ஆத்மார்த்தமான இப் பாடல்களை அனைவரும் வாசிப்பது நலம்.

—நாரதர், 8—9—1948

Koviloor Acadamy

திருக்கொட்டையூர் திருப்பதிகம், திருநாவுக்கரசர் பாடியது. தருமபுர ஆதீன வெளியீடு எண் 168. கிடைக்குமிடம், தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம்.

—சுதேசமித்திரன், 12—9—48

The anniversary of the educational institutions run by the Dharmapuram Adhinam, was celebrated at Dharmapuram on September 11 with Mr. G. Subramanya Pillai in the chair.

—The Hindu, 15—9—48.

தருமபுர ஆதீனக் கல்விநிலையங்களின் ஆண்டு விழா.

தருமபுர ஆதீனத்தைச்சேர்ந்த கல்வி நிலயங்களின் ஆண்டுவிழா நேற்றுமாலை அண்ணமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் G. சுப்பிரமணியபிள்ளை தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வரவேற்புரைக்குப்பின் படிக்கப்பட்ட ஆண்டு அறிக்கைகளில், முன்னேறிவரும் நிலை தெளிவாக்கப்பட்டது. மாணவர்கள் சமஸ்கிருதம், தமிழ் மொழிகளில் அழகாக 'உரையாடல்' நடத்தினர். ஆரம்பப்பாடசாலை மாணவர் - மாணவியர் 'இசைப்பாடல் களுடன், தலைமையுரைக்குப்பின் விழா முடிவுற்றது.

இரவு, மாணவர், "சுந்தரர்" என்ற நாடகத்தை ஈசானசிவாசாரியார் தலைமையில், திறம்பட நடித்துக் காட்டினர்.

—தினத்தந்தி, 15—9—48.

Koviloor Acadamy

இன்பம்

எழுதியவர், தருமபுர ஆதீனக் கல்லூரிப்பேராசிரியர், ச. தண்டபாணி தேசிகர். தருமபுர ஆதீன வெளியீடு. எண் 164. தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயவரம்.

துன்ப நீக்கமும் இன்பப்பேறுமே மனித லட்சியம். இந்த இன்பம் போராடிப் பெறுவதன்று. வினையின் வன்மையை வென்றே பெறப்படுவது. அதற்குத்துணையாக நிற்பது கடவுள். அக்கடவுளை இன்பக்காலத்தும் எங்கும் என்றும் துணையெனக்காண்பதே சமயம். சமய உணர்ச்சி யின் வளர்ச்சிக்கு ஒரு ஒழுங்கு வேண்டும். சமய உண்மை களை உணர்ந்து மனிதநிலையிலே தெய்வத்தன்மையை அடை யும் போதே நிலைத்த இன்பம் ஏற்படுகின்றது. தேசிகர் இவ்வரிய உண்மைகளைச் சுருக்கமாக இந்நூலில் விளக்கு கின்றார்கள்.

—சுதேசமித்திரன், 23—10—48.

பாரதநாடு சுபிக்ஷத்திற்கு மஹாருத்திர ஜபம்

பாரதநாட்டில் சமாதானமும் சுபிக்ஷமும் ஏற்பட்டு நமது நாடு முன்னேற்றம் அடைய பிரபலஅறிஞர்களால் திருக்கடையூர் ஆலயத்தில் ஸ்ரீ அபிராமி ஸமேத அமிர்த கடேசுவரசுவாமி சன்னதியில் தருமபுர மடத்தின் 25-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமா சாரிய சுவாமிகளின் 35-வது ஆண்டு ஜன்மநக்ஷத்திர தினக் கொண்டாட்டத்தின் பொழுது தீபாவளி தினமாகிய நேற்று மகாருத்திர ஜபமும், மிருதயுஞ்ஜய ஹோமமும் நடத்திவைக்கப்பட்டது. ஆலயத்திலுள்ள பரிவார தேவதை

Koviloor Acadamy

களுக்கு விசேஷமாக அபிஷேக ஆராதனைகளும் ஆலய நூற்றுக்கால் மண்டபத்தில் திருமுறைச் சொற்பொழிவு களும் தேவஸ்தான தேவாரவகுப்பு ஆசிரியர், மாணவர் களின் தேவாரபாராயணமும் நடைபெற்றதோடு சைவத் திருமுறை என்னும் உரைநடை நூல், விழாமலராக வழங் கப்பெற்றது.

—சுதேசமித்திரன், 4—11—48.

பழநி தண்டாயுதபாணி தோத்திரங்கள்

தருமபுர ஆதீன வெளியீடு எண் 170. தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயவரம்.

90 பக்கங்களுக்கு மேலுள்ள இந்நூல் ஆதீனத்து ஸ்ரீ-ல-ஸ்ரீ 25-வதுமகாசந்நிதானம் பழநி யாத்திரைசெய்து தண்டாயுதபாணிக்கு அபிஷேக ஆராதனை செய்வித்து ஆராதனையின் போது நினைவுவெளியீடாக வழங்கப்பெற் றது. இதில் அருணகிரி நாதர் பாடிய பழனித் திருப்புகழ் பாட்டுகள் முழுதும் தொகுத்துத்தரப்பட்டுள்ளன. அன்றி யும் கந்தரந்தாதி, கந்தரலங்காரம், திருவகுப்புஆகியவற்றில் காணப்படும் சில பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள முருகன் புகழ்மாலையாகிய திருமுருகாற்றுப்படையில் காணப் பெறும் இத்தலப்பகுதி இந்நூலின் தொடக்கத்திலேயே சேர்க்கப்பட்டுள்ளது. பழனி சைவ சித்தாந்த சரபம் ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்களால் எழுதப்பெற்ற 'பழம் நீ' என்ற கட்டுரை நூலிறுதியில் காணப்படுகிறது. முருகதாசர்கள் பாராயணம் செய்வதற்கு ஏற்றது.

—சுதேசமித்திரன், 16—10—48.

Koviloor Acadamy

மாயவரம் ஸ்ரீ தியாக பிரம்ம சங்கீத வித்தியாசாலை

சங்கீத அபிவிருத்திக்காக மாயவரத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ள ஸ்ரீ தியாக பிரம்ம சங்கீத வித்தியா சாலை சங்கீத வித்வான் கானகலாதர மதுரை மணி அய்யரால் விஜயதசமி தினமாகிய நேற்று மாயவரம் முனிசிபல் ஹைஸ்கூல் சென்டரல் ஹாலில் திறந்து வைக்கப்பட்டது. நகரில் உள்ள பிரபலஸ்தர்களும் சங்கீத அபிமானிகளும் கூட்ட மாய் விஜயம் செய்திருந்தார்கள். தருமபுரம் மடத்தின் அதிபர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமா சாரிய சுவாமிகளிடமிருந்து சங்கீத கலாசாலை வெற்றிகர மாக நடைபெறவேண்டும் என்று அனுப்பி இருந்த ஆசிச் செய்தி கூட்டத்தில் படிக்கப்பட்டது. ராவ்பகதூர் வி. ராமச்சந்திர அய்யர் வைபவத்திற்குத் தலைமை வகித்தார். வக்கீல் ஸ்ரீ டி. எஸ். குப்புசாமி அய்யர் (வித்தியாசாலையின் தலைவர்) இந்நகரில் வித்யாசாலை ஆரம்பிக்கப்படும் நோக்கத்தையும், அதைப் பொது ஜனங்கள் ஆதரிக்க வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினர்.

—சுதேசமித்திரன், 13—10—48.

[ஆட்சி அறிக்கை - தருமபுர ஆதீன மூன்றுவது ஆண்டு அறிக்கை. தருமபுர ஆதீனம், மாயவரம்.]

தமிழுக்கும் சைவத்திற்கும் தக்க தொண்டாற்றலே தங்கடனெனக்கொண்டு பணியாற்றி வருகின்ற தருமபுர ஆதீனத்தார், சென்ற மூன்று ஆண்டுகள் செய்த சீரிய பணிகள் இவ்வறிக்கையில் இனிது விளக்கப்பட்டுள்ளன. நாட்டின் வளர்ச்சிக்கும் பொதுமக்கள் நலனுக்கும், மடங்க

Koviloor Acadamy

ளும் மடாதிபதிகளும் முட்டுக்கட்டையாயுள்ளனர் என்று சொல்லுகின்றவர்கள்கூட இவ்வறிக்கையைக் கருத்தூன்றிப் பார்ப்பார்களானால் வியப்படைவதுடன் இத்தகைய மடங்களும் மடாதிபதிகளும் இருக்கவேண்டியவர்களே என்பதை நிச்சயமாய் ஒத்துக்கொள்வார்கள். செயற்கரும் செயல்களால் சிறந்து விளங்கும் தருமபுர ஆதீனத்தாரின் திருப்பணிகளால் நமது சைவமுந் தமிழும் தழைத்தோங்கும் என மகிழ்வதுடன், மகா சந்நிதானம் அவர்களின் ஆட்சித் திறனையும் அறச்செயல்களையும் பாராட்டுகின்றோம்.

—தொண்டன், 1—11—48.

Mr. K. Somasundaram, Secretary, Chennai Kambar Kazhagam, and one of the organisers of the Conference announced that donations had been received from the following for holding the Conference: Raja Sri Muthiah Chettiar of Chettinad Rs. 1,000; Proprietors of "Kalki" Rs. 500; Dharmapuram Mutt Rs. 101; Tiruvavaduthurai Rs. 100; Tirupanandal Mutt Rs. 100 and Mr. A. M. M. Arunachalam Chettiar Rs. 100.

—Indian Express, 12—10—1948.

திருப்பாதிரிப்புலியூர் பதிகம் - தலச்சிறப்புடன்.

இத் திருப்பாதிரிப்புலியூர்த் தலத்திற்குரிய தேவாரப் பதிகங்களுக்கு ஒருவாறு பொருள் விளக்கமும் எழுதுவித்து, மேற்படி தலத்திற்குரிய திருப்புகழுஞ் சேர்த்து சிறிய பிரதிகளாகஅச்சிடுவித்து, தருமபுரஆதீன ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்கள், தமது ஜன்ம நட்சத்திர தினத்

Koviloor Acadamy

தன்று (1—10—48) அமிர்தகடேசுவரப் பெருமானுக்கு விசேஷ அபிடேகம் ஆராதனைகள் செய்வித்தபின், குறித்த தேவாரப்பிரதிகளையும் அன்பர்கட்குப் பிரசாதத்தோடு வழங்கச் செய்தார்களென அறியலானோம்; இது மேற்படி ஆதீனத்தின் 172-ம் வெளியீடாகும்.

"ஆட்சிமுறை" (1947—48)

இது மேற்படி தருமபுர ஆதீனம் 25-வது மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் மூன்றாவது ஆண்டு (1947-48) ஆட்சியறிக்கைவெளியீடாகும், இதன்கண் மேற்படி ஆதீனத்திற்குரிய பலதுறைகளின் நிர்வாக விபரங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன; இவற்றுள் பிரதானமானவை, திருப்பணி, சொத்துப்பரிபாலனம், குத்தகை, வாகனாதி அங்கங்கள், பொதுத்தருமம், கல்வியபிவிருத்தித் துறையைச்சேர்ந்த தேவாரப் பாடசாலை, நூல் வெளியீடுகளென்னும் இவற்றோடு, சமயப்பணி கிராமப் பிரசாரம் என்னுமிவைகளும், சித்தாந்த பாடப்புத்தகங்கள், சமூகத் தொண்டு முதலியனவும் இன்ன பிறவுமாம். 'இத்தருமபுர ஆதீனத்தினர் பலவருடங்களாகச் சைவத்தின் பொருட்டும் தமிழ் மொழியின் பொருட்டும் பல வகையான சற்கருமங்களின் பொருட்டும் பெரிதும் உழைத்து வருதல் சைவ மக்களும் தமிழ் மக்களும் நன்கு அறிந்ததாகும்; ஏனைய ஆதீனத்தினரும், இவ்வாதீனகர்த்தர்கள் போலத் தொண்டு செய்தல் நன்றாகும்.

—இந்துசாதனம் சர்வதாரிஹு புரட்டாசிமீ 30உ

Koviloor Acadamy

For peace and prosperity in India, a *mruthyanju homam* and a *maharudrajapam* were performed on a large scale at Sri Amirthakadeswaraswami Temple. Tirucadayur, Mayavaram taluk on October 30 on the occasion of the 35th birthday of H. H. Sri Subramanya Desika Gnanasambandha Paramacharya Swamigal the Head of the Dharmapuram Adhinam.

Hindu, 4—11—48.

திருவிசயமங்கைத் திருப்பதிகம்

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்களின் மாத ஜன்ம நக்ஷத்திரத்தன்று (30—10—48) திருவிசயமங்கை விசயநாதசுவாமிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் செய்தபோது இத்தலப் பதிகமும் பொருள் விளக்கமும் அடங்கிய அச்சிட்ட சிறு பிரதிகள் அன்பர்கட்கு வழங்கப்பட்டன. இது மேற்படி யாதீனத்தின் 174-ம் வெளியீடாகும்.

"சைவத் திருமுறைகள்"

இது திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25-வது மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஜன்ம நட்சத்திர (30—10—48) பெரு விழாமலராக வெளிவந்துள்ளது; வெளியீட்டெண் 175. இவ்வெளியீட்டின்கண் சைவத் திருமுறைகள் வரலாறு, திருமுறைகளின் வகை, திருமுறை யாசிரியர்கள் வரலாறு முதலிய அரிய விஷயங்கள் அடங்கியுள்ளன; விஷயங்கள் நல்ல வசன நடையில்

Koviloor Acadamy

ஆங்காங்கு மேற்கோள் விரவிய வண்ணம் எழுதித் தொகுத்து, தருமபுரம் ஞானசம்பந்தப் பதிப்பகத்தில் அழகுற அச்சிட்டு வெளிவந்துள்ளது. இந் நூலைத் தொகுத்தவர் திருவொற்றியூர் திருவாளர் ரா. சண்முக சுந்தரனாராவர்.

—இந்துசாதனம் 5—11—48.

அபிராமி அந்தாதி

[ஆசிரியர் ஸ்ரீ அபிராமி பட்டர்; உரை ஆசிரியர் வித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர். கிடைக்குமிடம் தருமபுர ஆதீனம், தருமபுரம். பக்கங்கள் 124]

தமிழ்ப்பணி செய்துவரும் தருமபுர ஆதீனத்தார் வெளியிட்டுள்ள பல நல்ல நூல்களில் இதுவுமொன்று. உணர்ச்சியும் உள்ளமுருக்கும் பக்தியும் சொல் நயமும் பொருள் நயமும் இப்பாடல்களில் நெஞ்சைக் கொள்ளை கொள்கின்றன. பாடல்களின் நயத்தையும் அழகையும் கண்டு அன்னையே சொக்கி தன் கருணை காட்டுவதை சற்று தாமதித்து வைத்தாளென்று ஸ்ரீ பட்டர் வரலாறு கூறுகிறது. ஸ்ரீ பட்டர் பிராமண குலத்துதித்த உத்தம பக்தர். அம்மையின் சன்னிதானத்தில் உள்ளம் உருகி பக்தி பரவச மேலிட்டுச் சமாதியிலிருக்குங் காலையில் தேஜஸ் அள்ளி வீசும் முகமுடைய இப் பெரியாருடன் அளவளாவக் கருதிய சரபோஜி மன்னன் 'என்ன திதி இன்று' என்று கேட்க தேவியின் வதனத்தை தியானித்து பக்தி வெள்ளத்தில் மூழ்கிய ஸ்ரீ பட்டர் பூரண சந்திரன் போன்ற அம்பாளின் வதனத்தைத் தவிர வேறெதுவுங் காணாதவராகையால்

Koviloor Acadamy

இன்று பௌர்ணமி என்று கூறிவிட்டார். கள்ளுண்ட பித்தன் என்று ஊரார் ஏசியதைக் கேள்விப்பட்டு இருவித அபிப்பிராயங்களிடை ஊசலாடிக் கொண்டிருந்த மன்னன் ஸ்ரீ பட்டர் தம்மை அலக்ஷியம் செய்துவிட்டதாக கோபித்துத் தக்கவாறு சிக்ஷிக்கிறேன் என்று போய்விட்டான். அப்போது தான் சமாதியிலே கலந்த பட்டர் தாம் செய்ததை உணர்ந்து தாயைத் துதிக்கிறார். பராசக்தி இவர் பாமாலையை இன்பத்துடன் சூடித் தன் காதிலணிந்துள்ள தோட்டினை வானவெளியிலே வீசி நிலவொளி உண்டாக்கி பக்தனுக்கும் அவர் பெருமை அறியாசரபோஜி மன்னனுக்கும் பௌர்ணமி காட்டுகிறாள். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பரமபக்தன் வாயிலிருந்து வந்த மகிமைபொருந்திய இந்த ஸ்தோத்திரத்தைத் தமிழருக்கு தந்துதவிய தருமபுர ஆதீனத்தார் சேவை நல்ல திருப்பணியேயாகும்.

அரும்பதங்கட்கு அர்த்தமும், பாட்டின் பொருளும் விருத்தியுரையும் இருக்கிறது தெய்வமே சொக்கிக் கேட்டு மகிழ்ந்த இந்த அந்தாதியைத் தமிழர் அவசியம் படிக்க வேண்டும்.

—தினமணி, 9—11—48.

SAIVA THIRUMURAIGAL: Manager Dharmapuram Adhinam Dharmapuram, Via. Mayavaram.

Hindu, 28—11—48.

வேளூர் செல்வமுத்துக்குமாருக்கு லக்ஷார்ச்சனை

புள்ளிருக்குவேளூரில் கந்தசஷ்டி உற்சவத்தை முன்னிட்டு 1—11—48 முதல் அநேக சிவநேசச் செல்வர்களின்

Koviloor Acadamy

பேருதவியால் செல்வமுத்துக் குமாரஸ்வாமிக்கு லக்ஷார்ச்சனை நடைபெற்று வந்ததில் கடைசி தினமாகிய 6-11-48ல் கந்தசஷ்டி தினத்தன்று தருமபுர ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது பூரண உபயமாய் அர்ச்சனை பூர்த்தி விழா இனிது நடத்திவைக்கப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தாமே ஸ்வாமிதரிசனத்திற்குஎழுந்தருளி பக்தர்களுக்குக் காட்சி தந்தருளினர் சென்னை ஸ்ரீ சுப்பிரமணிய முதலியார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஔவை துரைசாமிபிள்ளை முதலியோர் சமயப்பிரசங்கங்கள் நிகழ்த்தினர். வேளூர் கட்டளை விசாரணை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் பக்த கோடிகளுக்குள்ள இறை வழிபாட்டிற் காணப்படும் சிரத்தையைப் பாராட்டி அன்னோர் யாவரும் நீடூழி காலம் வாழ்க வென ஆசி கூறினர்.

சீகாழியில் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான ஸ்ரீ சட்டைநாதஸ்வாமி தேவஸ்தானம் கந்தசஷ்டித் திருநாளன்று பிரசார சபா மண்டபத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் வித்துவான் ஸ்ரீ க. வெள்ளைவாரணம் ‘பரிபாடலிற் கண்ட செவ்வேள் வழிபாடு’ பற்றிச் சொற்பொழி வாற்றினர்.

—சுதேசமித்திரன், 10—11—48.

சைவத் திருமுறைகள்

[ஆசிரியர்- - ரா. சண்முக சுந்தரன், கிடைக்குமிடம்:- தருமபுர ஆதீனம், தருமபுரம்; 63-பக்கங்கள்]

Koviloor Acadamy

சைவத் திருமுறைகள்பல. அத்திருமுறைகளின் பொது சிறப்பு இயல்புகளை எவரும் எளிதில் அறிகின்ற வகையில் எழுதுமாறு தருமபுர ஆதீனத்தார் கூறியபடி இப்புத்தகத்தை ஸ்ரீ ரா. சண்முகசுந்தரம் எழுதியுள்ளார். திருமுறைகள் என்பவை தோத்திரங்களின் தொகுதியாகும். இத்திருமுறைகள் சுமார் பன்னிரண்டென்று வகுக்கப்பட்டுள்ளது. இவை மொத்தம் 18090 பாட்டுக்களையுடையன. 27 ஆசிரியர்களால் அருளப்பட்டன. இத்தகைய விவரங்கள் சுருக்கமாகத் திருமுறையாசிரியர்கள் வரலாறுகள் முதலியவை இப்புத்தகத்தில் காணலாம்.

—தினமணி, 9—11—48.

அமைதி:- தருமபுர ஆதீன வெளியீடான, ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர், ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் எழுதிய அமைதி வரப்பெற்றோம். இந்நூலில் ஆசிரியர், வாழ்வில் அமைதியை நாடித்திரியும் ஒருவன் வாயிலாக இறைவனை வணங்குவதே அமைதி பெறும் வழியென்று விளக்கிக்காட்டித் தெய்வபக்தியும் நம்பிக்கையையும் வாசகர்களிடையே உண்டுபண்ணுகிறார். தற்காலச் சூழ்நிலையில் இதுபோன்ற நூல்கள் நாட்டிற்குப் பெரும்பயன் நல்குவதாகும்.

—செட்டிநாடு, சர்வதாரி ஐப்பசி 26௳

கந்தசஷ்டி விரதச் சிறப்பு

மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய தேவஸ்தான கந்தசஷ்டி விழா வெளியீடு. கிடைக்குமிடம் தருமபுர ஆதீனம். தருமபுரம். மாயவரம் வழி.

Koviloor Acadamy

கந்தசஷ்டி விரதத்தின் சிறப்பை மக்கள் அறிந்து அதைத் தக்கபடி அனுஷ்டிக்க வேண்டுமென்பதற்காகத் தருமபுர ஆதீனத்தார் கோரிக்கைக்கு இணங்க காஞ்சீபுரம் தருமபுர ஆதீனப் புலவர் ஸ்ரீ க. வச்சிரவேலு முதலியார் இந்த நூலை அழகாக எழுதியிருக்கிறார். இது இரண்டாவது பதிப்பாகும். விரதத்தின் சிறப்பு அனுஷ்டிக்க வேண்டிய முறை கந்தன் அவதாரம் முதலியவைகள் பற்றி இந்நூல் விளக்குகிறது. அன்பர்கள் பாராயணம் செய்வதற்குச் சௌகரியமாக இருக்கும் வண்ணம் முருகன் புகழ் நூலாகிய திருமுருகாற்றுப்படையும் இதன் விளக்கமும் இந்த புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

—தினமணி, 23—11—48.

காரைக்காலில் சமயப் பிரசாரம்

தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த மூன்று சமய பிரசாரகர்கள் நேற்று இங்கு விஜயம் செய்து அம்மையார் ஆலயத்தில் பிரசாரம் செய்தார்கள். இரண்டு பிரசாரகர்கள் சைவ சமயத்தைப் பற்றியும் ஸ்ரீ பாலசுப்பிரமணியம் தற்கால நிலைமையைப் பற்றியும் வெகு அழகாகச் சொற்பொழிவாற்றினார்கள்.

—தினசரி, 28—11—48.

உற்சவங்களில் சமயப் பிரசாரம்

தருமபுர ஆதீனத்துக்குள்பட்ட மாயவரம் குமாரக் கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கந்தசஷ்டி உத்ஸவத்திலும் மாயவரம் துலா உத்ஸவத்திலும் திருக்கடையூர்

Koviloor Acadamy

கார்த்திகை சோமவாரத்திங்களிலும் தருமபுர ஆதீனம் சமயப்பிரசார மோட்டார் வாகனத்தில் மடத்தின் திருக்கூட்டத் தம்பிரான்களாலும் தருமபுர ஆதீனம் கல்லூரி ஆசிரியர் மாணவர்களாலும் சைவசமயப் பிரசங்கங்களும் திருமுறைச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

—சுதேசமித்திரன், 25—11—48.

பொறையாற்றில் சைவ சமயப் பிரசாரம்

தருமபுர ஆதீனம் ஸ்ரீ பண்டாரசன்னதி ஆதரவில் வைத்தீஸ்வரன் கோவில் கட்டளைத் தம்பிரான் ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள் சிறிதுகாலமாகச் சைவசமயப் பிரசாரம் செய்து வருகிறார். பிரசாரத்திற்காகப் புதிய முறையில் தயார் செய்யப்பட்ட மோட்டாரில் ஒலிபரப்பி முதலிய கருவிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அவர் வித்வ கோஷ்டியுடன் நேற்று 4-மணிக்கு பொறையார் நாடார் உயர்தரப்பாடசாலைக்கு விஜயம்செய்து, சைவத்திருமுறை என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

ஸ்ரீ பாலசுப்பிரமணியப்பிள்ளை 'சைவ சமயத்தின் மாண்பு' என்பது பற்றிப் பேசினார். இரவு 7 மணிக்குத் தரங்கம்பாடி கடற்கரை பங்களாவில் ஸ்ரீ நடராஜ பிள்ளை, நடராஜமூர்த்தியின் திருநடனம் என்பது பற்றிப் பிரசங்கம் செய்தார். இன்று காலை பிரசார கோஷ்டியினர் நாகை சென்றனர்.

—தினசரி, 30—11—1948.

Koviloor Acadamy

தருமபுரம் பண்டாரசந்நிதி மதுரை விஜயம்.

தஞ்சாவூர் ஜில்லா தருமபுர ஆதீன பண்டார சந்நிதி இன்று பகல் மதுரைக்கு விஜயம் செய்தார். அவர் வருகைக்காக மதுரை மீனாட்சியம்மன் கோவில் எக்ஸிகியூடிவ் அதிகாரி ஸ்ரீ குமரன் நாயர் விசேஷ ஏற்பாடுகள் செய்திருக்கிறார்.

பண்டாரசந்நிதி நகருக்கு வெளியேயுள்ள திருவாப்புடையார் ஆலயத்தில் கோவில் மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார். பிறகு அவர் திருப்பரங்குன்றம் ஸ்ரீ சுப்பிரமணியர் கோவில், மதுரை நன்மை தருவார் கோவில், அழகர்கோவில் ஆகியவற்றுக்கு விஜயம்செய்தார்.

மாலை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவிலில் நடைபெற்ற கற்பூர தரிசனத்துக்குப் பண்டாரசந்நிதி வந்திருந்தார்.

—தந்தி, 16—12—48.

MADURAI TIRUPPATIKANGAL. (Published by Dharmapuram Adhinam). Madura has been glorified not only in the pages of history by the achievements of the distinguished Pandyan rulers but it has been sanctified by the hymns sung by most of the Tamil saints on the presiding deities. Goddess Meenakshi and God Sundareswara. Some of the most popular verses in Thevaram are traced to Madura. The Adhinam has done well to have brought these together in this publication with a brief but illuminating sketch of their historical background. Included in the pages are a few

Koviloor Acadamy

attractive pictures of Goddess Meenakshi as depicted by the devotees.

Hindu, 26—12—48.

திருப்பதிகங்கள் வரப்பெற்றோம்

திருச்சிவபுரம் திருப்பரங்குன்றம் ஆகிய ஸ்தலங்களின் விசேஷங்களைச் சுருக்கமாகக் கூறி இந்த ஸ்தலங்கள் பற்றி திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்தி ஆகிய ஸ்வாமிகள் பாடிய பாடல்கள் சகிதமாக தருமபுர ஆதீனத்தார் வெளியிட்டுள்ள திருப்பதிகங்கள் வரப்பெற்றோம். இதே ஆதீனத்தார் வெளியிட்டுள்ள மதுரைத் திருப்பதிகங்கள் என்ற சுமார் நூறுபக்கங்களுக்கு மேல் உள்ள புத்தகமும் வரப்பெற்றோம். இதில் மதுரை பற்றிய வரலாறுகள் இந்நாட்டில் தோன்றிய பெரிய மகான்கள் அந்த ஸ்தலத்தைப் பற்றிப் பாடிய பாடல்கள் பல ஆகியவைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பக்தகோடிகளுக்கு இன்பம் பயக்கும் நூல்கள் இவை.

—தினமணி கதிர் 25—12—48.

திருவைகாவூர்த் தலச்சிறப்பு

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நக்ஷத்திர திருநாட்களில் திருப்பதிகம் பெற்ற சிவ தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கி வருதல்போல இம்மாதத்திலும் 26—11—1948 அன்று திருவைகாவூர் வில்வவனநாத சுவாமி தேவஸ்தானத்தில்

Koviloor Acadamy

அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகம் அடங்கிய இவ்வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்படலாயிற்று.

—இந்துசாதனம் 3—12—48.

மதுரைத் திருப்பதிகங்கள்

[தருமபுர ஆதீன வெளியீடு எண் 179.]

சைவமுந் தமிழுந் தனிச்செங்கோலோச்ச தக்க பணிகளை காலத்திற்கேற்ப புரிந்து வரும் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 13-12-48 சோமவாரத்தன்று மதுரைக்கு எழுந்தருளிய நினைவு மலராய் இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூலின்கண் மதுரை சரித்திரக் குறிப்புக்கள், மதுரையைப்பற்றிய நால்வர்பாடிய பாடல்கள், பிற பாடல்கள் முதலியன அடங்கியுள்ளன. இந்நூலைத் தக்க முறையில் பதிப்பித்துதவிய தருமபுர ஆதீனப் புலவர் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களின் அருமுயற்சி பெரிதும் பாராட்டற்குரியது. இதுபோன்ற நூல்கள் வெளியீடுகளாலும், தக்க பிற அருஞ்செயல்களாலும் மக்களிதயத்தில் இடம்பெற்ற தருமபுர ஆதீனம் தனிப்புகழோடிலங்க ஆலவாயண்ணலின் திருவருளை வேண்டுகின்றோம்.

—தொண்டன் 1—1—49.

மதுரைத் திருப்பதிகங்கள் தருமபுர ஆதீன வெளியீடு எண்.179. மதுரைத் தலச்சிறப்பு என்ற வசனப்பகுதி 70 பக்கங்கள். திருப்பதிகங்கள் பகுதி 56 பக்கங்கள்.

Koviloor Acadamy

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கார்த்திகைத்திங்கள் பன்னிரண்டாம்நாள் மதுரைச் சொக்கநாதர் அடியிணை பரவ எழுந்தருளிய பொழுது அன்புமலராக வெளியிடப்பட்டது. இந்நூலைத் தயாரித்து வசனப்பகுதியை எழுதியவர் ஆதீனப் புலவர் ச. தண்டபாணி தேசிகர்.

—சுதேசமித்திரன் 4—1—49.

தருமபுர ஆதீனம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள்.

தருமபும் ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழக்கம்போல் ஞாயிற்றுக்கிழமையன்று திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் ஆலயம், திருச்சி உய்யக்கொண்டான் ஸ்ரீ உஜ்ஜீவநாத சுவாமி கோவில், ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ ரங்கநாதர், திருவானைக்காவல் ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் ஆலயங்களுக்குச்சென்று சுவாமி தரிசனம் செய்து வந்தார்கள். எல்லா ஆலயங்களிலும் சகல மரியாதைகளுடன் உபசரிக்கப் பட்டார்.

—ஜோதிமணி, சர்வதாரி புரட்டாசி 1உ

தருமபுர ஆதீனக்கர்த்தர் நன்கொடை.

மஹாத்மா காந்தி தேசிய ஞாபகார்த்த நிதி தஞ்சை ஜில்லா கமிட்டியின் தலைவர் ஸ்ரீ வி. நாடிமுத்து பிள்ளையும் மேனங்குடி பிரபல மிராசுதார் ஸ்ரீ சி. மருதவாணம் பிள்ளையும் ஷை கமிட்டியின் மற்ற அங்கத்தினர்களும் மாயவரம் தாலூகாவில் நேற்று முன்தினமும் நேற்றும் சுற்றுப்

Koviloor Academy

பிரயாணம் செய்த தருமபுரம் ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஷை நிதிக்கு அளித்த நன்கொடை ரூ. 25,000த்தையும் திருவாவடுதுறை மடாதிபதி ஸ்ரீ அம்பலவாண பண்டார சன்னதியின் நன்கொடையாகிய ரூ. 25,000 த்தையும் பெற்றுக்கொண்டனர்.

சுதேசமித்திரன் 12—4—49.

SAIVATTIRUMURAIKAL: (Published by Dharmapuram Adhinam, Dharmapuram (Via Mayavaram. S I. R.

Saivattirumurais are twelve in number composed by twenty-seven members of the Saiva clan including the first and foremost Saiva Canons like Sambandhar, Appar and Sundarar. This brochure which was published on the Swamiji's Janma Nakshatra Day gives a glimpse of the Tirumurais indeed. The well-known story portions that occupy the major part of the book account for the burk of the brochure.

The word *Sammita* is misconstrued and used as *Samhita*. It ought to be *Prabhusammita Suhirutammita* and *Kantasasmmita* as it is understood by the *Alamkarikas*. Again the word *Brahmana*, a division of the *Yajurveda*, is used wrongly as *Brahmanyakam* The get-up and printing are good as usual.

The Hindu, 9—12—1948.

Koviloor Acadamy

1. திருவிசய மங்கைத் திருப்பதிகங்கள். 2. சைவத் திருமுறைகள் (உரைநடை):— தருமபுர ஆதீனம். தருமபுரம். மாயவரம். திருவொற்றியூர், ரா. சண்முகசுந்தரன் இயற்றிய சைவத் திருமுறைகள் மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஜன்ம நக்ஷத்திரப் பெருவிழா மலராக வெளியிடப்பட்டது. 63 பக்கங்கள். திருமுறைகளின் பாடற்றொகை அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

தருமபுர ஆதீன வெளியீடுகள் :—(1) அமைதி. வெளியீடு எண் 176 எழுதியவர்: ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் ச. தண்டபாணி தேசிகர். பக்கங்கள் 21 (2) கந்தசஷ்டி விரதச்சிறப்பு (திருமுருகாற்றுப்படையுடன்) காஞ்சிபுரம் தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர், ஸ்ரீ க. வச்சிரவேலு முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. ஆதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் கந்தசஷ்டி விழாமலராக வெளியிடப்பட்டது.

—சுதேசமித்திரன், 11—12—1948.

* * மதுரைநகர் அரசியல் எழுச்சியிலே தலைதூக்கி நிற்கிறது. எல்லாவற்றையும் விட முக்கியமானது மதுரையில்தான் ஆலயப்பிரவேசம் நடைபெற்றது. இந்த ஒரே காரணத்தினாலேதான் சைவ மடாதிபதிகளில் முதன்மைவகிக்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக

Koviloor Acadamy

ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (25-வது மஹா சந்நிதானம்) விஜயம் செய்ய நேரிட்டது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகள் விஜயம் நாட்டின் சரித்திரத்திலேயே மிக மிக முக்கியமானதாக எதிர்காலத்தில் மதிக்கப்படுமென்று நாம் சோசியம் கூறுகிறோம். ஏனெனில் சைவ வழிபாடுகளையும் ஸ்ரீ-ல-ஸ்ரீ திருவுள்ளக்குறிப்பின் வண்ணம் திருப்பதிகம் பெற்ற சிவஸ்தலங்கள் தோறும் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, ஆராதனை காலத்து அவ்வத்தலத்திற்குரியதிருப்பதிகங்களை முறையாக ஓதச்செய்து, கற்பூர ஆராதனை செய்யச் செய்தும், மற்றும் சமயப் பிரசாரம் செய்வித்தும் வருவதாகத் தெரிகிறது.

மதுரைக்கு இம்மாதம் 13உ கார்த்திகைமீ 28உ கடைசி சோமவாரம் விஜயம் செய்வதாயும் ஸ்தலக்கோவில் அதிகாரிகள் தக்க மரியாதைகளுடன் வரவேற்க ஏற்பாடு செய்துள்ளாரென்றும் அறிகிறோம்.

மதுரை வாசிகள் திரளாகக்கூடி ஸ்ரீலஸ்ரீ சந்நிதானம் செய்யப்போகும் சமயப் பிரசங்கத்தைக் கேட்டு ஆனந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் மதுரை வருகை நல் வருகையாருக. நாம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் மதுரை விஜயம் செய்வதைப் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

—இந்தியத்தாய், 12—12 48.

Koviloor Acadamy

தருமபுர ஆதீன பண்டாரசன்னதிகள் மதுரையில் பல ஆலயங்களுக்கு விஜயம் செய்தார்,

தஞ்சாவூர் ஜில்லா தருமபுரம் ஆதீனம் மடாதிபதி நேற்று காலை 9-மணிக்கு திருவாப்புடையார் கோவிலுக்கு விஜயம் செய்தார். மீனாட்சி அம்மன் கோவிலில் நிர்வாக அதிகாரி வி. குமரன் நாயரும், ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானம், கள்ளழகர் தேவஸ்தானம் ஆலோசனைக் கமிட்டி அங்கத்தினர்கள் ஏ. சிதம்பர முதலியார் என்ற பரமசிவ முதலியார், பி. பசுபதி முதலியார் ஆகியவர்களும், மற்றும் தேவஸ்தானப் பட்டர்களும் மடாதிபதியை வரவேற்று அவரிடம் ஆசிப்பிரசாதங்கள் பெற்றுக்கொண்டார்கள். ஒரு போட்டோ படமும் பிடிக்கப்பட்டது,

தேவஸ்தான சிப்பந்திகளுடனும் மேற்கூறிய 2 ஆலோசனைக் கமிட்டி அங்கத்தினர்களுடனும் அழர்கோவிலுக்கு மடாதிபதி சென்றார். அங்கு விசேஷ பிரார்த்தனை நடத்தப்பட்டது. பக்தர்களுக்கு மடாதிபதி பிரசாதம் வழங்கினார்.

சரியாக 12 மணிக்கு மதுரை திருஞான சம்பந்த மூர்த்தி மடத்தில் பண்டாரசன்னதியும், தருமபுர ஆதீன மடாதிபதியும் கொலுவீற்றிருந்தார்கள்.

அப்பொழுது மதுரை தமிழ்ச்சங்கம், திருஞானசம்பந்தர் மடம், பொதுமக்கள் சார்பாகத் தருமபுர ஆதீன மடாதிபதிக்குப் பல வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. மதுரை ஜில்லா போர்டு கல்வி அதிகாரி

Koviloor Acadamy

சங்கரலிங்க முதலியார், நகரசபை அங்கத்தினர் பரமசிவ முதலியார், சர். பி. டி. ராஜன். மீனாட்சியில் கரு. முத்து தியாகராஜ செட்டியார், வெள்ளியக்குன்றம் ஜமீன்தார் மற்றும் நகரப் பிரமுகர்களும் அந்த வரவேற்பில் கலந்து கொண்டார்கள். கோவில் நிர்வாக அதிகாரி, தேவஸ்தான சிப்பந்திகள் ஆகியோர் மடாதிபதிக்குக் கோவில் மரியாதைகளை அளித்தார்கள்.

மாலையில் மாரியம்மன்கோவில் தெப்பக்குளம், திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோவில், பழைய சொக்கநாதர் கோவில் ஆகியவற்றிற்கு மடாதிபதி விஜயம் செய்தார்.

—தினச்செய்தி, 15—12—48.

HEAD OF DHARMAPURAM ADHINAM IN MATHURAI

The Pandarasannidhigal of the Dharmapuram Adhinam visited Madura today and was received with temple honours at Tiruvappudaiyar Koil. He was taken to the Tirugnanasambanda Pandarasannidhigal Mutt. After special prayers and poojas addresses by the Devasthanams of the Madura Sri Meenakshisundareswarar. Sri Kallalagar and other institutions were presented to him. He then visited the Alagrar temple where a special reception was given to him under the direction of Mr. G. V. Bhagavathi, Executive officer.

Koviloor Acadamy

In the afternoon, the Pandarasannidigal visited the Mariamman Teppakulam Subramaniaswami shrine at tirupparankundram the Nanmaitharuvar temple and finally worshipped at the Sri Meenakshisundareswarar temple —

—The Hindu, 16—12—48.

சைவத் திருமுறைகள்.

சைவம் பரப்பி வரும் திருத்தருமபுர ஆதீனத்தின் மகா சந்நிதானம் அவர்களின் திருவுள்ளக் குறிப்பின்படி வெளியிடப்பெற்ற நூல். திருமுறைகளின் பெருமையையும் பன்னிரு திருமுறைகளின் விவரங்களையும், அவைகளில் முதல் ஏழு திருமுறைகளின் ஆசிரியர்களுடைய வரலாறு முதலியவைகளையும் இந்நூலில் நன்கு உணரலாம். சைவத் திருவினர் ரா. சண்முகசுந்தரனார் அவர்கள் நல்ல உரை நடையில் இயற்றியுள்ளதைப் பாராட்டுகிறோம்.

—குருகுலம்.

சைவ சித்தாந்த முயற்சிக்கு ஆதீனம் முயற்சி

சைவசித்தாந்தப்பயிற்சி வகுப்பு திருவாரூர் ராஜாங்கக் கட்டளையில் சுமார் ஒருமாத காலமாகத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான மேற்படி கட்டளைவிசாரணை ஸ்ரீ நாகலிங்கத்தம்பிரான் சுவாமிகள் பெரும் முயற்சியின் பேரில் சுமார் 15-மாணவர்கள் வரையில் சைவ சித்தாந்தப் பயிற்சி பெற்று வருகின்றனர். மேற்படி பயிற்சிக்கு

Koviloor Acadamy

வேண்டிய சித்தாந்த புத்தகங்கள் ஆதீன கர்த்தரால் இலவசமாக அளித்து வேண்டிய உதவி புரிந்து வருவது பாராட்டுவதற்குரியது.

—தினசரி 22—1—49.

திருப்பழனத் திருப்பதிகங்கள். தருமபுர ஆதீனம். வெளியீடு எண் 182.

திருப்பழனத் தலச்சிறப்பும், அப்பூதியடிகள் சரிதமும் முதலில் கொடுக்கப்பட்டுள்ளன. திருஞானசம்பந்த சுவாமிகளின் சிலதிருப்பதிகங்களும், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பதினொராந்திருமுறை, திருத்தொண்டர் புராணம் முதலியவைகளிலிருந்து ஒவ்வொரு பாட்டும் பதிகங்களுக்குப் பொருள் விளக்கமும் கொடுக்கப்பட்டு உள்ளன.

—தினசரி 30—1—49.

காந்திஜி தினத்தில் அன்னதானம்

காந்திஜியின் முதல் வருட சிரார்த்த தினத்தை முன்னிட்டு மகாசந்நிதானம் இன்று ஏழைகளுக்கு அன்னதானம் செய்தார். காந்திஜியின் நினைவுமலராக 'திருக்குறள் கதைகள்' என்னும் புத்தகத்தை அச்சிட்டு எல்லோருக்கும் இலவசமாக வழங்கியுள்ளார்.

—பாரததேவி 31—1—49

Koviloor Acadamy

CHIDAMBARAM

His Holiness Subramania Desika Gnanasambanda Paramacharya Swamigal of Dharmapuram Mutt arrived in Chidambaram on January 29. The next day His Holiness worshipped the 'Thillai Kaliamman' and installed the silver Thiruvachigai for the Kali Amman. Later, he went to the Sabhanayakar Temple and worshipped God Nataraja and Goddess Sivakami Amman and Sri Govindaraja and his consort. He also offered a gold and a silver sombu, for the performance of Abishegam and a jewelled Haram to God Nataraja. Archanas and Abishekam, to the presiding deities of the temple were also performed on a grand scale His Holiness honoured the Podu Dikshathars by having Sanmanams, His Holiness also visited the Annamalai University where he was received by Dr. S. G. Manavala Ramanujam, Vice-Chancellor of the University and taken round the University buildings. In commemoration of Ghandhiji's death anniversary, His Holiness had published two books entitled 'Tirukkural with Stories' and Pathiga Veliyeedu.

—The Hindu 3—2—49.

தருமபுர ஆதீனத்தார் சிதம்பர விஜயம்

காந்தி தினத்தன்று அன்னதானம் செய்தார்

தருமபுர ஆதீனம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்தபரமாசாரிய சுவாமிகள் நேற்று சிதம்பரத்திற்குத்

Koviloor Acadamy

தன் பரிவாரங்களுடன் காலை 6 மணிக்குத் தில்லையம்மன் கோயிலுக்கு விஜயம் செய்தார்.

பிறகு வெள்ளிப் பல்லக்கில் பட்டணப் பிரவேசமாகக் கிளம்பி, திருவிடைமருதூர் ஸ்ரீ வீருசாமி, திருவீழிமிழலை சகோதரர்கள், செம்பனார்கோயில் சகோதரர்கள் நாதஸ்வர வாத்தியம் வாசிக்க ஸ்ரீ நடராஜர் கோயிலுக்கு விஜயம் செய்தார். கோயில் தீக்ஷிதர்கள் 21 அதிர்வெடிகள் முழங்க எதிர் கொண்டு வரவேற்றார்கள்.

அதுசமயம் 64 பவுன் மதிப்புள்ள தங்கக் கலசம் ஒன்றும், வெள்ளிக்கலசம் ஒன்றும் (ஆக மதிப்புரூபாய் ஏழாயிரம்)சுவாமிக்கு அபிஷேக கலசமாக உபயோகித்துக் கொள்ள நன்கொடையளித்தார்.

தீக்ஷதர்களுக்கு ஆடையும் தக்ஷிணையும் வழங்கினர். பிறகு ராஜா சர் முத்தையா செட்டியார் விடுதிக்கு வந்தார்.

ராஜா சர். எம். ஏ. முத்தையா செட்டியார் இன்று தன் விடுதியில் அவருக்கு விருந்து நிகழ்த்தினர். பிறகு மாலை 6-மணிக்கு அண்ணாமலை சர்வ கலாசாலைக்கு விஜயம் செய்தார்.

மற்றும் குறிப்பிடத்தக்க இடங்களுக்கு விஜயம் செய்து திரும்பினர். காந்திஜி நினைவு குறித்து திருக்குறள் கதைகள் என்றநூலை அச்சிட்டு வழங்கினர்.

—தினசரி—3—2—49

Koviloor Acadamy

தருமபுர சந்நிதானம் விஜய நிகழ்ச்சிகள்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இன்று அதிகாலையில் விஜயம் செய்தார்.

காலை 6 மணிக்கு, ஸ்ரீ தில்லையம்மன் கோயிலுக்கு விஜயம் செய்தார். கோயில் மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீ வி. எம். கல்யாணசுந்தர நாடார் சந்நிதானத்தை வரவேற்று, ஸ்ரீ அம்பாள் சந்நிதிக்கு அழைத்துச்சென்று அர்ச்சனை ஆரா தனைகள் செய்துவைத்தார்.

ராஜா சர் எம். ஏ. முத்தையாசெட்டியார் விடுதியில் இருந்து காலை 8-30 மணிக்கு, சந்நிதானம், திருவிடைமருதூர் ஸ்ரீ வீருசாமிபிள்ளை திருவீழிமிழலை சகோதரர்கள் செம்பனார்கோயில் சகோதரர்கள் நாதசுரங்கள் வாசிக்க, ஸ்ரீ நடராஜர் கோயிலுக்குச் சென்றார்.

பன்னிருதிருமுறைகளுக்கும் அர்ச்சனைகள் நடந்தன. காலை 2-வது காலபூஜைக்கு சுமார் இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள அபிஷேக சாமான்களைக் கொடுத்து உதவினார்.

64 பவுன்மதிப்புள்ள தங்க அபிஷேக கலசம் நன்கொடை

64 பவுன் இடையுள்ள தங்க அபிஷேககலசம் ஒன்றும் வெள்ளி அபிஷேக கலசம் ஒன்றும் (ஆக மதிப்பு ரூபாய் 7000-ம்) தீக்ஷிதர்களிடம் அளித்தார்.

Koviloor Acadamy

மதுரைத் திருப்பதிகங்கள் மதுரைத் தலத்தின் சிறப்பையும், பழைய நூல்களில் மதுரையைப்பற்றி கூறப் பட்டுள்ள குறிப்புகளையும், பாண்டிய நாட்டு அரசியல் வரலாற்றையும், இந்நூல் சுருங்கக்கூறி விளங்க வைக்கின்றன. நூலின் பிற்பகுதியில் மதுரைபற்றிய திருப்பதிகங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

சைவத்திருமுறைகள்: உரை நடை. 'திருஎன்பது சிவத்தைக் குறிக்கும். முறை என்பது நெறி என்று விளக்கப் பட்டது...திருமுறை என்பது சிவத்தை யடையும் நெறி என்று பொருள்படும். சைவத் திருமுறைகள் யாவும் சிவ பிரானை யடையும்வழிகளைக் கற்பிப்பனவேயாகும்' இத் திருமுறைகள் பற்றிய விவரத்தை இந்நூலின்மூலம் படித்து அறியலாம். தருமபுர ஆதீனத்தார் இதை வெளியிட்டி ருக்கின்றனர்.

1. திருவைகாவூர்த் திருப்பதிகம்.
2. திருப்பரங்குன்றத் திருப்பதிகங்கள்
3. திருவிசயமங்கைத் திருப்பதிகங்கள்
4. திருச்சிவபுரத் திருப்பதிகங்கள்
5. அமைதி (எழுதியவர்; ச. தண்டபாணிதேசிகர்)

இந்த ஐந்து சிறு நூல்களும் வரப்பெற்றோம். இவை தருமபுர ஆதீனத்தாரால் வெளியிடப்பட்டவை. ஒவ்வொரு திருப்பதிகத்திலும் ஸ்தலச்சிறப்பும் குறிக்கப்பட்டிருக் கிறது. (கிடைக்குமிடம்; தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயவரம் வழி.)

— வீரகேசரி 13—2—49.

Koviloor Acadamy

தருமபுர ஆதீன வெளியீடுகள்: திருச்சிவபுரத் திருப்பதிகங்கள் வெளியீடு எண் 178. சுந்தரர், அப்பர் இயற்றியன. 2. திருப்பரங்குன்றத் திருப்பதிகங்கள். வெளியீடு எண் 180. சம்பந்தர் சுந்தரர் இயற்றியன. 3. திருவைகாவூர்த் திருப்பதிகம் சம்பந்தர் அருளியது.

திருவடகுரங்காடுதுறைத் திருப்பதிகம்: சம்பந்தர் இயற்றியது. தருமபுர ஆதீனம் வெளியீடு எண் 181.

—சுதேசமித்திரன் 28—2—49.

தருமபுரத்தில் லக்ஷார்ச்சனை.

நம் நாட்டின் க்ஷேமத்துக்காகவும் சுபிக்ஷத்துக்காகவும் தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீஸ்வர ஸ்வாமிக்குத் தருமபுர ஆதீனத்தின் அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட லக்ஷார்ச்சனை ஏராளமான பொருட்செலவில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அச்சமயம் ஏழைகளுக்கு அன்னமளிக்கப் பட்டதோடு லக்ஷ தீபமும் போடப் பட்டது.

—சுதேசமித்திரன், 14—2—49.

மாயவரத்தில் லக்ஷார்ச்சனை.

நம் நாட்டின் சுபிக்ஷத்துக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் இந்நகர் ஸ்ரீ வதான்யேசுவரஸ்வாமி கோயிலில் ஸ்ரீ குருமூர்த்தியாக விளங்குகின்ற ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு ஜனவரி 20-ந்தேதி தொடங்கி நடைபெற்ற லக்ஷார்ச்சனை

Koviloor Acadamy

கள் நேற்றோடு முடிவடைந்தன. நேற்று மேற்படி கோயிலில் தருமபுர ஆதீனத்தின் அதிபர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் பிரபல தமிழ்ப்பேராசிரியர்கள் தம்பிரான்கள் தருமபுர ஆதீனம் கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி ஆசிரியர், மாணவர் ஆகியவர்களால் உபந்நியாசங்களும் நடைபெற்றன.

—சுதேசமித்திரன், 15—2—49.

For peace and prosperity in India. Laksharchanas were performed to Sri Gurumurti in the local Sri Vellanathaswami Temple from January 20 to February 8, On February 8, archanas and abishekams were held, and discourses delivered in the temple. The archanas and discourses were arranged by H. H. Sri Pandarasannadhi of the Dharmapuram Mutt.

The Hindu, 15—2—49

சிதம்பரம்: தருமபுர ஆதீன வெளியீடு எண் 184. பதிகங்களுடன் கூடிய இந்த நூலை எழுதியவர்: வித்துவான் சு. தண்டபாணி தேசிகர். வசனம் 179 பக்கங்கள். பதிகங்கள் 40 பக்கங்கள், சேர்க்கை 16 பக்கங்கள். தீர்த்தங்கள், தலங்கள், மூர்த்திகளின் படங்களுடன் கூடியது.

இது தில்லையின் விரிவானதொரு வரலாறாகும். தில்லைப் பெருங்கோயிலின் வைதிக சைவ பௌராணிக சரித்திரகால

Koviloor Acadamy

நிலைகளை விளக்கும் வரலாற்று நூலாக இருப்பதுடன் கோயிலின் பேருண்மைகளை உணர்த்தும் அறிவு நூலாகவும் இது விளங்குகிறது. ஆசிரியர் தமிழ் நூல்களில் பரந்து கிடக்கும் குறிப்புக்கள் பலவற்றையும் சுமார் 200 கல்வெட்டுக்கள் அறிவிப்பதையும் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டுள்ள பல விஷயங்களையும் பிரயாசையுடன் சேகரித்துத் தொகுத்திருக்கிறார். இத் தலத்திற்குரிய பாடல்களும் இத்தலத்துடன் தொடர்புற்ற பெரியார்களின் வரலாறுகளும் தலத்தின் தொன்மை, தலத்தின் அமைப்பு, தலத்திலுள்ளகோயில்கள், தீர்த்தங்கள், மூர்த்திகள், மண்டபங்கள், சிற்பவடிவங்கள் இவைபற்றிய குறிப்புகளும் யாவும் இடம்பெற்றுள்ளன. தமிழ்மக்களுக்குப் பெரிதும் பயன்படும் இந்நூலை வெளியிட்டுதவிய தருமபுர ஆதீன மகாசந்நிதானத்தைப் பாராட்டுகிறோம்.

—சுதேசமித்திரன், 11—4—49

நீதிநெறிவிளக்கம்: ஆசிரியர் திருக்கயிலாயபரம்பரைத்தருமபுரஆதீனம் ஸ்ரீமத் குமாரகுருபரசுவாமிகள் இவ்வாதீன வித்துவான் காழிசிவ கண்ணுசாமிப்பிள்ளை அவர்களால்தொகுக்கப்பெற்ற உரைவளத்துடன் கூடியது. தருமபுரஆதீன வெளியீடு எண் 54. இரண்டாம்பதிப்பு 1949. பக்கங்கள் 415.

இவ்வெளியீட்டின் உவப்புரையில் ஸ்ரீமத் முத்துக்குமாரதம்பிரான்சுவாமிகள் கூறும்வண்ணம் குமரகுருபர சுவாமிகளின் நீதிநெறிவிளக்கம் நூற்றிரண்டு வெண்பாக்களில்

Koviloor Acadamy

தெய்வத் திருக்குறளின்கணுள்ள ஆயிரத்து மூந்நூற்று முப்பதுகுறளின் பொருளையும் வடித்தெடுத்து விளக்கு கிறது. இந்தஅரியநூலைச் சாமான்ய நூலறிவுள்ள தமிழ் மக்களும் சுவையுடன் படித்துப் பயனடையவேண்டி, தரும புர ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் அவர்கள் விரிவான உரைத்தொகுப்புடன் பதிப்பித்து வெளியிட உத்தர விட்ட தற்கிணங்க திரு கண்ணுசாமி பிள்ளையவர்கள் மிகுந்த பிரயாசையுடன் தம்பணியை நிறைவேற்றியுள்ளனர். நேரானபதவுரை அந்வயம்என்ற கொண்டுகூட்டுப்பொருள் கோள்முறைகருத்துரை கீழ்க்கணக்கு நூல்களில் காணும் ஒத்தகருத்துடைய மேற்கோள்கள். பலஉரைநூல்களின் சிறப்புரைகளும் கருத்துக்களும் ஆங்கில மொழிபெயர்ப்பு களிற் சிறந்தனவாகக் கருதப்படுபவை ஆகியயாவும் ஒவ் வொரு செய்யுளின் கீழும் தரப்பட்டுள்ளன.

இந்த மிக உபயோகமான வெளியீட்டைத் தமிழ் நாட்டுக்களித்த ஆதீனத்தை எவ்வளவு போற்றினுலும் தகும். தமிழ்இலக்கியத்திலுள்ள சிறந்தநூல்களை இம்மாதிரி யான உரையுடன் வெளியிடுவது நலம்.

—சுதேசமித்திரன், 11—4—49

செம்பரம்: திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவந்த சிறந்த செந்தமிழ் உரை நடை நூல். சைவப் பெருமக்கள் பெரிதும் வழிபாடாற்றும் இத்திருத்தலத்தின் பழைமை, பெருமை, அமைப்பு முதலி

Koviloor Acadamy

யவை பல்லாற்றானும் ஆராய்ந்து தெளிவாய் விளக்கப் பட்டுள்ளன. மற்றும் இத்தலத்திலுள்ள திருக்கோயில்கள் மூர்த்திகளின் சிறப்பும், இத்தலத்தைப்பற்றிப்பாடிய அருட் புலவர்கள், அன்பர்கள், அருணூல்கள், கல்வெட்டுகள்முதலி யவைகளும் தொகுத்துரைக்கப் பட்டுள்ளன. இந்நூலிறுதி யில் இத்தலத் தேவாரம், திருவாசகம் முதலிய திருப் பனுவல்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. இந்நூலை ஆக்கிய ஆசிரியரவர்களின் புலமைத்திறனும், பேருழைப்பும் அறிஞர்களால் புகழ்ந்து பாராட்டத்தக்கன.

திருநெய்த்தானத் திருப்பதிகங்கள்: இதுவும், ஷை ஆதீனத்திலிருந்து வெளிவந்துள்ளது. காவிரி நதியின் வடகரையில் உள்ளதும், திருவையாறுசப்தஸ்தானத் தலங் களுள் ஒன்றானதுமான திருநெய்த்தானத் திருத்தலத்தைப் பற்றிய தேவாரப்பதிகங்கள், பாசுரங்களின் திரண்ட பொருள் முதலியவை யடங்கியுள்ளன.

—யதார்த்தவசனீ.

மதிப்புரைகள்

தருமபுர ஆதீனப் பிரசுரங்கள்

நீதிநெறி விளக்கம்.— குமர குருபர சுவாமிகள் அருளிச்செய்த இச்சிறந்த நூல் தமிழ்மொழிக்கே ஒரு அணிகலன் போன்றது. இந் நூலில் சில பாடங்களை யேனும் மனப்பாடம் பண்ணாத தமிழ்மாணவர்கள் இல்லை என்றால் மிகையல்ல. இதுவரை தமிழிலும் ஆங்கிலத்திலும்

Koviloor Acadamy

வெளிவந்த பதினாறு பதிப்புக்களையும் ஒத்திட்டு "வேரி யோரம்" என்ற ஆங்கிலப்பதிப்பு முறையில் இப்பதிப்புத் தான் முதன் முதலில் வெளிவந்திருக்கிறது. ஆதீனத்தார் இதனை இரண்டாம் முறையாகப் பதிப்பித்ததே இந்நூலை மக்கள் ஆதரித்ததைக் குறிக்கின்றது. நான்கு பெரியார் கள் இயற்றிய ஆங்கில மொழிபெயர்ப்புக்களும் அடங்கி யுள்ளன. அரும்பொருள் விரிவுரை மிக அருமையாக இருக்கிறது. பதிப்பின் முகவுரை எழுதிய காழி சிவ-கண்ணுசாமி அவர்கள் ஆசிரியர் வரலாறு முதலிய அரிய கருத்துக்களை வெளியிட்டிருக்கின்ருர். ஏறக் குறைய எழுபது நூல்களிலிருந்து மேற்கோள்கள் கொண்டு உரையை விளக்கினது குறிக்கத்தக்கது. இப்பதிப்பிற்காக ஆதீனத்தார்க்குத் தமிழ் உலகம் மிகுந்த கடமைப்பாடு கொள்ள வேண்டும்.

சிதம்பரம்: ஆதீனத்தின் திருவுள்ளப்படி வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் எழுதியது. சிதம்பரத்தைப் பற் றித் தற்காலத் தமிழன் ஒருவன் அறிந்து கொள்ள வேண்டிய செய்திகள் முழுவதும் இந்நூலில் அடங்கி யுள்ளன. புராணக் கதைகள் மட்டும் அல்ல. கோயிலின் பல பகுதிகள் அவற்றின் வரலாறுகள் அளவிடற்கரிய பெருமைகள் சுற்றுக் கோயில்கள் அவைகளின் பெருமை கள், காலவரிசையாக இத்திருத்தலத்தைத் தரிசித்த பெரி யார்களின் வரலாறுகள், அவர்கள் தரிசித்த விவரங்கள் கோயில்களைப்பற்றி நாளது வரையில் ஏற்பட்டுள்ள பாடல் கள் நூல்கள்முதலிய எல்லாம்விடாமல்எழுதப்பட்டுள்ளன. சிறப்பாக இத்தலத்தில் கண்ட கல்வெட்டுக்களில் கிடைத்த செய்திகள், அவைகளால் நமக்குக்கிடைக்கும் வரலாற்றுப்

Koviloor Acadamy

பகுதிகள் சேர்க்கப்பெற்றுள்ளன. இந்த முறையில் இது வரை வேறெவரும் எழுதினது கிடையாது. நூலுக்கு மிக அழகு தருவன படங்களாகும். ஆலயத்துச் சிற்பங்களிலிருந்தே படங்களைத் தாயாரித்துப் பதிப்பித்தது மிகப் பெருமை அளிக்கும். அட்டைப்படம் மிகச் சிறப்புற்றது. அதுவே திருக்கோவையாரின் முதற்பாடலை விளக்குகிறது. பல பாடல்களை எடுத்துப் பதிப்பித்திருப்பதில் கல்வெட்டுக்களில் கண்ட ஐந்து பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மற்றும் உள்ள அனேக பாடல்களையும் வெளியிட்டிருந்தால் வரலாற்று மாணவர்களுக்குப் பயன் தருவன ஆகும். நூற்றுக்கால்மண்டபம் கட்டுவித்த ஆதித்தனுக்கு நரலோக வீரன் என்ற பெயரும் உண்டு. தென்னாட்டிலே ஆயிரக் கால் மண்டபங்களை விஜயநகர ராயர்களே கட்டினதாக ஐதிகம் உண்டு. ஆனால் அவர்களுக்கு முந்தியே சிதம்பரத்து ஆயிரக்கால் மண்டபம் இருந்ததென்பது சேக்கிழார் புராணத்தில் காண்கிறோம். ஆகவே அவ்வித மண்டபங்களில் சிதம்பர மண்டபம் மிகப்பழமையானது என்றறிய வேண்டும். கோபுரங்களில் காணும் நிருத்த வுருவங்கள் புகழ்பெற்றவை. இக்கோயிலில்தான் நிருத்தங்களின் பெயர்கள் வரையப்பட்டிருக்கின்றன. சமீப காலத்திலும் திருக்கோபுரம் ஒன்றைக் காஞ்சி பச்சைபப்ப முதலியார் கட்டின செய்தி அறியற்பாலது. திருவுருவமும் கோயிலின் கோபுரத்தில் உள்ளது. இவைபோன்ற சில செய்திகளையும் சேர்க்கலாம். மிக்க காருணியத்தோடு இந்நூலை வெளியிட்ட ஆதீனத்தார்க்குத் தமிழுலகம் கடமைப்பாடு உள்ளது.

—சித்தாந்தம், சர்வதாரி௵ பங்குனி௴

Koviloor Acadamy

சிதம்பரம்.

சிதம்பர ஸ்தலத்தின் மகிமையைத் தமிழர் அறிவர். அந்த ஸ்தலத்தைப்பற்றிய சகல விவரங்களும் தெரிந்து கொள்ள தருபுர ஆதீனத்தார் வெளியிட்டுள்ள இந்த புத்தகம் போதும். நன்கு ஆராய்ந்து அவசியமான தகவல்களைத் தொகுத்து தருகிறார் வித்வான் தண்டபாணி தேசிகர். சிதம்பரத்தைபற்றித் தெரிந்துகொள்ளவேண்டிய விவரங்களைக் கோர்வையாக ஒருபுத்தகத்தில்தரும் தருமபுர ஆதீனத்தார், தமிழர் பாராட்டுக்குரியவர்.

நீதிநெறி விளக்கம்.

[ஆசிரியர்—ஸ்ரீமத் குமரகுருபரஸ்வாமிகள்; தொகுத்தவர்—காழி. சிவ கண்ணுசாமி பிள்ளை, பி. ஏ. கிடைக்குமிடம்—தருமபுரம் ஆதீனம், தருமபுரம். மாயவரம்; 418 பக்கங்கள்.]

ஒரு நல்ல உபயோகமான நூல் ஒன்றை மிகச்சிறப்பாக வெளியிட்டுள்ள தருமபுர ஆதீனத்தாரைத் தமிழர் அவசியம் பாராட்டுவர். இதைத் தமிழர் அவசியம் படிக்க வேண்டும்.

—தினமணி கதிர், 12—3—49.

திருக்குறள் கதைகள்.

மகாத்மா காந்தி நினைவுமலர். தருமபுர ஆதீன வெளியீடு எண் 183.

Koviloor Acadamy

அரசாங்கப் பாடத் திட்டப்படி நான்காம் பாரத்திற்குப் பொறுக்கப்பெற்ற குறள்கட்கு எளிய உரையும் இனிய கதையும் அமைந்துள்ள இந்நூலைத் தருமபுர ஆதீன மகா சந்நிதானமவர்கள் ஆணைக்கிணங்க எழுதியவர் சிதம்பரம் வித்துவான் திரு. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள். குறளை விளக்கும் கதைகள் தம் பண்டை இலக்கிய வரலாற்றிலிருந்தும் தமிழ்நாட்டுப் பெரியார் வரலாறுகளிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இக்கதைகள்மூலம் மாணவர் பலவிஷயங்களை அறிந்துகொள்ளலாம். மகாத்மா காந்திநாளன்று வெளியிடப்பட்டுள்ள இந்நூலைப் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்க்குச் சிபார்சுசெய்வது நன்று.

—சுதேசமித்திரன், 14—3—49.

தருமபுர ஆதீனமடம் பண்டாரசந்நிதிகள்

சுவாமிமலை சுவாமிநாதசுவாமிக்குத் தருமபுரம் மடத்தின் அதிபர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நேற்றயதினம் சுவாமிமலைக்கு விஜயம் செய்து ஏராளமான பொருட் செலவில் அபிஷேக ஆராதனைகள்நடத்திவைத்தார்கள்.சமயபுரம், திருவையாறு, திருபுவனம், நல்லூர் முதலிய க்ஷேத்திரங்களுக்கும், ஆதீனகர்த்தர் அவர்கள் விஜயம்செய்து சுவாமிதரிசனம் செய்துகொண்டு இரவில் தருமபுரம் திரும்பினார்கள். ஆதீனத் திருக்கூட்டத் தம்பிரான்களும் ஆதீனம் ஓரியண்டல் காலேஜ், தேவாரப்பாடசாலை மாணவர்கள் பிரசார மோட்டார்வாகனத்தில் மேற்படிஸ்தலங்களுக்குச் சென்று சைவசமயப் பிரசங்கங்கள் செய்தார்கள்.

—சுதேசமித்திரன், 21—3—49.

Koviloor Acadamy

திருவாரூர்ச் செய்திகள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் உத்தரவுப்படி திருவாரூர் பூங்கோயில் சித்தீச்சரத் தக்ஷிணாமூர்த்தி லக்ஷார்ச்சனை 24—2—49 தேதியன்று தொடங்கி, தொடர்ச்சியாக 27நாள் நடைபெற்று 31-3-49 அன்று பூர்த்தியடைந்தது. திருவாரூர் இராஜாங்கக் கட்டளை சித்தாந்த வகுப்பினர் கலந்துகொண்டு மேற்படி வைபவத்தைச் சிறப்பாக நடத்திவைத்தனர்.

—சுதேசமித்திரன், 9—4—49.

நீதிநெறி விளக்கம்

நீதிநெறி விளக்கம் என்னும் நூல் திருக்குறளின் சாரமாக அமைந்துள்ளது என்பது அறிஞர்கொள்கை. இந்நூலை இயற்றியவர் தருமபுர ஆதீன பரம்பரையில் விளங்கிய அருட்கவியாகிய குமரகுருபர சுவாமிகள்; இந்நூலுக்குக் காலந்தோறும் எழுதப்பெற்ற உரைகளுண்டு. இவ்வுரைகளுட் சிறந்ததென்று மதிக்கத்தக்கது மேற்படி ஆதீனத்து 24-ம் குருமூர்த்திகளாய் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆக்ஞைப்படி மேற்படி ஆதீனத்து 54-ம் வெளியீடாக வெளிவந்த உரைப்பிரதியே யெனலாம்.

இப்பொழுது இவ்வெளியீட்டின் இரண்டாம்பதிப்பு மேற்படி ஆதீனத்து 25-ம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிர மணியதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளால்

Koviloor Acadamy

வெளியிடப்பெற்றுள்ளது. பிரதிகள் தெளிவாக அச்சிடப் பெற்றுள்ளன.

சிதம்பரம்

தருமபுர ஆதீனத்து 25-ம் மகாசந்நிதானமாக அமர்ந் துள்ள ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமா சாரிய சுவாமிகளால் சிலமாதங்கட்குமுன் சிதம்பர தரிசனஞ் செய்யச் சென்றமையின் பேறாக, அம்மகாசந்நிதானத்தின் ஆக்ஞைப்படி வெளியிடப்பெற்றதாகும் ‘சிதம்பரம்’ என் னும் இந்நூல்.

சிறந்தசாதனமாகவுள்ள இந்நூலை தருமபுரம் 25-வது சந்நிதானமவர்களின் அநுமதிப்படி திறமையுற எழுதியவர் வித்துவான், ச. தண்டபாணி தேசிகராவர். இத்தேசிகர் எழுதும் நூல்கள் திட்ப நுட்பம் வாய்ந்தன; பிரதிகள் வழக்கம்போலத் தெளிவான அட்சரங்கள் கொண்டு உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு வனப்பு வாய்ப்பக் கட்டப்பெற்றுள்ளன.

திருப்புலியூர்த் திருப்பதிகம்

இதன்கண், குறித்த தலத்தின் வரலாறு, இதற்குரிய (திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடியருளிய) திருப் பதிகம் இத்தேவாரங்கட்கு தருமபுர ஆதீனச் சைவசமயப் பேராசிரியர் திரு. மீ. சுந்தரம் பிள்ளையவர்கள் எழுதிய உரை முதலியன அமைந்துள்ளன. இச் சிறுபிரதி தருமபுர ஆதீனம் 25-வது மகாசந்நிதான மவர்களின் மாதஜன்ம நட்சத்திரத்தின்போது மேற்படி தலத்தில் விசேஷ

Koviloor Acadamy

அபிடேக ஆராதனைநிகழ்ந்தபோது அன்பர்கள்பாராயணஞ் செய்யும்வண்ணம் வழக்கம்போல் வழங்கப்பெற்றது. இதன் வெளியீட்டிலக்கம் 185;

—இந்துசாதனம், சர்வதாரிஹு மாசிமீ 28உ

திருவாரூர்

இந்நூல், திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளப்பாங்கின் படி, மேற்படி ஆதீன வித்துவான் ச. தண்டபாணி தேசிக ரவர்களால் இனிய தமிழ் வசனநடையில் இயற்றப்பெற்றது; தொகுத்துச் சொல்லின் இவ்வாதீனத்தார் சில மாதங் கட்குமுன் இனிது அச்சிட்டு வெளியிட்ட "சிதம்பரம்" என்னும் நூலின் முறையிலேயே இந்நூலும் வெளியிடப் பெற்றுள்ள தென்னலாம். தருமபுர ஆதீனத்தினர் செய்து வரும் அச்சேவை பாராட்டிப் பின்பற்றத்தக்கதாம்; பிரதிகள் உயர்ந்த கடிதத்தில் தெளிவான முறையில் அச் சிட்டு வனப்புவாய்ப்பக் கட்டப்பெற்றுள்ளன. 300 பக்கங் கள் வரை கொண்டன. வெளியீடு எண் 189.

—இந்துசாதனம் 3—5—49.

தருமபுரம் ஆதீனகர்த்தரின் நன்கொடை

தென்னிந்தியாவில் பிரபல சைவஸ்தாபனமாகிய தருமபுரம் மடத்தின் அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மகாத்மா காந்தி ஞாபகார்த்த நிதிக்கு ரூ. 25,001 நன்கொடை

Koviloor Acadamy

அளித்திருக்கிறார். மகாத்மாஜி ஞாபகார்த்த நிதியின் தலைவர் பாபு ராஜேந்திர பிரஸாத் 30—4—49-ந் தேதி தஞ்சைக்கு விஜயம் செய்திருந்தபோது மேற்படி தொகை அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

—சுதேசமித்திரன், 3—5—49.

திருவாரூர்: தருமபுர ஆதீனம்; ஆக்கியோர்: வித்துவான் - ச. தண்டபாணி தேசிகர். தமிழ்த்திருநாள் நினைவு மலராக வெளியிட்டது. பக்கம் 285; அருமையான படங்கள்; தெளிவான பதிப்பு; அழகான கட்டு. ஆதீனப் பிரசுரங்களில் சிறந்தவைகளில் ஒன்று; ஆராய்ச்சி நூல். கோயில் வரலாறுகள், நூல்கள், ஆசிரியரின் அடியார்களின் குறிப்புக்கள், கல்வெட்டு ஆராய்ச்சி, பாடல்களின் தொகுதி, கருத்துரை முதலியன அடங்கியுள்ளன. தமிழுக்கு ஓர் அரிய திருப்பணி. மக்கள் வாசிக்கத் தக்கது.

—சித்தாந்தம். விரோதி ௵ வைகாசி௴

தருமபுரத்தில் உற்சவம்

தருமபுரத்தில், தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஞானபுரீஸ்வரசுவாமியின் திருவிழா மே. 8 அன்று தொடங்கப் பெற்று சிறப்புடன் நடைபெற்று வருகிறது. பிரதி தினமும் சைவசமயப் பிரசங்கங்களும், இன்னிசை சத்கதா காலட்சேபங்களும் நடைபெற்று வருகின்றன. உத்ஸவ காலத்தில் ஆதீனத் தேவார வேதசிவாகம பாடசாலை ஆசிரிய, மாணவர்களால் பாராயணம் நடத்தப் படுகிறது.

—தினத்தூது 13—5—49.

Koviloor Acadamy

தருமபுரத்தில் உற்சவம்

தருமபுரத்தில், தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமியின் திருவிழா 8—5—49 அன்று தொடங்கப்பெற்றுசிறப்புடன் நடைபெற்றுவருகிறது. பிரதினமும் சைவ சமயப் பிரசங்கங்களும் சத்கதா காலட்சேபங்களும் நடைபெற்று வருகின்றன. உத்ஸவ காலத்தில் ஆதீனத் தேவார, வேத சிவாகம பாடசாலை ஆசிரிய, மாணவர்களால் பாராயணம் நடத்தப் படுகிறது.

—பாரத தேவி 13—5—49.

திருக்கண்டியூர்த் திருப்பதிகங்கள்: சம்பந்தரும் அப்பரும் பாடியன. தருமபுர ஆதீன வெளியீடு எண் 186. தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயவரம்.

—சுதேசமித்திரன் 16—5—49

திருவாரூர்.

தமிழ்த்திருநாள் நினைவுமலர்; ஆசிரியர் வித்துவான் ச. தண்டபாணி தேசிகர். பிரசுரம், ஞானசம்பந்தம் பதிப்பகம்: தருபுரம்.

இவ்வாண்டு (16—4—49) திருவாரூரில் நிகழ்ந்த தமிழ்த்திருநாளின்போது (தருமபுர ஆதீன 25-வது மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளப் பாங்கின்படி,) சமுகமளித்த அன்பர்களுக்கு, 'செந்தமிழ் சொக்கர்' நிருமாலியமாக, அளிக்கவேண்டும் என்னும் எண்ணம்பற்றி

Koviloor Acadamy

எழுந்தது இந்நூல். இத்தகைய நூல்கள் வரவேற்கற்பாலன.

—ஈழகேசரி, விரோஞு வைகாசிமீ 23௳

பாடசாலை மாணவர் உல்லாஸப் பிரயாணம்

மாயவரம் நகரசபையின் ஆரம்பப் பள்ளி மாணவர் மாணவிகள் சுமார் 1000 பேர்களுமாக சமீபத்தில் உல்லாசப் பிரயாணமாக தர்மபுரத்திற்கு வந்தனர். இங்குள்ள பல உயர்ந்த விஷயங்களை அவர்கள் கண்டு மகிழ்ந்ததுடன் ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானம் முன்னிலையில் கும்மி, கோலாட்டம் முதலிய இனிய நிகழ்ச்சிகளைச் செய்து காட்டியதுடன் திருவிளையாடற் புராணத்திலிருந்து விறகு விற்ற படலம் பற்றிய கதையைத் திறம்பட நடித்தும் காட்டினர்-மடாலயத்தார், சிறுவர் சிறுமியருக்குத் தின்பண்டம் வழங்கினர்.

தருமபுரம் கூட்டுறவுப் பண்டக சாலை

தருமபுரம் ஆதீனம் கூட்டுறவுப் பண்டகசாலை என்ற பெயருடன் இங்கு நடைபெற்று வரும் பண்டகசாலையில், மக்களின் வாழ்விற்கு அத்யாவசியமான மளிகை, ஜவுளி ஷாப்சாமான்கள் சிறந்தமுறையில் சேகரிக்கப்பட்டுவிற்பனை செய்யப் படுகின்றன. இதன்மூலம், ஷை கிராமவாசிகள் மட்டுமன்றி, அருகிலுள்ள கிராமமக்களும் நல்ல வசதியைப் பெற முடிகிறது. சுமார் 20,000 ரூபாய் பொறுமான பொருள்கள் பிரதி மாதம் இதன் மூலம் விற்பனை செய்யப் படுகிறதாம்.

Koviloor Acadamy

தருமபுரத்தில் கதா காலக்ஷேபம்

தருமபுரம் ஆதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் நடைபெறும் உற்சவத்தை யொட்டிப் பிரதி தினம் சிறந்த அறிஞர்களது பிரசங்கமும், இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. புதன் மாலை மன்னார்குடி கீர்த்தன குலசேகர ஸ்ரீ எஸ் விஜயராகவாசாரியார் திருஞான சம்பந்தர் என்பது பற்றியும் வெள்ளியன்று, திருச்சி வானொலி நிலையத்தைச்சார்ந்த ஸ்ரீ கே. வி. தியாகராஜன் பார்ட்டியார் குமர குருபரர் என்பது பற்றியும், உயர்ந்த முறையில் ஸத்கதாகாலக்ஷேபம் செய்தனர். திங்கள் மாலை ஸ்ரீ எம். கே. தியாகராஜபாகவதரின் இன்னிசையும் புதன் மாலை ஸ்ரீ எம். எம். தண்டபாணிதேசிகரது கச்சேரியும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

—பாரததேவி 18—5—49.

ஸ்ரீமதி சுந்தராம்பாள். ஸ்ரீ தியாகராஜ பாகவதர் தருமபுர ஆதீன வித்வான்களாக அங்கீகாரம்

தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி கோவிலில் நடைபெற்றுவரும் மகோத்ஸவத்தில் 8-ந் திருநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை இன்னிசைக்கச்சேரி செய்வித்த ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாளுக்கு மடத்தின் அதிபர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் 'ஏழிசைவல்லபி' என்ற பட்டம் அளித்து மடத்தின் ஆதீன வித்வானாக அங்கிகரித்து மடத்தின் சார்பாகப் பொன் பதக்கத்தைப் பரிசாக அளித்தார். 9-ம் நாளாகிய நேற்று இன்னிசைக் கச்சேரி செய்வித்த

Koviloor Acadamy

ஸ்ரீ எம்.கே. தியாகராஜ பாகவதருக்கு 'ஏழிசை மன்னர்' என்ற பட்டம் அளிக்கப்பட்டு மடத்தின் ஆதீன வித்வானாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பொன் பதக்கப் பரிசும் அளிக்கப் பட்டது.

—சுதேசமித்திரன், 20—5—49

திருவாரூர்: தருமபுர ஆதீன வெளியீடு எண் 189. ஆசிரியர் வித்வான் ச. தண்டபாணி தேசிகர். தமிழ்த் திருநாள் நினைவுமலராக16—4—49ல் வெளியிடப்பட்டது. மொத்தம் 394-பக்கங்களும் பல அழகிய படங்களும் கொண்டது.

—சுதேசமித்திரன் 23—5—49.

கூட்டுறவு பண்டகசாலை

தருமபுரத்தில் சமீபத்தில் ஆதீனம் கூட்டுறவு பண்டக சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, பொதுமக்களுக்குப் பயன் படும் முறையில் வேலை செய்து வருகிறது. இதில் ஜவுளி, மளிகை ஸ்டேஷனரி சாமான்களும் நியாயமான விலைக்கு பல சுற்றுப்பட்ட கிராமமக்களுக்கும் கிடைத்து வருகிறது. மாதம் சராசரி 20000 பொறுமான சாமான்கள் விற்கப் பட்டு வருவதாகத் தெரிகிறது.

—தினமணி, 30—5—49.

தருமபுரம் ஆதீனஸ்தாபகர் தினம்

சென்ற மே 17. 18. 19-ந் தேதிகளில் தருமபுரம் ஆதீனமடத்தின் முதல்குருவும் ஸ்தாபகருமான குருஞான சம்பந்தரின்தினம் அதிவிமரிசையாககொண்டாடப்பட்டது.

Koviloor Acadamy

பல தமிழ் அறிஞர்களும், வித்துவான்களும் சைவ சமயச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

ஷை தினத்தை ஒட்டித் தற்சமயம் ஆதீனகர்த்தராக இருக்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பண்டார சந்நிதி பட்டினப் பிரவேச ஊர்வலம் அதிவிமரிசையாக நடை பெற்றது.

—தினமணி, 1—6—49

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பண்டாரசந்நிதியின் 4-வது ஆண்டு குருபூஜை நிகழும் விரோதி ஆண்டு வைகாசித்திங்கள் 23-ம் நாள் நடைபெற்றது. அன்று காலை 9-மணிமுதல் மாலை 6-மணிவரை அவ்வாதீனக் கல்விநிலைய இசையாசிரியர், கட்டளைவிசாரணை தம்பிரான்கள், சிறந்த பல புலவர்கள் ஆகியவர்களால் இன்னிசை, குருபக்தி, தமிழிசை முதலிய பல பொருள்கள் பற்றி இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. 'தொண்டர் கீதம்' அரங்கேற்றம் செய்யப்பட்டது. அவ்வாதீனத்துத் தமிழ்ப்பேராசிரியர்களால் பாராட்டுரை மதிப்புரை பகரப்பட்டன. அன்பர்கள் பலருங் குழுமிச் சிறப்பித்தார்கள்.

—யதார்த்தவசனீ 8—6—49.

குருபூஜைத் திருநாள்

தர்மபுர ஆதீனம் காலஞ்சென்ற சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியார் அவர்களின் நான்காவது குருபூஜைத்திருநாள் அதிக விமரிசையாக ஜூன்மீ 5வ

Koviloor Acadamy

கொண்டாடப்பட்டது. தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்து தமிழ்வித்துவான்கள் விஜயம்செய்து சைவசித்தாந்தம் பற்றிச்சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மகா ஜனங்கள் திரளாக விஜயம் செய்திருந்தார்கள்.

மாலையில் ஸ்ரீமதி என். ஸி. வசந்தகோகிலம் கோஷ்டியாரின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரியார் பல சிவனடியார்களுக்கும் பண்டிதர்களுக்கும் சன்மானங்கள் வழங்கினார்.

—தினமணி 10—6—49.

தருமபுர ஆதீனம் வெளியீடு எண் 194. சம்பந்தர் அப்பர் சுந்தரர் பாடிய திருமழபாடித் திருப்பதிகங்கள் :— தலச்சிறப்பு, உரை இவற்றுடன் கூடியது.

—சுதேசமித்திரன் 14—6—49.

தருமபுரத்தில் ஸ்ரீ சண்முக தேசிகர் குருபூஜை

ஸ்ரீமதி என். சி. வசந்தகோகிலத்திற்கு ஆதீன வித்துவான் பட்டம்.

தருமபுர ஆதீனம் 24-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 4-வது ஆண்டு குருபூஜை நேற்றைய தினம் வெகு விமரிசையாக நடைபெற்றது. பல அறிஞர்களாலும் தமிழ்ப் பண்டிதர்களாலும் திருக்கூட்டத் தம்பிரான்களாலும், சொற்பொழிவுகளும்

Koviloor Acadamy

தருமபுர ஆதீனப் பாடசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் திருமுறைப் பாராயணமும் நடைபெற்றன. ஷை அபிஷேகஆராதனைகளும், முற்பகலில் மாகேஸ்வரபூஜையும் நடைபெற்று ஏழைகளுக்கும், பரதேசிகளுக்கும் அன்னம் அளிக்கப்பட்டது. மாலையில் இன்னிசைக் கச்சேரி செய்வித்த ஸ்ரீமதி. என். சி. வசந்தகோகிலத்திற்கு 'கான சூடாமணி' என்ற பட்டம் அளிக்கப்பட்டு, பொன் பதக்கம் பரிசாக அளிக்கப்பட்டது.

—சுதேசமித்திரன், 13—6—40.

திருத்தொண்டர் கீதம்

ஆசிரியர்:- திருவாசகம் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. எ., பி. எல். தருமபுர ஆதீனம் 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நான்காவது குருபூஜை விழா அணிமலராக ஆதீனத்தால் வெளியிடப் பட்டுள்ளது.

—சுதேசமித்திரன், 20—6—49.

திருவாரூர்

எழுதியவர் வித்துவான், ச தண்டபாணி தேசிகர். தருமபுர ஆதீனத்தால் தமிழ்த் திருநாள் நினைவு மலராக வெளியிடப்பட்டது.

இத்தலத்திற்குரிய தேவாரப் பாடல்கள் பண், ராகம், தாளங்களுடன் குறிப்பிட்டு, பொருளுடன் விளக்கப்

Koviloor Acadamy

பட்டுள்ளன. அழகிய காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ள பன்னிரண்டு வர்ணப் படங்கள் இப்புத்தகத்தை அழகு செய்கின்றன. புத்தகம் உயர்ந்த காகிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டுள்ளது.

—பாரததேவி, 21—6—49.

ஸ்ரீ ஞானசம்பந்தருக்கு லட்சார்ச்சனை.

சீகாழியில் சிறப்பாக நடைபெற்றது.

சீர்காழி ஸ்ரீசட்டநாதசுவாமிகோயிலில் ஸ்ரீ திருஞான சம்பந்தருக்கு லட்சார்ச்சனை நடைபெற்று 24—6—49ந் தேதியோடு முடிவடைந்தது. ஸ்ரீ திருஞானசம்பந்தருக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்யப்பட்டு ஆராதனைகளும் விசேஷமாக நடைபெற்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீ சச்சிதானந்தம் பிள்ளை திருமுறை வகுப்பு ஆரம்ப விழாவை நடத்திவைத்தார்.

—தினமணி, 28-6-49.

ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம். C. 500. 14—9—50